ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

# 2024 இல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பரிந்துரைகள்


කාර්යාලය /அலுவலகம்
අංක-14, ආර්.ඒ.ද මෙල් මාවත,
කොළඹ -04.
இல.14,ஆர்.ஏ.த மெல் மாவத்தை,
கொழும்பு - 04.
*No - 14, R.A.De Mel Mawatha*
*Colombo – 04, Sri Lanka.*

*Tel : 011 2505580 / 81/ 82*
*Fax : 011 2505541*
*e-mail : sechrcsl@gmail.com*
*Web : www.hrcsl.lk*

# 2024 இல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பரிந்துரைகள்

10 டிசம்பர் 2024

# அறிமுகம்

1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 27 வருடங்களை பூர்த்தி செய்துள்ளது. இந்த காலகட்டத்தில் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான ஏராளமான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. கூடுதலாக இந்தப் பரிந்துரைகள் இப்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணையதளம் மூலம் பொதுமக்களுக்கு அவர்களின் விழிப்புணர்வுக்காகக் கிடைக்கின்றன.

மனித உரிமைகள் ஆணையம் வழங்கும் பரிந்துரைகள் பொது மக்களின் உரிமை மீறல்கள் குறித்தும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த உதவும். கூடுதலாக பொது அதிகாரிகள் மற்றும் மனித உரிமைகளில் ஆர்வமுள்ள பிற தரப்பினர் இந்த பரிந்துரைகளை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வழிகாட்டியாக பயன்படுத்த முடியும்.

இந்த பரிந்துரைகளை சிங்கள், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிட மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது. முதற்கட்டமாக இந்த ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இந்த பரிந்துரைகளின் தொகுப்பை வெளியிட ஆணையம் திட்மிட்டுள்ளது.

டிசம்பர் 10, 1948 இல் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது 30 உறுப்புகளைக் கொண்டுள்ளது. மற்றும் மனித உரிமைகள் பற்றிய முதன்மை ஆவணமாக செயற்படுகிறது. இந்த உரிமைகள் ஒவ்வொரு நபருக்கும் பிறந்தவுடன் வழங்கப்படும் உரிமைகளின் தொகுப்பை உள்ளடக்கியது. மனித உரிமைகள் பிரிக்க முடியாதவை. அதாவது, எந்த உரிமையும் மற்றொன்றுக்கு இரண்டாம் பட்சம் அல்ல. மேலும் அனைத்து உரிமைகளும் சமமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. மேலும் இந்த உரிமைகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை மற்றும் உலகளாவியவை. அதன்படி இலங்கையின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளான சிந்தனை மற்றும் மனசாட்சிக்கான உரிமை, சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகைக்கு உட்படுத்தப்படாத உரிமை, சட்டத்தின் முன் சம நீதி மற்றும் சமத்துவத்திற்கான உரிமை, தன்னிச்சையாகக் கைது செய்யப்படாமல் இருப்பதற்கான உரிமை, கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை, மற்றும் தனக்கு விருப்பமான எந்தத் தொழிலிலும் ஈடுபடும் உரிமை ஆகியவை மிக முக்கியமானவை.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கைகளினால் ஏற்படும் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படுகின்றன. 2024ஆம் ஆண்டு ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பரிந்துரைகள் இங்கு சேர்க்கப்பட்டுள்ள பரிந்துரைகள் இந்த ஆண்டு ஆணையம் அளித்த பரிந்துரைகிளில் இருந்து தேர்ந்தெடுக்கட்ட சில பரிந்துரைகள் மட்டுமே.

இந்த பரிந்துரைகள் புகார்தாரர் மற்றும் பதிலளித்த தரப்பினரால் வழங்கப்பட்ட சாட்சியங்களை பகுப்பாய்வு செய்த பின்னர் அத்துடன் அனைத்து தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் தரவுகளை மதிப்பாய்வு செய்த பின்னர் வழங்கப்பட்டன.

HRC-HO-2865-21 மற்றும் HRC-HO-2706-21 எண்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட புகார்கள் அதே சம்பவம் தொடர்பாக ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன. மனித உரிமைகள் ஆணையகத்தின் விசாரணையில் M.L டின்கரின் லசந்த என அழைக்கப்படும் லசந்த களுத்துரை மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இழக்காகி உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்தும் போது காவல்துரை அதிகாரிகள் தற்காப்பு உரிமையை பயன்படுத்தியதாக கூறப்பட்டாலும் இந்தக் கோரிக்கைகளை ஏற்க முடியாது என்று ஆணையத்தின் விசாரணையில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட பிறகு பின்பற்ற வேண்டி நடைமுறைகள் கடுமையாக மீறப்பட்டு அரசியல் அமைப்பின் 12(10)

வது விதியை மீறுவதாக ஆணையம் முடிவு செய்தது. இதன் விளைவாக பொறுப்பான தரப்பினர் இழப்பீடு வழங்க வேண்டுமென்று சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஆணையம் பரிந்துரைத்தது.

HRC-Ho-2603-23, HRC-2153-23 மற்றும் HRC-2154-23 ஆகிய எண்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட புகார்கள் அனைத்தும் நடாசா எதிரிசூரியவை சட்ட விரோதமாக கைது செய்யப்படுவது தொடர்பானவை. பாதிக்கப்பட்ட ஒரு கலைஞர் ஏப்ரல் 01,2023 அன்று ''மோதாபிமானி'' என்ற தலைப்பில் நாடக நிகழ்ச்சியை நடத்தினர் பின்னர் அது YouTube சனலில் இது ஒளிபரப்பப்பட்டது. பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சியின் போது வெளியிடப்பட்ட கருத்தின் காரணமாக சமூக வளைத்தளங்களில் பின்னடைவு ஏற்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அவர் Youtuibe இல் இருந்து நிகழ்ச்சியை நீக்கிவிட்டு மண்ணிப்பு கேட்டார். சூழ்நிலையால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக அவள் மனநல ஓய்வுக்காக நாட்டை விட்டு வெளியேர திட்டமிட்டால் எனினும் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு குற்றப் புலனயாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார். மீறல்களை மேற்கோள் காட்டி 2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் விதிகளின் கீழ் அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த குற்றச் சாட்டின் விளைவாக மஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் பிணை மறுக்கப்பட்டது. மற்றும் உயர் நீதிமன்றத்தை நட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மனித உரிமைகள் ஆணையம் நடாத்திய விரிவான விசாரணைகளின் முடிவுகளின் படி 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் இந்த நபருக்கு எதிராக குற்றம் சாட்டுவதற்கு போதிய காரணங்கள் இல்லையெனத் தெரிய வந்துள்ளது. மேலும் இந்த வழக்கை தொடர முடியாது எனவும் சட்ட மா அதிபர் நீதி மன்றத்திற்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமைளை உரிது செய்யும் அரசியலமைப்பின் 14 (1) வது பிரிவின் விதிகள் புகார்தாரர் தொடர்பாக மீறப்பட்டுள்ளதாக மீறப்பட்டுள்ளதாக ஆணையம் முடிவு செய்துள்ளது. அதன்படி பொறுப்பான தரப்பினருக்கு இழப்பீடு வழங்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சம்மந்தப்பட்ட சட்ட அம்சங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சிகளை ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

HRC-904-20/1 (vi) இந்த புகார் ஆணையதத்தின் அவசர தொலைபேசி எண் மூலம் பதிவு செய்யப்பட்டது. இது சிறார் குற்றவாளிகள் பயிற்சி நிறுவனம் மற்றும் அதன் வெளிப்புற வேளை முகாமுக்கு சென்ற மனித உரிமைகள் ஆணையக அதிகாரிகள் குழுவால் செய்யப்பட்ட விசாரணைக்கு வழிவகுத்தது. விசாரணையின் பொது சித்திரவதைக்கு ஆளானதாக தெரிவித்த 06 குழந்தைகளிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது. இதை அடுத்து அவர்கள் மறுத்தவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதில் குழந்தைகள் சிறை அதிகாரிகளால் உடல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. அரசியல் அமைப்பின் 11 மற்றும் 12 (1) பிரிவுகள் மீறப்பட்டுள்ளதாக ஆணையகம் முடிவு செய்து பொறுப்பான அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க பரிந்துரைத்தது.

HRC-4835-23 இந்த வழக்கில் புகார் அபெர்டீன் சிறு நீர் மின் திட்டத்திற்காக ஒரு புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆலையின் உத்தேச கட்டுமானம் சம்மந்தப்பட்டது. முறைப்பாடு செய்தவர் ஏறக்குறைய 13 நிறுவனங்களிடமிருந்து அனுமதிகளை பெற்று அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தார். திட்ட வர்த்தமானி மற்றும் நிலையான எரிகச்தி அதிகார சபையுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது. எனினும் மத்திய மாகாண சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் பின்னர் இத்திட்டத்தை சட்டவிரோதமான முறையில் இடைநிறுத்தியதால் முறைப்பாட்டாளரின் உரிமைகள் மீறப்பட்டன. ஒரு விரிவான விசாரணையைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணையம் 2010 இல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கான அரசாங்கத்தின் முடிவு மற்றும் ஏறக்குறைய ஒரு தசாப்தத்தில் புகார் தாரரின் முதலீடு பின்னர் ஒப்புதல் திரும்பப் பெறப்பட்டதன் மூலம் நிராகிக்கட்டது. இந்த நடவடிக்கை 1978 அரசியல் அமைப்பின் 12 (1) மற்றும் 14 (உ) பிரிவுகளின் கீழ் புகார் தாரரின் அடிப்படை உரிமைகளை மீறியது. பொறுப்பான

தரப்பினருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மற்றும் புகார் தாரரின் நிதி இழப்புகளுக்கு போதுமான இழப்பீடு வழங்க ஆணையம் பரிந்துரைத்தது.

HRC/KI/12/21 இந்த முறைப்பாட்டில் மேலும் 2 ஊடகவியலாளர்களுடன் முறைப்பாடு செய்தவர் இரணைதீவிற்கு செல்வதை இலங்கை கடற்படையினர் தடுத்துள்ளனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணையின் போது இரணைதீவிற்குள் நுழைவதை தடைசெய்யும் சட்ட விதிமுறைகள் எதுவும் இல்லையென்பது உறுதி செய்யப்பட்டது. இலங்கை அரசியலமைப்பின் உறுப்பரை 14 (ஏ) இன் கீழ் ஒவ்வொரு தனிநபருக்கும் இலங்கைக்குள் எந்த இடத்திலும் நடமாடும் சுதந்திரம் மற்றும் வசிக்கும் சுதந்திரம் உள்ளது. விதிமுறைகளை அனுமதிக்கும் பிரிவு 15(4) இன் கீழ் இந்த உரிமையை கட்டுப்படுத்த முடியும் என்றாலும், இந்த வழக்கில் அத்தகைய சட்ட கட்டமைப்பு எதுவும் இல்லை. எனவே, எந்தவொரு சட்ட பூர்வமான அடிப்படையும் இன்றி முறைப்பாடு செய்தவருக்கு தீவிற்குள் நுழைய அனுமதி மறுத்ததன் மூலம் முறைப்பாட்டாளரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதான ஆணைக்குழு தெரிவித்துள்ளது. புகார்தாரரின் உரிமைகளை மீட்டெடுக்க ஆணையம் பரிந்துரைத்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஆராய்ந்து அத்தகைய பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் உரிமைகள் மீறப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொறுப்புள்ள தரப்பினரை பொறுப்புக் கூற வைப்பதன் மூலமும் மனித உரிமைகளை மதிக்கும் சமூகத்தை வளர்ப்பதன் மூலமும் எதிர்கால மீறல்களை தடுக்க ஆணையம் முயல்கிறது. நீதி மற்றும் மனித கண்ணியத்தை நிலை நிறுத்துவதற்கான அர்ப்பணிப்புடன் இந்த முற்சிகளை வழிநடத்தும் ஆணையத்தின் குழு மற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது.

<u>**பொருளடக்கம்**</u>

பக்க எண்

1) HRC/2865/21, HRC/2706/21 ……………………………...………………. 06

2) HRC/2603/23,HRC/2153/23,HRC/2154/23(vi)……………………………. 17

3) HRC/904/20 (iv)…………………………......…………..……………….. 33

4) HRC/4835/23 ……………………………………………………….….. 67

5) HRC/KI/015/21 ……………………………………………..……….. 75

**<u>பரிந்துரை இலக்கம். 01</u>**

| | | |
|---|---|---|
| முறைப்பாட்டாளர்கள் | : | 01. திரு. எஸ்.ஆரியதாச,<br>இல. 303/05, ஶ்ரீ விஜய மாவத்தை, பொகுந்தர. |
| | | 02. திருமதி எம்.எல்.எஸ்.வீ.சாமலீ<br>இல. 442, பண்டாரநாயக்கபுர, கெக்குணதுர |
| பாதிக்கப்பட்ட நபர் | : | 01. திரு. எம்.எல்.லசந்த |
| பிரதிவாதிகள் | : | 01. த.பொ.ப திரு. சனத்,<br>பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, களுத்துறை. |
| | | 02. உ.பொ.ப திரு. சில்வா<br>பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, களுத்துறை. |
| | | 03. உ.பொ.ப திரு. நுவன்<br>பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, களுத்துறை |
| | | 04. பொ.சா. 37109 திரு. ரத்னாயக்க,<br>பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, களுத்துறை |
| | | 05. பொ.கா. 36218 திரு.கித்சிறி<br>பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, களுத்துறை |
| | | 06. பொ.கா. 79431 திரு. பிரியந்த,<br>பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, களுத்துறை |
| | | 07. பொ.சா. 60015 தம்பவிட்டகே தொன் திமுத் இந்திக்க<br>பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, களுத்துறை |
| | | 08. பொ.கா. 91332 திரு. சத்துர பிரியசாத்<br>பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, களுத்துறை |
| | | 09. சி.பொ.அ, திரு. கபில பிரேமதாச<br>சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம்,<br>களுத்துறை |
| | | 10. பொலீஸ் மா அதிபர்<br>இலங்கை பொலீஸ் |

முறைப்பாட்டு இலக்கம் : **HRC/HO/2865/21, HRC/HO/2706/21**

**முறைப்பாட்டின் விடயங்களை முன்வைத்தல்**

ஹேவா லுனுவிலகே லசந்த அல்லது டிங்கர் லசந்த என்பவர் களுத்துறை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரை ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதாகக் கூறி கொண்டுசென்று கொலை செய்வதற்கு தயாராகுவதாகவும் 2021.11.25 ஆம் திகதி மின்னஞ்சல் ஊடாகவும் தொலைபேசி ஊடாகவும் சட்டத்தரணி திரு. சஞ்சய ஆரியதாச முறைப்பாடு செய்துள்ளார்.

**மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீடு**

மேற்படி முறைப்பாட்டின் பிரகாரம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவினால் 2021/11/25 ஆம் திகதி பி.ப. 10.27க்கு ஒரு தொலைபேசி அழைப்பொன்றின் ஊடாக இந்த முறைப்பாடு தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், 2021/11/25 ஆம் திகதி துரித அழைப்புக்குப் பொறுப்பான அலுவலர் இரவு 11.07 மணியளவில் களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் இந்த கைது தொடர்பாக வினவியுள்ளதுடன், அதன்போது அவ்வாறான கைதொன்று மேற்கொள்ளப்படவில்லையென உ.பொ.ப. நிஹால் கூறியுள்ளார்.

அதன் பின்னர் 2021/11/26 ஆம் திகதி லுனுவிலகே லசந்த என்பவரை ஆயுதங்களைக் கண்டறிவதற்காக மேலதிக விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அதிகாரிகளுக்கு துப்பாக்கிச் சுடுவதற்கு முயற்சித்தபோது அதனை தடுப்பதற்கு முற்பட்ட வேளையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியானது. மேலும், ஆணைக்குழுவின் துரித தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் மேலதிக விடயங்களாக, எச்.ஜீ.லசந்தவின் மனைவியும் மகளும் அதுவரை சட்டவிரோதமாக பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மேற்கொள்ளப்பட்ட அறிவிப்பின் பிரகாரம் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழுவொன்று பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குச் சென்று விசாரணையை மேற்கொண்டதுடன் அங்கு முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கமைய பாதிக்கப்பட்டவரின் மனைவியும் மகளும் 2021/11/26 ஆம் திகதி காலை பொலீஸ் நிலையத்திற்கு வந்துவிட்டுச் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க அவர்களுடைய வீடு அமைந்துள்ள கெக்கனதுர பிரதேசத்திற்கு மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் புலனாய்வு அதிகாரிகளை அனுப்பி குறித்த விடயம் தொடர்பாக கண்டறிந்ததாகவும், பாதிக்கப்பட்டவரின் மனைவியும் மகளும் அங்கு வரவில்லையென புலனாய்வுக் குழுவுக்கு உறவினர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புலனாய்வுக்குழு இந்த சந்தேக நபர் மரணித்த இடம் தொடர்பான களச் சோதனையையும் மேற்கொண்டது.

2021.11.26 பாதிக்கப்பட்டவரின் மனைவி மற்றும் பிள்ளை தொடர்பாக எந்த செய்தியும் இல்லாத நிலையில், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸ் மா அதிபருக்கு ஆணைக்குழுவினால் எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**பிரதிவாதிகளின் கருத்துத் தெரிவிப்பு**

அமில பிரசங்க என்பவரை சுட்டுக் கொன்ற பிரதான சந்தேக நபரான லுனுவிலகே லசந்த அல்லது டிங்கர் லசந்த என்பவர் களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனாப்பிட்டிய பிரதேசத்தில் பதுங்கி இருப்பதாக 2021/11/25 ஆம் திகதி பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் இணைக்கப்பட்டு கடமையாற்றும் தலைமை பொலீஸ் பரிசோதகர் திரு. சனத் என்பவருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கிணங்க களுத்துறை பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கிணங்க த.பொ.ப. திரு. சனத், பொ.ப. சுஜித் சில்வா, உ.பொ.ப.நுவன்,

பொ.சா. 37109 ரத்னாயக்க, பொ.சா. 44817 குணவர்தன, பொ.சா. 60015 இந்திக்க, பொ.கா. 79431 பிரியந்த, பொ.கா. 91332 பிரியசாத் ஆகியோரைக் கொண்ட குழு பொ.கா.சாரதி 36218 கித்சிறி செலுத்திய WP NE 0826 ஆம் இலக்க வாகனங்த்தில் குறித்த தகவல்களை சோதனையிடுவதற்காக 2021/11/25 ஆம் திகதி பி.ப. 1.00 மணியளவில் வெளியேறியதாக பிரதிவாதிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த அதிகாரிகள் குழு தெல்தூவ முகவரியில் உள்ள வீட்டை அடைந்தவுடன், அந்த வீட்டின் முற்றத்தில் இருந்த ஒருவர் வீட்டின் பின்புறம் உள்ள வீதியால் ஓடியதாகவும், அதிகாரிகள் குழுவும் அவரை துரத்தியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சந்தர்ப்பத்தில் பொ.சா. 60015 இந்திக்க மற்றும் பொ.கா. 91332 பிரியசாத் ஆகிய உத்தியோகத்தர்கள் அவரைக் கைது செய்ய முயன்றபோது, அந்த நபர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்ததால், அந்த அதிகாரிகளுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதாகவும், 14.35 மணிக்கு அவரைக் கைது செய்ததாகவும், பின்னர் அந்த சந்தேக நபரின் வாக்குமூலத்தைக் குறித்துக்கொள்ளும்போது மாத்தறை பிரிவில் அமில பிரசங்க என்பவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவத்தின் சந்தேக நபரான லுனுவிலகே லசந்த என்பவர் எனவும் உறுதியானதாகவும், பின்னர் அந்த மனிதக் கொலையை மேற்கொண்டமைக்காக பயன்படுத்திய கைத்துப்பாக்கியை கண்டுபிடிப்பதற்காக தியகம கல்பாத்த முகவரிக்கு சென்றதாகவும், அதன்போது சந்தேக நபர் தற்காலிகமாக வசித்த வீட்டிற்குச் செல்லுகின்ற பாதைக்கருகில் 2021/11/26 ஆம் திகதி சுமார் 04.20 மணிக்கு சந்தேக நபர் பாதையருகில் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை அவசரமாக எடுத்து பொ.கா. 79431 பிரியந்த எனும் உத்தியோகத்தர் மீது சுடுவதற்கு முயற்சித்தபோது தனிப்பட்ட பாதுகாப்பிற்கான உரிமைக்காக அந்த உத்தியோகத்தர் T 56 துப்பாக்கியின் ஒரு தோட்டாவால் சந்தேக நபரைச் சுட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூடு காரணமாக சந்தேக நபர் காயமடைந்து நாகொட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், அவர் 05.15 மணியளவில் உயிரிழந்துள்ளதாக வைத்தியர் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முறைப்பாட்டாளரின் வாக்குமூலம் - திருமதி. சம்பா சாமலி**

இறப்பெய்தியுள்ள நபர் தனது கணவரெனவும், கடந்த காலங்களில் பல்வேறு பிரதேசங்களில் மறைந்து வாழ்ந்ததாகவும், களுத்துறை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ஒழிந்து வாழ்ந்ததுடன் அதற்கு முன்னர் மாத்தறை பொலிஸ், கெக்கனதுர பொலிஸ் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் தன்னை பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று தனது கணவர் தொடர்பாகவும் பணம் சம்பந்தமாகவும் வினவியதாக தெரிவிக்கின்றார். பின்னர் தன்னை குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு வருகை தருமாறு அறிவித்ததாகவும் இதனிடையே தனது கணவர் மற்றும் பிள்ளையுடன் களுத்துறை பிரதேசத்திற்கு வந்து மூன்று வாடகை வீடுகளில் தங்கியிருந்ததாகவும், 2021.11.25 ஆம் திகதி லசந்தவின் நண்பரொருவர் அவருடன் கதைத்து லசந்த இருக்கும் இடத்திற்கு பொலிஸார் வருவதாக கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார். அந்த சந்தர்ப்பத்தில் ஆடைகள் மற்றும் 26 இலட்சம் பணத்துடன் அந்த வீட்டிலிருந்து மொரண்துடுவ என்னும் இடத்திலுள்ள வீட்டிற்கு மு.ப. 10.00 மணியளவில் சென்றதாகவும், பின்னர் 15 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மொரன்துடுவ வீட்டிற்கு வந்ததாகவும் அந்த சந்தர்ப்பத்தில் லசந்த வீட்டிலிருந்து ஓடியதாகவும் தானும் மகளும் கட்டிலுக்கு கீழ் ஒழிந்திருந்ததாகவும் மு.ப. 11.00 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் மற்றும் தாக்குகின்றற சத்தம் கேட்டதாகவும் பின்னர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தன்னை கண்டுப்பிடித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் லசந்தவின் தொலைபேசி, அடையாள அட்டை ஆகியவற்றை கொண்டு சென்றதாகவும் அந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் களுத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவில் பணியாற்றுபவர்கள் என பின்னர் அறிந்து கொண்டதாகவும், தன்னை மற்றும் தனது மகளை வீட்டிலிருந்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று 08.30 மணி வரை தடுத்து வைத்து பின்னர் செல்லுமாறு கூறியதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார். தான் லசந்தவை காண்பிக்குமாறு கூறினாலும் சிறிது நேரத்தில் அழைத்து வருவதாக கூறினாலும் அழைத்து வரவில்லையெனவும், பின்னர் வீட்டிற்கு வந்து அடுத்து நாள் காலையிலேயே பொலிஸ் நிலையத்திற்குச் சென்றதாகவும், அப்போதும் லசந்தவை காண்பிக்கவில்லையெனவும், பின்னல்

தான் அம்பலாங்கொடை வீட்டிற்கு திரும்பிவந்ததாகவும், தனது கணவன் இறந்துள்ளதாக இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக அறிந்து கொண்டதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய ஆணைக்குழுவினால் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் அழைத்து வாக்குமூலங்கள் குறித்துக் கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 01. | த.பொ.ப திரு. சனத் | - | 2021.12.02 |
| 02. | பொ.ப. திரு. சுஜித் சில்வா | - | 2021.12.07 |
| 03. | உ.பொ.ப. திரு. நுவன் | - | 2021.12.02 |
| 04. | பொ.சா 37109 திரு. ரத்நாயக்க | - | 2021.12.07 |
| 05. | பொ.கா. 36218 திரு. கித்சிறி | - | 2021.12.02 |
| 06. | பொ.கா. 79431 திரு. பிரியந்த | - | 2021.12.02 |
| 07. | பொ.சா 60015 தம்பவிட்டகே தொன் திமுத் இந்திக்க | - | 2021.12.29 |
| 08. | பொ.சா 44817 குணவர்தன | - | 2021.12.21 |
| 09. | சி.பொ.அ. திரு. கப்பில பிரேமதாச | - | 2021.12.23 |
| 10. | பொலிஸ் மா அதிபர் - இலங்கை பொலிஸ் | - | 2021.12.02 |
| 11. | உ.பொ.ப. இந்திக்க | - | 2021.12.21 |

**<u>அவதானிப்புக்கள்</u>**

இறப்பெய்தியுள்ள பாதிக்கப்பட்ட எம்.எல். லசந்த என்பவரை கைது செய்தல் தொடர்பாக கவனத்தை செலுத்தும்போது முறைப்பாட்டாளரான பாதிக்கப்பட்டவரின் மனைவி, தனது கணவர் மறைந்திருப்பதற்காக களுத்துறை பிரதேசத்திற்கு வந்ததாகவும் 2021.11.25 ஆம் திகதி காலை தனது கணவரை கைது செய்வதற்கு பொலிசார் வருவதாகவும் நண்பரொருவர் தனது கணவருக்கு அறிவித்ததன் அடிப்படையில் வேறொரு வீட்டிற்குச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். 01 முதல் 07 வரை மேலே குறிப்பிட்டுள்ள திகதிகளில் பிரதிவாதிகளால் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களில், தனிப்பட்ட உளவாளி (வேவு பார்ப்பவன்) ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலொன்றான அமில பிரசங்க என்பவரை சுட்டுக்கொலை செய்த சந்தேக நபர் களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவிலுள்ள வீடொன்றில் மறைந்திருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இறப்பெய்தியுள்ள பாதிக்கப்பட்டவரான எம்.எல். லசந்த என்பவரை கைது செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு இணங்க இரு தரப்புக்களினதும் வாக்குமூலங்களின் அடிப்படையில் இந்த சந்தேக நபரை கைது செய்வதற்கு நியாயமான காரணம் நிலவியதாக அவதானிக்கப்படுகின்றது.

பிரதிவாதிகளின் வாக்குமூலங்களுக்கமைய காலை சுமார் 08.00 மணியளவில் தனிப்பட்ட உளவாளியிலிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பகல் 01.00 மணியளவில் செயற்பட்டதாக கவனத்தில் கொள்ளப்படுகின்றது. பொலிசாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கிணங்க கைது செய்ய செல்வதற்கு தயாராதல் தொடர்பாக சந்தேக நபருக்கு அறிந்து கொள்ளக் கிடைத்ததாக முறைப்பாட்டுத் தரப்பின் வாக்குமூலத்திற்கிணங்க தெளிவாகின்றது. அதற்கமைய பொலிஸ் நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் இரகசிய தன்மையை பாதுகாப்பதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அதன் உயர் அதிகாரிகளுக்கு முடியாமை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இங்கு தனது கவனத்தை செலுத்துகின்றது.

பாதிக்கப்பட்ட எம்.எல். லசந்த என்பவரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லாமல் பாதுகாப்பான மற்றும் திறந்த இடமொன்றான களுத்துறை வீதியில் காணப்படும் நாரா நிறுவனத்திற்கு அருகில் காணப்படும் கட்டு (Bund) ஒன்று காணப்படும் பகுதிக்கு மேலதிக விசாரணைக்கு அழைத்து சென்றதாக 01 முதல் 08 வரையான பிரதிவாதிகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் அளித்த வாக்குமூலங்கள் ஊடாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பிரதிவாதி தரப்புக்கு அமைய 2021.11.25 ஆம் திகதி மாலை 15.35 முதல் அடுத்த நாள் காலை 02.10 மணிவரை பாதிக்கப்பட்டவரிடம் மேலே குறிப்பிடப்பட்ட இடத்தில் விசாரணை மேற்கொண்டதாகவும் வாக்குமூலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பேதாது சந்தேக நபர் மனித கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புக்கள் போன்ற பல குற்றங்களை மேற்கொண்டுள்ளதாகவும் வாத்துவை பிரதேசத்தில் வர்த்தகரொருவரை கொலை செய்வதற்கான பணியை பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் விடயங்கள் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த விசாரணைகளின் போது பாதிக்கப்பட்ட நபர் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பகல் உணவை பி.ப. 5.00 மணிக்கும் இரவு உணவை அடுத்த நாள் அதாவது, 2021.11.26 ஆம் திகதி மு.ப. 2.00 மணிக்கும் பெற்றுக்கொண்டதாக விடயங்கள் முன்வைக்கப்பட்டதாக 01 முதல் 08 வரையான அனைத்து பிரதிவாதிகளின் வாக்குமூலங்கள் மற்றும் சாட்சிகளாக வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட உ.பொ.ப இந்திக்க ஆகிய அலுவலரின் வாக்குமூலத்திற்கு இணங்க அவதானிக்கப்படுகின்றது.

பிரேத பரிசோதனை அறிக்கை மீது கவனத்தை செலுத்தும்போது பாதிக்கப்பட்டவரின் இரைப்பையில் எந்தவித உணவும் இருக்கவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனாலும் 01 முதல் 08 வரையான பிரதிவாதிகளின் வாக்குமூலங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவரின் பிரேத பரிசோதனை அறிக்கைக்கிணங்க பாதிக்கப்பட்ட நபர் இரவு உணவை சாப்பிட்டு ஒன்றரை மணித்தியாலங்களுக்குள் மரணித்துள்ளார். மேலும் உணவு சமிபாடைவதற்கு குறைந்தது 6 மணித்தியாலங்கள் எடுப்பதனால் இரைப்பையில் எந்தவிதமான உணவும் இருக்கவில்லையென்பது கேள்விக்குறியாகும். அதற்கிணங்க பிரதிவாதி தரப்பு பாதிக்கப்பட்டவர் கைது செய்யப்பட்டிருக்கும்போது உணவு வழங்கியதாக கூறிய விடயம் உறுதிசெய்யப்படவில்லையென்பதோடு, கைது செய்யப்பட்டிருப்பவர்களின் அடிப்படை தேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்ற விடயம் அவதானிக்கப்படுகின்றது.

அத்தோடு, பிரதிவாதிகள் முறைப்பாட்டாளரை கைது செய்தலுடன் தொடர்பாக விடயங்களை முன்வைக்கும்போது பல்வேறு முரண்பாடுகள் நிலவுவதாக அவர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குமூலங்கள் மீது கவனத்தைச் செலுத்தும்போது அவதானிக்க முடியுமாகவிருக்கின்றது.
விசாரணை மற்றும் மேலதிக விசாரணைக்காக அழைத்துச் செல்லும்போது 05 ஆம் பிரதிவாதி, ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதற்காக வீட்டிற்கு அருகில் செல்லும்போது கைகளை பின்புறமாக விலங்கிடப்பட்டிருந்ததை முன்புறமாக விலங்கிடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் 05 ஆவது பிரதிவாதி தவிர 01 முதல் 08 வரையான ஏனைய பிரதிவாதிகள், ஆரம்பத்திலிருந்தே இந்த பாதிக்கப்பட்டவருக்கு கைகளை முன்புறமாக விலங்கிடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளனர். அதற்கிணங்க விலங்கிடல் தொடர்பாகவும் ஒன்றுஒன்று முரண்பட்ட வாக்குமூலங்களை பிரதிவாதிகள் அளித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

மேலும், பிரதிவாதிகள் ஆணைக்குழு முன்நிலையில் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் தகவல்கள் அவர்கள் வெளியேறி செல்லும்போது பதிவேட்டில் இட்ட குறிப்புக்களில் முரண்பாடுகளை இனங்கண்டுக் கொள்ள முடியும். 02 ஆம் பிரதிவாதி ஆணைக்குழு முன்னிலையில், ''நான் கண்டேன்'' அவருடைய இடது புறமாக சென்று ஒரேயடியாக குனிந்து ஏதோவொன்றை அவர் எடுத்ததையும் மீண்டும் குனிந்து எழும்பும்போது இரண்டு துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் கேட்டது. அத்தோடு அவருடைய பின்புறமாக பிரியந்த இருந்தார். பிரியந்தவின் கையிலிருந்த துப்பாக்கியினால் சந்தேக நபரை சுட்டார். அந்த சமயம் சந்தேக நபர் மேல்நோக்கியவாறு கீழே விழுந்தார்'' என குறிப்பிட்டுள்ளார். 02 ஆவது பிரதிவாதி 2021.11.26 ஆம் திகதி 18.35 மணிக்கு GCIB 127/81 இல் இட்டுள்ள வெளிச்செல்லல் குறிப்புக்கமைய ''ஒரேயடியாக சந்தேக நபரின் தோரணை மாற்றமடைந்து அவர் பயணித்த வீதியில் இடதுபுறமாக விழுவதனைக் கண்டேன். அத்தோடு பொலிஸ் கான்ஸ்டபில் பிரியந்த குழப்பமடைந்து ஒன்று அல்லது இரண்டு அடிகள் பின்நோக்கி வந்ததுடன் பிரியந்தவை நோக்கி கைத்துப்பாக்கியினால் சுட்டவாறு எழும்புவதனை நான் கண்டேன். அவ்வேளை நானும் கீழ் நோக்கி குனியும்போது

துரிதமாக செயற்பட்ட பிரியந்த அவருடைய கையிலிருந்த ஆயுதத்தினால் தாக்கினார். அப்போது சந்தேக நபர் மேல்நோக்கியவாறு கீழே விழுந்தார்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

புலனாய்வின்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விசாரிக்கையில் மனித கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புக்களைப் போன்றே வாத்துவை பிரதேசத்தில் வர்த்தகரொருவரை கொலை செய்வதற்கான பணியைப் பெற்றுக்கொண்டதாக விடயங்கள் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டதாக 01–08 வரையான பிரதிவாதிகள் ஆணைக்குழுவுக்கு அளித்த வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, சன்ஷயின் சுந்தா கொலைக்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கைத்துப்பாக்கியை மறைத்து வைத்துள்ள இடம் தொடர்பாக விசாரிக்கும்போது சந்தேகநபர் அது பற்றி தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க விசாரணையின்போது அனைத்து விடயங்களையும் வெளிப்படுத்திக் கொள்ளல், ஆயுதங்களை மறைத்து வைத்துள்ள இடங்கள் பற்றி அந்த சந்தர்ப்பத்திலேயே வெளியிட்டமை ஆகிய விடயங்களைக் கவனத்தில் கொள்ளும்போது உண்மையிலேயே அவ்வாறான வாக்குமூலமொன்றை பாதிக்கப்பட்ட நபர் அளித்துள்ளாரா என்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில், சந்தேக நபர் பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து மறைந்து வாழ்வதற்கு முயற்சித்ததாக முறைப்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளமையாகும். எவ்வாறாயினும் 01 முதல் 08 வரையான பிரதிவாதிகள் அளித்துள்ள வாக்குமூலங்களுக்கு இணங்க பாதிக்கப்பட்ட நபர் தான் இருந்த வீட்டின் குசன் கதிரைக்கு கீழ் ஆயதத்தை மறைத்து வைத்திருந்ததாக கூறும் இடத்திற்கு அந்த மறைத்து வைத்திருந்த ஆயுதத்தை பரீட்சிப்பதற்கு மு.ப. 02.10 மணிக்கு வெளியேறிச் சென்றதாக குழுவின் அனைத்து உத்தியோகத்தர்களும் தெரிவித்துள்ளனர்.

இங்கு பிரதிவாதி தரப்பு பாதிக்கப்பட்ட நபர் ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்திற்குச் செல்லும் கொன்க்ரீட் வீதியில் வாகனமொன்றை திருப்புவதற்கு கூறியமையின் அடிப்படையில் வாகனத்தை பின்நோக்கிச் செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளனர். அத்தோடு, பாதிக்கப்பட்ட நபர் இருந்த வீட்டின் குஷன் கதிரைக்கு கீழ் கைத்துப்பாக்கியொன்றை மறைத்து வைத்திருந்ததாக தெரிவித்ததன் அடிப்படையில் எந்தவிதமான கண்டறிதலும் இன்றி பாதிக்கப்பட்ட நபருடன் அந்த இடத்திற்கு இரவில் சென்றதாக வாக்குமூலங்களுக்கமைய அவதானிக்கப்படுகின்றது.
இந்த பாதிக்கப்பட்ட சந்தேக நபரை கைது செய்வதற்கு சென்ற சந்தர்ப்பத்திலிருந்து புலனாய்வு நிறைவு செய்யப்படும் வரை இந்த பிரதிவாதி தரப்புக்களுக்கு மேலதிகமாக ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்றும் பல்வேறு வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, உணவு பானங்களை வழங்குவதற்கு மற்றும் விசாரணை நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது பாதுகாப்புக்காக அந்த இடத்திலிருந்து தூரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக பிரதிவாதி தரப்புக்களின் வாக்குமூலங்களுக்கமைய அவதானிக்கப்படுகின்றது.

அத்தோடு பாதிக்கப்பட்ட நபர் தான் இருந்த வீட்டில் குஷன் கதிரைக்கு கீழ் ஆயுதத்தை மறைத்து வைத்திருந்ததாக விசாரணையின் போது வழங்கிய தகவலை சோதனையிடுவதற்கு அந்த சந்தர்ப்பத்தில் பிரதிவாதி தரப்பினால் குறிப்பிடப்பட்ட மேலதிக குழுவை அனுப்பி அதன் உண்மைத் தன்மையை பரீட்சிப்பதற்கான வாய்ப்பு நிலவியதாக ஆணைக்குழு கருதுகின்றது.

மேலும், அன்றை தினம் சுற்றி வளைப்புக்காக உத்தியோகத்தர்களை ஏற்றிச் சென்ற ஜீப் வண்டியான NE 0826 இன் ஓட்டக் குறிப்பேட்டை (Running Chart) பரீட்சிக்கும்போது 2021.11.23 ஆம் திகதிக்கு பின்னர் 2021.11.25 ஆம் திகதி ஓட்டக் குறிப்புக்கள் குறிப்பிடப்பட்டிருப்பினும் அதற்கு இடைப்பட்ட ஓட்டக் குறிப்பு தாள்கள் கிழிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படுகின்றது. அந்த சம்பந்தமாக அந்த வாகனத்தின் வாரதியான 05 ஆவது பிரதிவாதியிடம் வினவிய போது ஓட்டக் குறிப்புக்களை எழுதிக் கொண்டிருக்கும்போது தான் பயணித்த வீதி கைவிடப்பட்டமையினால் அந்த தாள்களை கிழித்ததாக 05 ஆம் பிரதிவாதி 2021.12.02 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

அத்தோடு பிரேத பரிசோதனை அறிக்கை மீது கவனத்தைச் செலுத்தும்போது துப்பாக்கிச் சூடு காரணமாக ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக மருத்துவர் அங்கு எரிதல், கருப்பாதல் அல்லது பச்சை குத்தலின்போது ஏற்படும் அடையாளம் காணப்படவில்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சட்ட மருத்துவரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னிலையில் 2022.02.02 ஆம் திகதி அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில் இந்த துப்பாக்கிச்சூடு 30- 45 (30- 45 cm) இலும் அதிக தூரத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட தூப்பாக்கிச்சூடு எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பிரேத பரிசோதனை அறிக்கைக்கிணங்க குண்டு துளைத்துச் சென்றுள்ள வழியாக பின்புற மேல் பகுதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் 2022.02.02 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னிலையில் சட்ட மருத்துவரர் அளித்த வாக்குமூலத்தில் குண்டு துளைத்துச் சென்ற வழியாக பின்புற கீழ்பகுதியெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த சட்ட மருத்துவ அறிக்கையில் முளங்கைக்கு அருகில் 2 கீறல் காயங்கள், முளங்காலின் முன்புறம் கீறல்காயம், மார்பின் வலது பக்க முன்புறம், 4cmx 2cm அளவிலான காயமொன்று மார்பின் வலதுபுற முன்புறமாக 3x 2cm காயம், இடதுகுதிகால் சதையில் தகர்வு காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் பிரதிவாதி தரப்புக்களால் 2021.11.26 ஆம் திகதிய GCIB 137/83 ஆம் இலக்க வருகை குறிப்பை இடும்போது சந்தேக நபர் ஓடும்போது விழுந்ததாகவும் அதன்போது அவருடைய இரண்டு கால்கள், முழங்கால்கள், முழங்கை மற்றும் முகம் ஆகிய பகுதிகளில் கீறல்காயங்கள் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டள்ளது. அத்தோடு, 2021.11.26 ஆம் திகதிய GCIB **89/75** ஆம் இலக்க குறிப்பிலும் கால்கள், முழங்கால்கள், முழங்கைகள் மற்றும் முகம் ஆகிய பகுதிகளில் கீறல்காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும், பிரேத பரிசோதனை அறிக்கையில் முகத்திலுள்ள கீறல்காயங்கள் தொடர்பாக சட்ட மருத்துவ அதிகாரி குறிப்பிட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அந்த சட்ட மருத்துவ அறிக்கை பல தடவைகளில் கேள்விக்குறியதாக இருப்பதனை ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படுகின்றது. மேலும் சட்ட மருத்துவ அதிகாரியின் மருத்துவ அறிக்கையில் மரணம் நிகழ்ந்த நேரம் மு.ப. 3.00 மணியெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதிகளின் வாக்குமூலத்திற்கிணங்க மு.ப. 4.20 மணியளவில் மரணித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இரு தரப்புக்களினதும் வாக்குமூலங்களுக்கமைய மரணம் நிகழ்ந்த நேரம் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் நிலவுவதனை அவதானிக்க முடியுமாகவிருக்கின்றது.

பிரதிவாதி தரப்பு குறிப்பிடுகையில், சந்தேக நபரை கைது செய்யும்போது கைகலப்பு ஏற்பட்டு கொன்க்ரீட் வீதியில் சந்தேக நபர விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு சந்தேக நபரின் காயங்கள் மீது கவனத்தை செலுத்தும்போது அந்த காயங்கள் முழங்கை, முழங்கால், குதிகால் மற்றும் மார்பின் முன்புறமாக இருப்பதன் ஊடாக அந்த விடயம் உறுதிப்படுத்தப்படுகின்றது. பாதிக்கப்பட்ட நபர் கைது செய்யப்பட்டிருக்கும்போது அன்றைய தினம் சந்தேக நபரின் உயிருக்கு அச்சுறுத்தல் நிலவுவதாகக் குறிப்பிட்டு முறைப்பாட்டு தரப்பினால் பொலிஸ்மா அதிபருக்கு மின்னஞ்சல் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதென்ற விடயம் அவதானிக்கப்படுகின்றது.

அத்தோடு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இரவு 10.00 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் முறைப்பாட்டாளரின் சட்டதரணியூடாக துரித தொலைபேசி இலக்கத்திற்கு, விசாரணைகள் மற்றும் புலனாய்வு பணிப்பாளரின் தொலைபேசி இலக்கத்திற்கு மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலவுவதாக விடுக்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலர்களால் பொலிஸ் மனித உரிமைகள் பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், மனித உரிமைகள் பிரிவு பணிப்பாளரால் களுத்துறை பொலிஸ் அத்தியட்சகருக்கும் அது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த தரப்புக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குமூலங்களின் அடிப்படையில் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**<u>சட்டரீதியான பகுப்பாய்வு</u>**

அரசியலமைப்பின் III ஆம் அத்தியாயத்தின் 12(1) உறுப்புரைக்கமைய அனைத்து நபர்களும் சட்டத்தின் முன்னே சமமான பாதுகாப்பைப் பெறுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

பொலிஸ் பாதுகாப்பில் இருக்கும் நபர்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய விதம் பற்றிய சட்ட ஒழுங்குவிதிகள் பொலிஸ் கட்டளைகளின் ஏ 20 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறையிலிடப்பட்டுள்ள ஒருவர் குற்றவாளியாக்கப்பட்ட சிறைகைதியின் நிலைமையில் இருப்பவரல்ல எனவும் பாதுகாப்பு தொடர்பில் கவனத்தைச் செலுத்தி அவர் தொடர்பாக எல்லா விதத்திலும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் நினைவில் இருத்தி செயற்பட வேண்டுமென அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு பொலிஸ் கட்டளைகள் ஏ 20 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சிறைப்பிடிக்கப்படும் ஒருவருக்கு கைகளில் விலங்கிடலை அங்கிருக்கும் சிரேட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் தற்றுணிபின் பிரகாரம் மேற்கொள்ள முடியுமென்பதோடு, கைது செய்யப்பட்டிருக்கும் ஒருவரை அவமரியாதைக்குட்படுத்தாது அவர் தப்பியோடுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஏற்படுத்துதல் வேண்டும்.

அத்தோடு பொலிஸ் கட்டளைகள் ஏ 20 இல் (7) (பி) இற்கமைய தப்பியோடுவதற்கு அல்லது கடுமையாக நடந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கும் ஒருவரை அழைத்துச் செல்வதற்கு போதுமானளவு பாதுகாப்பை வழங்குதல் மீது கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் பொலிஸ் கட்டளைகள் ஏ 20 இல் (7) (ஐ) இற்கமைய தகுந்த காரணமொன்று இருந்தாலே தவிர பொலிசாரின் பொறுப்பிலிருக்கும் நபரொருவரை மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு வெளியே அனுப்புதல் கூடாது. அவ்வாறு அனுப்ப வேண்டியேற்பட்டாலும் அவருக்குப் போதுமானளவு பாதுகாப்பை வழங்கி அனுப்புதல் வேண்டும்.

மேலும் பொலிஸ் மா அதிபரின் 2328/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையில் பொலிஸ் கைதில் இருக்கும் சந்தேக நபர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்சுற்றறிக்கையின் XI இல் கைது செய்யப்படும் அனைத்து நபர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நிலையப் பொறுப்பதிகாரிகளும் பொறுப்பைக் கொண்டுள்ளதாகவும் அவ்வாறான மேற்பார்வையை மேற்கொள்ளும் மாவட்டத்திற்குப் பொறுப்பான அலுவலர்களால் கைது செய்யப்பட்டிருக்கும் நபர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தீவிரமாக கண்காணிக்கப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு அச்சுற்றறிக்கையின் III இல் சந்தேக நபரை பிறிதொரு இடத்திற்கு அழைத்துச் செல்லும்போது அனைத்து அறிக்கைகள், தகவல்களை பதிவேட்டில் உரிய முறையில் குறிப்பிட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பொலிஸ் மா அதிபரின் 2747/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையில் பொலிஸ் கைதில் இருக்கும் சந்தேக நபர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தப்பட வேண்டிய சட்ட ரீதியான ஏற்பாடுகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்சுற்றறிக்கையின் 4.3.i. இற்கமைய மேலதிக விசாரணைக்காக கைதில் இருக்கும் சந்தேக நபர்களை அழைத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு அழைத்துச் செல்லும் அலுவலர்கள் சந்தேக நபர்களின் பாதுகாப்புத் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதோடு, நிலைய பொறுப்பு அதிகாரிகள் மற்றும் மேற்பார்வை அதிகாரிகள் அது தொடர்பாக மேற்பார்வைக்குட்படுத்தல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு அச்சுற்றறிக்கையின் 5.5.4. இற்கமைய கூட்டாக குற்றச்செயல்களின் ஈடுபடும் அங்கத்தவர்கள், போதைப்பொருள், கொலை, கொள்ளை போன்ற கடும் குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள், ஆயுதப் பயிற்சியைப் பெற்றுள்ள சந்தேக நபர்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பொலிஸ் கைதில் இருக்கும்

சந்தர்ப்பங்களில் அவர்கள் தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்துதல் நிலையப் பொறுப்பதிகாரிகளின் பொறுப்பென குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்சுற்றறிக்கையின் 5.5.10. இற்கமைய சந்தேக நபரொருவரை விசாரணைக்காக வெளியே அழைத்துச் சென்ற சில சந்தர்ப்பங்களில் அந்த சந்தேக நபர்கள் அழைத்துச் சென்ற உத்தியோகததர்களின் துப்பாக்கிகளைப் பறித்துக் கொள்ளும் மற்றும்/ அல்லது உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் ஆபத்தொன்றை விளைவிப்பதற்கான வாய்ப்பொன்று இருப்பதாக கடந்தகால அனுபவங்கள் மூலம் கண்டுக்கொள்ள முடியுமாகவிருப்பதுடன், அதன் காரணமாக அவ்வாறான ஆபத்தொன்று எந்த வகையிலும் ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளல் குழுவுக்குப் பொறுப்பான அதிகாரியின் பொறுப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தல் மாவட்டப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேசங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்களின் கடமையாகும். மேலே குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்கள் உரிய பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா எனவும் கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேக நபர்களின் உரிமைகள் உரிய பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலான மேற்பார்வை செயற்பாடொன்று இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க தனது பொறுப்பிலிருக்கும் சந்தேக நபரொருவர் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் பற்றிய சட்ட ரீதியான ஏற்பாடுக்ள இருந்தும் அந்த ஏற்பாடுகளுக்கமைய பிரதிவாதி தரப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்படுகின்றது.

இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதன் பின்னர் அவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லாமல் வேறு மனிதர்களற்ற பிரதேசமொன்றில் 12 மணித்தியாலங்கள் ஜீப் வண்டியினுள் தடுத்துவைத்து விசாரித்தமையூடாக அந்த சந்தேக நபரின் பாதுகாப்பு சம்பந்தமாக கவனத்திற் கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்படுகின்றது. பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக வேறு மனிம நடமாட்டமற்ற பிரதேசமொன்றில் விசாரணை மேற்கொண்டமை மூலம் சந்தேக நபரின் பாதுகாப்புத் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்பட்டதாக பிரதிவாதிகள் கூறும் கருத்தை தர்க்க ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் பிரதிவாதி தரப்புக்கமைய கைது செய்வதற்கு முன்னர் மற்றும் விசாரணையின்போது வெளிப்படுத்திக் கொள்ளப்பட்ட விடயங்களுக்கமைய சந்தேக நபர் பாரிள கொலை குற்றவாளியொருவராவார். அவ்வாறான குற்றங்கள் தொடர்பில் சந்தேக நபரொருவர் தனது ஆயுதங்களை மறைத்து வைத்துள்ள இடத்தை நிச்சயித்துக் குறிப்பிட்டிருக்கையில், பாதுகாப்புக்காக வேறு பொலிஸ் உத்தியோகத்தர் குழுவொன்று அமர்த்தப்பட்டிருக்கையில் மு.ப. 3.00 மணிக்கு உத்தியோகத்தர்களை அனுப்பி அத்தகவல்களை பரீட்சிப்பதற்கான வாய்ப்பு இருக்கையில் அந்த ஆயுதங்களை எடுப்பதற்கு அழைத்தும் அவ்வாறு அழைத்துச் செல்லும்போது கைகளை முன்புறமாக விலங்கிட்டு அழைத்துச் சென்றமை ஊடாக பிரதிவாதி தரப்பு தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளதாக என்ற கேள்வி எழுகின்றது.

அத்தோடு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த சந்தேக நபரின் உயிருக்கு அச்சுறுத்தல் நிலவுவதாக இலங்கை பொலிஸ் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளருக்கு இந்த முறைப்பாடு கிடைத்தவுடனே அறிவித்துள்ளது. அதற்கிணங்க மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் அது தொடர்பாக மாகாணத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரை அறிவுறுத்தியிருக்கையில் அந்த தகவல்களை கீழுள்ள உத்தியோகத்தர்களுக்கு தெளிவாக அறிவுறுத்தப்படவில்லையெனவும் உரிய மேற்பார்வை மேற்கொள்ளப்படவில்லையெனவும் உறுதியாகின்றது. அத்தோடு, பாதிக்கப்பட்ட நபரை கைது செய்ததன் பின்னர் பொலிஸாரின் பொறுப்பிலிருக்கும்போது அவரை கொலை செய்வதற்கு வாய்ப்பு இருப்பதாக பொலிஸ் மா அதிபருக்கும் மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கையில் அது தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படவில்லை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படுகின்றது. அதற்கிணங்க இந்நிகழ்வு சம்பந்தமாக உரிய மேற்பார்வை அல்லது கண்காணிப்பை

தொடர்புடைய உயர் அதிகாரிகள் மேற்கொள்ளவில்லையென ஆணைக்குழுவினால் கண்டுக்கொள்ளமுடியுமாகவிருக்கின்றது.

அதற்கிணங்க பிரதிவாதி தரப்பு இந்த சந்தேக நபருக்கு போதுமானளவு பாதுகாப்பை வழங்கவில்லையென்பதுடன் பொலிஸ் கட்டளைகள் ஏ 20 பொலிஸ் மா அதிபரின் 2328 /2011 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2747/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் உரிய பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனத்தைச் செலுத்தும்போது பிரதிவாதி தரப்பினால் 1978 இலங்கை அரசியலமைப்பின் 12(1) உறுப்புரை மீறப்பட்டுள்ளதாக தீர்மானிப்பதற்கு முடியும்.

**<u>13(4) உறுப்புரையை மீறுதல்</u>**

மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனத்தின் 3 ஆம் பிரிவு, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தின் 6 ஆம் பிரிவு, சர்வதேச சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம், அனைத்து புலம்பெயர் ஊழியர்களின் மற்றும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் பற்றிய சமவாயத்தின் 11 ஆம் பிரிவு, இயலாமையுடைய நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 10 ஆம் பிரிவு என்பன உயிர்வாழும் உரிமையை உறுதிப்படுத்துகின்றன்.

இலங்கை அரசியலமைப்பின் உயிர்வாழும் உரிமை பற்றிய 13 (4) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உயர்நீதிமன்ற வழக்கு தீர்ப்புக்களின் போது மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீயானி சில்வா எதிர் இத்தமல்கொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பயாகல பொலிஸ் நிலையம் மற்றும் ஏனையோர் (2003) 1 Sri LR 14 வழக்குத் தீர்ப்பின்போது ‘‘உயிர்வாழும் உரிமை அடிப்படை உரிமையென தெளிவாக இனங்கண்டுக் கொள்ளப்பட்டிராவிடினும் III ஆம் அத்தியாயத்தின் சில ஏற்பாடுகளில் அந்த வெளிப்படுத்தப்படுகின்றது. குறிப்பாக 13 (4) ஆம் உறுப்புரை ஊடாக சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட அலுவல்கள் நடைமுறைக்கிணங்**க உரிய நீதிமன்றமொன்றினால் பிறப்பிக்கப்படும் கட்டளைக்கமையவன்றி எந்தவொரு நபரையும் மரண தண்டைக்குட்படுத்தல் அல்லது எந்தவொரு நபரையும் சிறையிலடைத்தல் கூடாதென வலியுறுத்தப்படுகின்றது.** அதாவது நபரொருவரை குற்றவாளியாக கருதினாலும் நீதிமன்ற கட்டளையொன்று இன்றி அந்த நபரை மரணத்திற்குட்படுத்துவதற்கு எந்தவொரு வாய்ப்பும் இல்லை. (தற்பாதுகாப்பு இங்கு விதிவிலக்காகும். அந்த ஏற்பாட்டின் ஊடாக நீதிமன்றமொன்றினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டாலே தவிர நபரொருவருக்கு உயிர் வாழ்வதற்கான உரிமை இருப்பதாக கருதப்படுகின்றது. இதற்கிணங்க 13 (4) ஆம் உறுப்புரை நபரொருவருக்கு உயிர் வாழ்வதற்காக உரிமை உண்டென உறுதிப்படுத்தப்படுகின்றது’’

மேலும், ராணி பெர்னாந்து எதிர் . நிலையப் பொறுப்பதிகாரி, சீதுவ பொலிஸ் நிலையம் (2005) 1 Sri L R 40-45 , ரத்நாயக்க தரங்கா லக்மாலி எதிர். பொ.ப. நிரோசன் அபேநாயக்க எம்பிலிப்பிட்டிய நிலையம் மற்றும் ஏனையோர் (SC FR Application No. 577/2010) மற்றும் மொஹமட் ரசீட் பாத்திமா சர்மிளா எதிர். நிலையப் பொறுப்பதிகாரி, கொம்பனித்தெரு, பொலிஸ் நிலையம் மற்றும் ஏனையோர (SC FR Application No. 398/2008) ஆகிய வழக்குகளிலும் இது சம்பந்தமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

13 (4) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்கான (தற்பாதுகாப்பு உரிமை) பொலிஸ் உத்தியோகத்தர்களால் கடந்த காலப்பகுதிகளில் இதனை ஒரு முறையாக பயன்படுத்திக் கொண்டமையை மனித உரிமைகள் ஆணைக்குழு அவதானிக்கின்றது. தற்பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாது

நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் தற்பாதுகாப்பு உரிமையை தரப்புக்கள் கோருவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் வலியுறுத்துகின்றது.

அதற்கிணங்க மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் கவனத்திற் கொள்ளும்போது பிரதிவாதி தரப்பினால் இந்த நிகழ்வுடன் தொடர்புடைய பாதிக்கப்பட்ட நபரின் 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் 12 (1) மற்றும் 13 (4) உறுப்புரைகள் ஊடாக பாதுகாக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தீர்மானிக்கின்றது.

**அதற்கிணங்க கீழ் குறிப்பிடப்படும் பரிந்துரைகளை முன்வைக்கின்றது.**

1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் 12 (1) உறுப்புரை மீறப்பட்டமை தொடர்பாக 01 முதல் 09 வரையிலான பிரதிவாதி தரப்புக்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

சந்தேக நபரை கைது செய்து தடுத்து வைக்கும் செயற்பாட்டின்போது சட்டத்தின் நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக கைது செய்யும் உத்தியோகத்தரிலிருந்து உயர் அதிகாரிகள் வரை உரிய மேற்பார்வை நடைமுறையொன்றைத் தயாரித்து சுற்றறிக்கைகள் மூலமாக அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபருக்கு இத்தால் பரிந்துரை செய்யப்படுகின்றது.

01, 02, 03, 04, 06, 07, 08 ஆகிய பிரதிவாதிகள் தனிப்பட்ட வகையில் மேலே குறிப்பிடப்பட்ட பாதிக்கப்பட்ட தரப்பின் அடிப்படை உரிமைகளை மீறுதல் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டுமென்பதோடு, இந்த நடவடிக்கைக்கு தலைமை தாங்கிய முதலாவது பிரதிவாதி மற்றும் குறித்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட 06 ஆவது பிரதிவாதி ஆகியோர் ரூபா. 25,000/- வீதமும் 02, 03, 04, 07 மற்றும் 08 ஆகிய பிரதிவாதிகளால் ருபா. 10,000/- வீதமும், பொலிஸ் திணைக்களத்தினால் ரூபா. 500,000/- தொகையும் பாதிக்கப்பட்ட நபரின் மனைவி மற்றும் மகளுக்கு செலுத்த வேண்டுமென இத்தால் பரிந்துரைக்கப்படுகின்றது.

2024.07.24 ஆம் திகதிக்கு முன்னர் இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி அது தொடர்பான அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 15 (7) இற்கமைய பொலிஸ் மா அதிபருக்கு இத்தால் அறியத் தருகின்றோம்.

அத்துடன் இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டிய திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டுமென்பதோடு. அந்த திகதிக்கு முன்னர் தொடர்புடைய அறிவித்தலை மேற்கொள்ளாவிட்டால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாதெனவும் மேலும் அறியத் தருகின்றேன்.

உயர் நீதிமன்ற நீதிபதி (ஓய்வு பெற்ற)
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஆணையாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

**பிரதி :-**

கௌரவ அமைச்சர்,
பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு,
04 ஆம் மாடி, சுஹுருபாய, பத்தரமுல்லை

**<u>பரிந்துரை இலக்கம் 02</u>**

| | | | |
|---|---|---|---|
| முறைப்பாட்டாளர் (வாதி) | : | 01. | E. A. N. H. எதிரிசூரிய,<br>இல. - 81, பஹலகம,<br>வெவெல்தெனிய. |
| பாதிக்கப்பட்ட தரப்பு | : | 01. | E. A. J. நத்தாஷா எதிரிசூரிய,<br>இல. - 81, பஹலகம,<br>வெவெல்தெனிய. |
| பிரதிவாதிகள் | : | 01. | சி.பொ.அ திரு. லக்கி ரந்தெனிய,<br>முன்னாள் பணிப்பாளர்,<br>குற்றப் புலனாய்வுத் திணைக்களம்,<br>கொழும்பு 01. |
| | | 02. | திருமதி சந்திமா அருமப்பெரும,<br>உதவி பொலிஸ் அத்தியட்சகர்<br>இணைய கண்காணிப்பு மற்றும் புலனாய்வு பிரிவு,<br>கணினி குற்றவியல் பிரிவு,<br>குற்றப் புலனாய்வுத் திணைக்களம்,<br>கொழும்பு 01. |
| | | 03. | உப பொலீஸ் பரிசோதகர் S.M.U.சுபசிங்க,<br>நிலையப் பொறுப்பதிகாரி,<br>இணைய கண்காணிப்பு மற்றும் புலனாய்வு பிரிவு,<br>கணினி குற்றவியல் பிரிவு,<br>குற்றப் புலனாய்வுத் திணைக்களம்,<br>கொழும்பு 01. |
| | | 04. | கட்டுப்பாட்டாளர் நாயகம்,<br>குடிவரவு மற்றும் குடியகல்வித் திணைக்களம்,<br>கொழும்பு 01. |

**<u>முறைப்பாட்டு இலக்கம் : H.R.C. /2603/23, H.R.C. /2153/23, H.R.C. /2154/23</u>**

**முறைப்பாட்டின் விடயங்களை முன்வைத்தல்**

தனது சகோதரி நத்தாஷா எதிரிசூரிய ஒரு நகைச்சுவை நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்றும், 2023.04.01 ஆம் திகதி 'மொடாபிமான 3' - என்ற நகைச்சுவை நிகழ்ச்சியின் ஒரு அங்கத்தை அவர் தொகுத்து முன்னிலைப்படுத்தியதாகவும், 2023.05.23 ஆம் திகதி அந்த முன்னிலைப்படுத்தல் 'Colombo Comedy Central' எனும் you Tube சேனலில் ஒளிபரப்பப்பட்டதாகவும், அதன் பின்னர் அந்த வீடியோ தனது சகோதரியின் you Tube சேனலிலும் ஒளிபரப்பப்பட்டதாகவும், அது இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களில் ஒளிபரப்பப்பட்டதன் பின்னர் பல்வேறு தரப்பினரும் அவரைப் பற்றி பல்வேறு குறிப்புகளை இட்டதாகவும், மிரட்டியதாகவும், அதனால் தனது சகோதரி கடும் மன அழுத்தத்திற்கு ஆளாகியதாகவும், அதிலிருந்து மீள்வதற்காக 2023.05.27 ஆம் திகதி பாதிக்கப்பட்ட தனது சகோதரி அவருடைய வாழ்க்கைத்துணையுடன் சிங்கப்பூரில் குறுகிய விடுமுறையொன்றைக் கழிப்பதற்கு திட்டமிட்டிருந்ததாகவும் முறைப்பாட்டாளர் ஆணைக்குழுவில் முறைப்பாட்டை முன்வைத்து தெரிவிக்கின்றார்.

அவர் 2023.05.27 ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு சிங்கப்பூர் நோக்கிப் பயணமாவதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றிருந்தபோது குடிவரவு மற்றும் குடியகல்வுத்

திணைக்கள அதிகாரிகளினால் அவரை வெளிநாடு செல்வதற்கு இடமளிக்காமல் தடுத்து வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைத்ததாகவும் பின்னர் 2023.05.28 ஆம் திகதி B 25774 / 2023 இன் கீழ் நீதிமன்றத்தில் விடயங்கள் முன்வைக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாதிக்கப்பட்டவர் விடயங்களை முன்வைத்தல்**

தான் ‘மொடாபிமான’ என்ற நகைச்சுவை நிகழ்ச்சியொன்றை 01 ஏப்ரல் 2023 ஆம் திகதி நடாத்தியதாகவும் 2023.05.23 ஆம் திகதி Clombo Comedy Center இனால் அவர்களுடைய you Tube சேனலில் அந்த நிகழ்ச்சி ஒளி பரப்பப்பட்டதாகவும் அத்துடன் தனது you Tube சேனலிலும் அந்த நிகழ்ச்சி ஒளி பரப்பப்பட்டதாகவும் 2023.05.24 ஆம் திகதி தான் பௌத்த மதத்தை அவமதித்ததாகக் கூறி சமூக ஊடகங்களில் தனக்கு எதிராக கருத்துக்கள் வெளியிடப்பட்டதாகவும்,

2023.05.26 ஆம் திகதி Colombo Comedy Center மற்றும் தான் பொது மன்னிப்புக் கோரி அந்த வீடியோவை நீக்கியதாகவும், தனக்கு சமூக ஊடகங்களில் விடுக்கப்பட்ட எதிர்ப்புக்கள் காரணமாக மன உளைச்சலுக்கு ஆளாகியதாகவும் அதலிருந்து விடுபடுவதற்காக சில நாட்கள் வெளிநாட்டிற்குச் செல்வதற்குத் தீர்மானித்து 2023.05.27 ஆம் திகதி வெளிநாடு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்ததாகவும் 2023.05.27 ஆம் திகதி பண்டாரநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் தன்னை தடுத்ததாகவும் தனக்கு பயணத் தடை இருப்பதாக கூறினாலும் எந்தவிதமான

ஆவணத்தையும் சமர்ப்பிக்கவில்லையெனவும், மேலும் வினவியபோது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தன்னை தடுக்குமாறு கோரியுள்ளதாகவும், அதற்கான காரணம் என்னவென்பதனை அவர்கள் அறிந்திருக்கவில்லையெனவும்,

பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வந்து 2023.05.27 இரவு 11.10 மணியளவில் தன்னை குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தலைமை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், பண்டாரநாயக்க விமான நிலையத்தில் தாம் கைது செய்யப்பட்டதை செய்தி அறிக்கையிடுவதற்காக ஊடகங்களினால் வந்திருந்ததை தாம் அறிந்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2023.05.28 ஆம் திகதி ஒரு சட்டத்தரணியொருவரை அல்லது உறவினரையோ சந்திக்க அனுமதி வழங்கப்படவில்லையெனவும், பின்னர் அவர் தனது வாழ்க்கைத்துணையை (கணவரை) சந்திக்க வாய்ப்பு வழங்கப்பட்டதெனவும், 2023.05.28 ஆம் திகதி மீண்டும் தனது வீட்டுக்கு விசாரணைக்காக அழைத்துச் சென்று தான் எழுதிய நகைச்சுவைப் புத்தகங்கள் சிலதை கைப்பற்றியதாகவும், அங்கும் ஊடகங்கள் வந்திருந்ததாகவும் 2023.05.28 ஆம் திகதி தான் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகவும், பின்னர் 2023.07.05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததாகவும், இந்த சட்ட ரீதியற்ற கைது காரணமாக தான் பாதிக்கப்பட்டதாகவும், இதன் காரணமாக தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிடுகின்றார்.

**01, 02, 03 ஆம் பிரதிவாதிகள் கருத்துத் தெரிவித்தல்**

2023.04.01 ஆம் திகதி ‘மொடாபிமான’ எனும் பெயரில் கொழும்பு பிஷொப் கல்லூரி கேட்போர்கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றின்போது பௌத்த மதத்திற்கு எதிராக தீங்கிழைக்கும் வகையிலும் வெறுப்பூட்டும் வகையிலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டு மத சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிடப்பட்டு வீடியோ எடுக்கப்பட்டு மீண்டும் 2023.05.24 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த திகதியொன்றில் இணையத்தளம் ஊடாக சமூக ஊடகங்களில் ஒளி, ஒலி பரப்பப்பட்டமையின் மூலம் அந்த மதத் தத்துவத்தை நம்பி வழிபடுகின்றவர்களிடையே மகிழ்ச்சியற்ற தன்மையும், தெளிவின்மையும், சமூக ஒற்றுமையின்மையும் ஏற்படுமென்று குறிப்பிட்டு ‘சந்தஹம் சிசில’ பௌத்த நிலையம் எனும் முகவரியில் வசிக்கும் சங்கைக்குரிய அத்தரகம பஞ்ஞாலங்கார தேரர்

2023.05.27 ஆம் திகதி கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு விடுத்த எழுத்து மூலமான முறைப்பாடு மற்றும் பௌத்த மத தேரர்கள் சிலர் மற்றும் பௌத்த விவகார ஆணையாளர் ஊடாகவும் கிடைக்கப்பெற்றுள்ள 07 முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை எனவும்,

முறைப்பாட்டாளரான சங்கைக்குரிய அத்தரகம பஞ்ஞாலங்கார தேரரின் வாக்குமூலம் 2023.05.27 ஆம் திகதி குறித்துக்கொள்ளப்பட்டதாகவும், அந்த முறைப்பாட்டின் ஊடாக புத்தர் பெருமானுக்கு மற்றும் பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையிலும் மத நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் அவதூறு, தீங்கிழைப்பு மற்றும் வெறுப்பூட்டும் வகையிலும் கூற்றுக்கள் அடங்கிய வீடியோ ஒன்றை COLOMBO COMEDY CENTRAL எனும் You tube சேனல் ஊடாக இணையத்தளத்தினூடாக ஒளி பரப்பி விளம்பரப்படுத்தியுள்ளதாகவும், அதனை நத்தாஷா எதிரிசூரிய எனும் பெயரையுடைய பெண் ஒருவர் முன்னிலைப்படுத்தியுள்ளதாகவும் அதில் அவர் 'மொடாபிமானய' எனும் பெயரில் பின்னணிக் காட்சியொன்றுடன் இந்த வீடியோவை விளம்பரப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த நபர் பௌத்த பாரம்பரியத்தை இழிவுபடுத்தும் வகையில் பௌத்தர்களை புண்படுத்தும் வகையிலும் இந்த நிகழ்ச்சியை முன்னிலைப்படுத்தி ஒளி பரப்பியதாகவும், அவ்வாறே பௌத்த, கத்தோலிக்க, முஸ்லிம் மதத் தலைவர்கள் மற்றும் அந்த மத பக்தர்களின் மனதை புண்படுத்தும் வகையில் கருத்து வெளியிட எவருக்கும் உரிமை இல்லை எனவும், அனைத்து மதங்களுடனும் நல்லிணக்கத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், குறுகிய உணர்வுகளுடனான கருத்து வெளியிடல் ஊடாக நாட்டின் மதப் பிரிவுகளிடையே குரோதம், வெறுப்பு தூண்டப்பட்டு பொது மக்கள் சமாதானத்திற்கு இடையூறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் நிலவுவதாகவும் மத போதகர் மிகவும் இழிவான முறையில் அவமதிக்கப்பட்டுள்ளதாகவும், பௌத்த மதம் தொடர்பாக மிகவும் வெட்கக்கேடான வகையில் இழிவுபடுத்தப்பட்டதாகவும், பௌத்த மதத்தின் பாரம்பரியங்களையும் மிகக் கீழ்த்தரமான முறையில் அவமதித்ததாகவும் முறைப்பாடுகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும்.

அதற்கிணங்க, இந்த நிகழ்வுடன் தொடர்புடைய தகவல்கள் தொடர்பான இணையத்தளக் கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் விசாரணையின்போது இந்த வீடியோ நாடா **Colombo comedy central** மற்றும் **Nathasha Edirisooriya** எனும் **youtube** சேனல் ஊடாக பல்வேறு சமூக ஊடக இணையத்தளங்களில் ஒளி பரப்பப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டதாகவும் விடயங்கள் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக மேலும் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது இது 'மொடாபிமானய' எனும் நிகழ்ச்சி நத்தாஷா எதிரிசூரிய என்பவர் பார்வையாளர் அரங்கொன்றின் முன்னே மேற்கொண்ட நிகழ்ச்சியெனவும் விடயங்கள் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்டன. மேலும் இதனூடாக **"........ அந்த சுத்தோதனின் குழந்தை.. அந்தக் குழந்தை பிறந்த அதே நாளில் நடந்துள்ளது......... அதற்கு இவர்கள்.... நிமிர்த்தித் தூக்கினால் கழுத்து தொங்குகின்றது........ அந்த சுத்தோதனின் சிறியவன் பிறந்த அன்றே கவிதை வாசித்துள்ளான்..... அதற்கு இவர்கள்.... சுத்தோதனின் பையன் பிறந்த நாளை சொல்லவில்லை.... ஆனால் அவன் வளர்ந்ததும் என்ன செய்வான் என்று முடிவு செய்துள்ளார்கள்..... "** என்ற ரீதியில் சர்ச்சைக்குரிய கருத்து வெளியிடப்பட்டுள்ளதாகவும், புத்தர் பெருமானின் குழந்தைப் பருவம் மற்றும் பௌத்த வரலாறு மற்றும் அதனுடன் தொடர்புடைய பௌத்த தத்துவத்தில் போதிக்கப்படும் பௌத்தர்கள் வழிபடுகின்ற ஏற்றுக்கொண்டுள்ளவற்றை இழிவுபடுத்தி நிந்திக்கும் விதத்தில் மற்றும் அதனூடாக அந்தத் தத்துவத்தையும் அதை ஏற்றுக்கொள்பவர்களும் கவலையடையும், தெளிவின்மை, முரண்பாடுகள், அமைதியின்மை, பகைமை அல்லது முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்பதும் தெரியவந்துள்ளதாகவும்,

அதற்கிணங்க இந்த விளக்கக்காட்சி முன்னிலைப்படுத்தலை மேற்கொண்டுள்ள நத்தாஷா எதிரிசூரிய என்பவரின் **youtube** சேனலில் இந்த பிரச்சினைக்குரிய வீடியோ ஒளி பரப்பப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளமையை வெளிப்படுத்திக்கொள்ளப்பட்டதாகவும், பின்னர் அது பல்வேறு சமூக ஊடகங்கள் மூலம் மிக வேகமாகப் பரவியதும் கண்டுபிடிக்கப்பட்டது என்பதும் தெரியவந்தது.

இதற்கிடையில், நத்தாஷா எதிரிசூரிய என்பவரின் வாக்குமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் தலைமையகத்திற்கு பல்வேறு தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான செய்திகள் இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகி பொதுமக்களின் ஆட்சேபனைகள் தொடர்பான செய்திகள் வெளியாகின. இந்த நிலைமைக்கு அமைவாக இந்த பிரச்சினைக்குரிய முன்னிலைப்படுத்தலை மேற்கொண்ட எதிரிசூரிய ஆராச்சிகே ஜயனி நத்தாஷா எதிரிசூரிய என்பவர், தான் கூறிய கருத்துக்கு மன்னிப்பு கோரிய காணொளி (வீடியோ) இந்த சேனலில் பதிவேற்றம் செய்துள்ளதுடன் அது தொடர்பில் சமூகத்தில் எதிர்ப்புகள் எழுந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும்,

தற்போதைய நிலைமையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, இந்த நபர் வெளிநாடு செல்ல தயாராகி வருவதாக தகவல்கள் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்டதாகவும், அவர் வெளிநாடு சென்றால் விசாரணைக்கு இடையூறு ஏற்படும் என்பதனால், அது சம்பந்தமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கட்டுநாயக்க விமான நிலையப் பிரிவை அறிவுறுத்தியதன் அடிப்படையில் அன்றைய தினமே, அதாவது 2023.05.27 ஆம் திகதி குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அலுவலர்களால் நத்தாஷா எதிரிசூரிய சிங்கப்பூர் செல்வதற்கு வந்திருந்த சந்தர்ப்பத்தில் தடுக்கப்பட்டு பின்னர் கணனி குற்றவியல் புலனாய்வுப் பிரிவின் அலுவலர்களால் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் மத உணர்வுகளை புண்படுத்தும் வகையிலும், இன அல்லது மத வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் பௌத்த மத அறிஞர்களை அவமதிக்கும் வகையிலும் கருத்துத் தெரிவித்தமை தொடர்பாக குற்றத்தை அவர் மீது சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் சந்தேக நபரை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் B 25774/23 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையின் 120, 291 (அ) 291(ஆ), 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணனி வழிக் குற்றச் சட்டத்தின் பிரிவு 6 மற்றும் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் தொடர்புடையதாக 2023.05.28 ஆம் திகதி ஆஜர்படுத்தியதாகவும், அதன்போது முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கவனத்திற்கொண்டு நீதவான் அவர்கள் சந்தேக நபரை 2023.06.07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்ததாகவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன் இந்த சர்ச்சைக்குரிய, பிரச்சினைக்குரிய ஒளிபரப்பு முன்னிலைப்படுத்தல் ஊடாக மத வெறுப்புணர்வைத் தூண்டுதல் மற்றும் அதன் மூலம் பகைமை அல்லது வன்முறை தூண்டப்படுகின்ற நிலைமை உருவாகுவதன் காரணமாக 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் 03 (01) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலான குற்றத்தை முதலாம் சந்தேக நபர் செய்திருப்பது விசாரணையின் போது வெளிப்படுத்திக்கொள்ளப்பட்டதாகவும் அதன்போது விசேடமாக ஒரு மதத்தை அவமதிக்கும் வகையிலான வெளிப்பாட்டின் ஊடாக மத வெறுப்பு தூண்டப்பட்டு அதன் மூலம் மதக் குழுக்களிடையே பகைமை ஏற்படுவதற்கு மற்றும் வன்முறைச் செயல்கள் ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிப்பதுடன், அத்துடன் மேலும் மேற்குறிப்பிடப்பட்ட விதத்திலான பகைமை அல்லது வன்முறை செயற்பாடுகள் இந்த நிகழ்வுடன் தொடர்பாக நோக்கும்போது, பௌத்த தத்துவம் தொடர்பாக வெவ்வேறு கருத்துக்களை கொண்டுள்ள குழுக்களுக்கு இடையில் வன்முறைப் போக்கு இந்த

பிரச்சினைக்குரிய முன்னிலைப்படுத்தல் (ஒளிபரப்பு) காரணமாக ஏற்பட்டதெனவும் அது தவிர, இந்த நிலைமையை சாதாரண விடயமாகக் கருத முடியாது எனவும், இவ்வாறான சர்ச்சைக்குரிய சூழ்நிலை காரணமாக, அக்குறணை பிரதேசத்தில் ஏற்பட்ட பதற்றமான மற்றும் கொந்தளிப்பான நிலைமைகள் மீது கவனத்தைச் செலுத்தி இந்தக் கூற்று சமூக ஊடகங்களில் வெளியான கருத்துக்கள் ஊடாகவும் அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுவதற்கான வாய்ப்புக் காரணமாக இது தொடர்பில் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சட்ட ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>04 ஆம் பிரதிவாதி கருத்துத் தெரிவித்தல்</u>

எதிரிசூரிய ஆராச்சிகே ஜயனி நத்தாஷா எதிரிசூரிய என்பவர் வெளிநாடு செல்வதற்காக வந்தால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு குற்றப் புலனாய்வுத்

திணைக்களத்தினால் 2023.05.27 ஆம் திகதி பகல் 12.44 மணிக்கு 04 ஆவது பிரதிவாதிக்கு கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும்,

அதற்கிணங்க மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பயணி 2023.05.27 ஆம் திகதி MHO 0178 விமானத்தில் புறப்படுவதற்கு குடியகல்வு முனையத்திற்கு வந்து, குடியகல்வு முனையத்தில் கடமையாற்றிய அதிகாரியிடம் குடியகல்வு அனுமதிக்காக தனது கடவுச்சீட்டை வழங்கியதாகவும், அந்த நேரத்தில் மேற்படி அதிகாரியின் கணனித் திரையில் அவரது கடவுச்சீட்டு தொடர்பான செய்தியொன்று (Alert Messge - எச்சரிக்கை செய்தி) காண்பிக்கப்பட்டமையின் அடிப்படையில் குறித்த பயணியை அந்த சந்தர்ப்பத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரியிடம் அனுப்பப்பட்டது. நத்தாஷா எதிரிசூரிய என்பவர் அந்த சிரேஷ்ட அதிகாரியிடம் நீதிமன்றக் கட்டளையொன்று இல்லாமல் தனது வெளிநாட்டுப் பயணத்தை தடுப்பதற்கு முடியுமா என வினவியதாகவும்,

இதன்படி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் அவருக்கு அறிவிக்கப்பட்டதுடன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கையின் பிரகாரம், அந்த சந்தர்ப்பத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் அனுப்பிய விடயத்தை மாத்திரம் மேற்கொண்டதாகவும், அது தொடர்பில் மேலும் அவருக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியகல்வு கருமபீடத்திற்கு அவர் அறிக்கைப்படுத்தியதன் பின்னர் சிறிது நேரத்தில், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அங்கு வந்து விசாரணைக்காக அவரைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்டதாகவும், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி உதய குமார என்பவர் நத்தாஷா எதிரிசூரியவை 2023.05.27 ஆம் திகதி 23.00 மணியளவில் பொறுப்பேற்றுக் கொண்டதாக அதிகாரம்பெற்ற அதிகாரி லொக் குறிப்பை இட்டுள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

**விசாரணைக்காக அழைப்பு விடுத்தல்**

2023.11.21, 2023.12.19, 2024.03.13, 2024.04.05, 2024.04.24, 2024.05.15, 2024.06.11 ஆகிய திகதிகளில் தரப்புக்களை அழைத்து மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

**விசாரணைகள் :-**

தன்னை சட்டவிரோதமாக கைது செய்ததாகவும், தனக்கு சட்டத்தின் பாதுகாப்பு நியாயமான வகையில் வழங்கப்படவில்லை என்றும், தனது கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் நடைமுறையின்படி கைது செய்யப்படவில்லை என்ற விடயம் தொடர்பில் கவனத்தைச் செலுத்தும்போது,

இலங்கை அரசியலமைப்பின் 13(1) உறுப்புரையில் தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் குற்றவியல் நடைமுறை தொடர்பான உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள அலுவலல்கள் நடைமுறைக்கமையவன்றி, யாரையும் சிறையில் அடைக்க முடியாது என்றும், சில காரணங்களுக்காக அந்த நபர் சிறையில் அடைக்கப்பட்டாலும் அதற்கான காரணத்தை அந்த நபரிடம் தெரிவிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனூடாக தன்னிச்சையான கைதுகளை தடுக்கும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அது உரிய ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவசரமாகவும் தன்னிச்சையாகவும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதனை பயன்படுத்துவதைத் தடுக்கவும், தனிப்பட்ட அனுகூலங்கள் (பயன்கள்) மற்றும் அரசியல் நோக்கங்களுக்காகவும் சட்டச் செயல்முறையைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் ஒரு பாதுகாப்புக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் முறைப்பாட்டு மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பு தெரிவிப்பதாவது - தொடர்பாக, 2023.05.27 ஆம் திகதி தான் சிங்கப்பூருக்கு விஜயம் செய்வதற்கு வந்த சந்தர்ப்பத்தில் குடிவரவு

குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற அதிகாரி அவரை அங்கு தடுத்து வைத்ததாகவும், பின்னர் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் வந்து அழைத்துச் சென்றதாகவும், அங்கு அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை தனக்குத் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

01, 02. 03 பிரதிவாதிகள் தெரிவிப்பதாவது - இணையத்தளம் ஊடாக பௌத்த மதத்திற்கு எதிரான துவேச மற்றும் வெறுப்பூட்டும் கூற்றுக்களை (கருத்துக்களை) வெளியிட்டு மத சகவாழ்வுக்கும், நல்லிணக்கத்துக்கும் இடையூறு விளைவித்தமை தொடர்பில் பாதிக்கப்பட்டவருக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும், இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டபோது பாதிக்கப்பட்ட தரப்பு வெளிநாடு செல்லத் தயாராகுவதாக தகவல்கள் வெளியாகியதாகவும், அவர் வெளிநாடு சென்றால் விசாரணைகளுக்கு தடைகள் ஏற்படுவதனால் 2023.05.27 ஆம் திகதி சிங்கப்பூர் செல்வதற்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கட்டுநாயக்க விமான நிலையப் பிரிவின் அதிகாரிகளால் மத போதகர்களை அவமதிக்கும் வகையில் விடயங்களை முன்வைத்த குற்றத்தை தெரிவித்து பாதிக்கப்பட்ட நபர் கைது செய்யப்பட்டார்.

இதன்படி, இந்த பாதிக்கப்பட்ட தரப்பை பண்டாரநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைத்தல் தொடர்பில் கவனம் செலுத்தும்போது, 1ஆம், 2ஆம், 3ஆம் பிரதிவாதிகள் இது தொடர்பில் தெரிவிப்பதாவது : இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருக்கும்போது குறித்த நபர் (பெண்) வெளிநாடு செல்லத் தயாராக இருப்பதாகவும், அவர் வெளிநாடு சென்றால், விசாரணைக்கு இடையூறு ஏற்படுவதனால் 1ஆம், 2ஆம் பிரதிவாதிகளால் பாதிக்கப்பட்ட தரப்பு விமானத்தில் பயணிப்பதற்கு வந்தால் அவரை தடுத்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு 03 ஆம் பிரதிவாதிக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும், அதற்கிணங்க அந்த அனுமதியின்படி, பயணத்தைத் தடுக்க குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க முறைப்பாட்டாளரின் (வாதியின்) பயணத்தை தடுப்பதற்காக 01 ஆம் பிரதிவாதியின் கையொப்பத்துடன் 04 ஆவது பிரதிவாதித் தரப்புக்கு அனுப்பிய ஆவணம் மீது கவனத்தைச் செலுத்தும்போது Restriction If Restriction /If Revocation further action to be taken. எனும் விடயத்துடன் தொடர்புடைய "Until we get court order, If she try to go abroad, Please arrest her and produced to computer crime Investigation unit" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த ஆவணத்தில் 01 ஆம் பிரதிவாதியால் கையொப்பமிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயணத்தைத் தடுப்பதற்கு எந்த சட்ட நடைமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன என்ற விசாரணைக்கமைய 01 ஆவது பிரதிவாதித் தரப்பு, பயணத் தடுப்பு தொடர்பாக இலங்கை பொலீஸினால் எந்த விதமான எழுத்துமூல வழிகாட்டுதல்களையும் வழங்கவில்லையாயினும், பொதுவாக ஒரு பொலிஸ் சந்தேக நபர் வெளிநாடு செல்வதனைத் தடுப்பதற்காக நீதிமன்ற ஆணை பெற்றுக்கொள்ளப்படுவதாகவும், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பொறுப்புக்கூற வேண்டிய குற்றச் செயல்களுக்காகத் தேடப்படும் சந்தேக நபரொருவர் வெளிநாடு செல்வதனைத் தடுப்பதற்காக எடுக்கப்படுகின்ற பொதுவான நடைமுறை இதுவாகுமென மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தெரிவித்துள்ளது.

இதன்படி, எந்தவிதமான வெளிப்படைத் தன்மை மற்றும் வழிகாட்டுதல்கள் இல்லாத முறையில் முறைப்பாட்டாளரின் பயணத்தை நிறுத்தி அவரைக் கைது செய்யுமாறு 04 ஆம் பிரதிவாதித் தரப்புக்கு 01 ஆவது பிரதிவாதித் தரப்பு அறிவித்துள்ளமை அவதானிக்கப்படுகிறது.

இங்கு, 01 ஆவது பிரதிவாதி தரப்பிற்கமைய, அத்தகைய பயண நிறுத்தமானது (தடுப்பு) ஒரு குற்றவியல் குற்றத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு, முறைப்பாட்டாளரை தடுத்தமைக்கான காரணம், அவர் வெளிநாடு சென்றால் பொதுமக்கள் கொந்தளிப்பு ஏற்படாலாமெனவும், விசாரணைக்கு இடையூறு ஏற்படும் என்பதாலும்தான் நிறுத்தப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பிரதிவாதி தெரிவித்துள்ளார். அதன்படி, அத்தகைய நியாயமற்ற முன்அனுமானத்தின் அடிப்படையில் ஒருவரின் பயணத்தை மட்டுப்படுத்துவதற்கான வாய்ப்பு சட்டத்தினால் ஏற்படுத்தப்படவில்லையென என்று ஆணைக்குழுவினால் கண்டறியப்படுகின்றது.

**நவசிவாயம் எதிர் குணவர்தன** வழக்கில் நீதிபதி சர்வானந்தா மற்றும் நீதிபதி அத்துகோரள மற்றும் நீதிபதி H.A.G. டி சில்வா ஆகியோர் இணைந்து வழங்கிய தீர்ப்பில், பொலீஸ் அதிகாரி முறைப்பாட்டாளரிடம் களவொன்று தொடர்பாக விசாரிப்பதற்காக பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமாறு கூறி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலத்தைப் பதிவுசெய்து அவரை விடுவித்திருந்தாலும் அங்கு அவரது வாகனத்தையும் பயணத்தையும் நிறுத்திவிட்டு, முறைப்பாட்டாளரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டமை ஊடாக அவர் செல்ல நினைத்த இடத்திற்கு செல்ல அனுமதிக்காமல் அவரது சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதெனவும், காவல்நிலையம் என்றும், அது சட்டவிரோத கைது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்த சட்ட ரீதியான நிலைமை மற்றும் நிகழ்வு சார்ந்த விடயங்களுக்கமைய 01, 02, 03 பிரதிவாதி தரப்புக்கள் பாதிக்கப்பட்ட தரப்பு தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல் நடைமுறைக்கு புறம்பாக செயற்பட்டிருப்பதனை ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படுகின்றது. மேலும் 13(1) உறுப்புரைக்கமைய சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட அலுவல்கள் நடைமுறைக்கமையவன்றி, எவரையும் கைது செய்யக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. **கபுகி கியனகே எதிர் ஹெட்டிஆராச்சி மற்றும் மேலும் இருவர் (1984) 2 SLR 153** தீர்ப்பின்போது சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட அலுவல் நடைமுறை என்பது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படுகின்ற நடைமுறையைத் தவிர வேறெதுவுமில்லை என தீர்ப்பளிக்கப்பட்டது. அதன்படி, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 32 (1) இன் படி எவரேனுமொரு நபருக்கு எதிராக நியாயமான முறைப்பாடொன்று செய்யப்பட்டால் நியாயமான சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்ய முடியுமாயினும் அதற்கான காரணங்கள் இருத்தல் வேண்டும்.

பிரதிவாதித் தரப்பு விடயங்களை முன்வைக்கும்போது, கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், குற்றவியல் குற்றம் இடம்பெற்றுள்ளதாக போதிய தகவல்கள் கிடைத்ததன் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக 01 ஆம் பிரதிவாதியும் 02, 03 பிரதிவாதிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அத்துடன், பிரதிவாதித் தரப்புக்கு எதிராக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளான இணையம் ஊடாக பௌத்த மதத்திற்கு எதிராக வெறுப்புணர்வையும், வெறுப்பையும் ஏற்படுத்தும் வகையில் அறிக்கைகளை வெளியிட்டு மத சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை இடையூறை ஏற்படுத்தும் வகையில் விசாரணை செய்ததாக 1, 2, 3 ஆகிய பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.
பிரதிவாதிகள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்டவரின் சர்ச்சைக்குரிய கருத்து வெளியிடலானது புத்தர் பெருமானின் குழந்தைப் பருவம் மற்றும் பௌத்த வரலாறு மற்றும் அது தொடர்பான பௌத்த தத்துவத்தில் போதிக்கப்படும் பௌத்தர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கைகளை சாதாரண விடயமாகக் கருதி அதனை அவமதிக்கும் விதத்தில் மற்றும் அதனூடாக அந்தத் தத்துவத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்கு மகிழ்ச்சியின்மை, தெளிவின்மை, முரண்பாடு, அமைதியின்மை, விரோதம் அல்லது அதற்கான தூண்டுதலை ஏற்படுத்தும் விதத்தில் அவர் நடந்துகொண்டதாக விடயங்கள் தெரியவந்ததையடுத்து, அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, பிரதிவாதித் தரப்புடன் தொடர்பாக 2023.05.27 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற எழுத்துமூல முறைப்பாடுகள் தொடர்பில் கவனத்தைச் செலுத்தும்போது, அந்த முறைப்பாடு 2023.05.27 ஆம் திகதி 9.30 மணியளவில் பதிவு செய்யப்பட்டதை அவதானிக்க முடிகிறது.

பிரதிவாதித் தரப்பின் விசாரணை பிரித்தெடுப்பு மீது கவனத்தைச் செலுத்தும்போது 2023.05.27 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் இணையக் கண்காணிப்பு ஆரம்பிக்கப்பட்டதாகவும், மு.ப. 10.40 மணியளவில் மேலதிக சாட்சியங்களை சேகரிக்குமாறு அறிவுறுத்தி வாக்குமூலத்தை வழங்கியவரை (பெண்ணை) பற்றிய கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதாக 03 ஆம் பிரதிவாதி குறிப்புகளை இட்டுள்ளார்.

மேலும், 2023.05.27 ஆம் திகதி 14.00 மணிக்கு, 2024.05.27 ஆம் திகதி இந்த நபரின் (பெண்ணின்) பிறிதொரு நிகழ்ச்சி நடைபெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் அது தொடர்பாக சோதனையிடுவதற்கு அதிகாரிகளை அனுப்பியதாக குறிப்புக்கள் இடப்பட்டுள்ளன.

2023.05.27 ஆம் திகதி 16.00 மணியளவில் இடப்பட்ட குறிப்பின்படி, "மேற்கண்ட நிகழ்ச்சி நடத்தப்படாது என தனிப்பட்ட உளவாளியால் தெரிவிக்கப்பட்டமை காரணமாக, பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டு, அவருடைய அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்த நபரை நாட்டை விட்டு தப்பிச் செல்வதற்கு முன்னர் தடுத்து வைக்குமாறு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய வளாகத்தின் குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பிரிவுக்கு தொலைபேசிச் செய்தி அனுப்பப்பட்டது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023.05.27 ஆம் திகதி மு.ப. 12.44 மணியளவில் பாதிக்கப்பட்டவரைக் கைது செய்யுமாறு அறிவிக்கப்பட்ட ஆவணம் கிடைத்ததாக 04 ஆவது பிரதிவாதித் தரப்பு குறிப்பிடுகிறார். இதன்படி, பிரதிவாதி தரப்பின் விசாரணைக் குறிப்புகளின்படி, முறைப்பாடு விசாரிக்கப்படுவதற்கு முன்னதாகவே குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு அந்த தடுப்பை மேற்கொள்ளுமாறு சுட்டிக்காட்டும் ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக நேரங்கள் மீது கவனம் செலுத்தும்போது அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

இதன்படி முறையான விசாரணையின்றி, முறைப்பாடு கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாக தடுத்து வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளமை கவனத்திற்கொள்ளப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் வெளியிடப்பட்ட கைது செய்யப்பட்ட நபர்கள் தொடர்பான பற்றுச்சீட்டு A 979117 மீது கவனத்தைச் செலுத்தும்போது தேசிய, இன, மத வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடலே கைதுக்கான காரணமாக குறிப்பிடப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

மேலும், 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசன சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் மற்றும் இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 120, 291 (அ) 291 (ஆ) மற்றும் 2007 ஆம் ஆண்டின் கணனிக் குற்றவியல் சட்டத்தின் பிரிவு 06 இன் கீழ் குற்றங்களுக்காக பாதிக்கப்பட்டவர் கைது செய்யப்பட்டார் என நீதிமன்றத்திற்கு விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக B அறிக்கைக்கமைய அவதானிக்கப்படுகின்றது.

இதன்படி, பாதிக்கப்பட்டவர் ICCPR சட்டத்தின் பிரிவு 3(1) இன் கீழ் ஒரு குற்றத்தைச் செய்துள்ளார் எனக் குறிப்பிடப்படுவதுடன், 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் 3 (1) பிரிவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"எந்தவொரு நபரும் யுத்தத்தை பரப்புவதற்காகவோ அல்லது வேறுபட்ட பகைமைகளுக்கு அல்லது அவ்வாறு கருதுவதற்காகவோ வன்முறைச் செயற்பாடுகளுக்கு தூண்டுவதற்காக தேசிய, இன அல்லது மத ரீதியிலான வெறுப்பான செயல்களைச் செய்யக்கூடாது". இந்தச் சட்டத்தின் 03 ஆவது பிரிவு, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் 20 ஆவது பிரிவின் இரண்டாவது உப பிரிவுக்கு சமமானதாக இருப்பதோடு, சர்வதேச அதற்கு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் 19 ஆவது பிரிவுடன் இணைத்து பொருள்கோடல் (வரைவிலக்கணப்படுத்தல்) வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். அதாவது பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்குள் இதை விளக்க வேண்டும் என்று சட்டம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் விடயப் பரப்பு தொடர்பாக சட்ட ரீதியிலான பகுப்பாய்வொன்றை வெளியிட்டு இது பாகுபாடு காண்பித்தல், விரோதம், வேண்டுமென்றே வன்முறையைத்

தூண்டுதலாக இருக்காவிட்டால் வெறுப்பு தொடர்பாக பிரிவு 3 இக்குள் உட்படுத்தக் கூடாதென குறிப்பிடப்பட்டுள்ளது.

அ) தேசிய, இன அல்லது மத வெறுப்பு தொடர்பில் தோற்றுதல் மற்றும்

ஆ) பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறைக்கு தூண்டுதல் ஆகிய இரண்டு அடிப்படை பிரிவுகள் ICCPR சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ் குற்றமாக கருதப்படுவதற்கு இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட **'ரபாத்'** செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஆறு பகுதிகளைக் கொண்ட சோதனையை இங்கே கவனத்திற்கொள்ள வேண்டும். தொடர்புடைய சமவாயத்தின் 20 ஆவது பிரிவிற்கமைய வெளியிடப்பட்ட கருத்து துவேசக் கருத்தொன்றாகுமா? எனக் கண்டறியும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களாவன: அ) சூழல் (Context), ஆ) கருத்து வெளியிடுபவர் (Speaker), இ) கருத்து வெளியிடுபவரின் நோக்கம், (Intention of Speaker), ஈ) கூற்றின் (கருத்தின்) உள்ளடக்கம் மற்றும் தன்மை (Content) , உ) கருத்தின் (கூற்றின்) அளவு (Extent and Magnitude of the expression ) ஊ) கிட்டிய (உடனடி) பாதிப்பு (Imminent harm)

இங்கே, அந்த 06 பகுதிகள் பின்வருமாறு கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

I. சூழல் (Context), - கருத்துக்கள் பரவிய சந்தர்ப்பத்தில் நிலவிய அரசியல் மற்றும் சமூக சூழ்நிலை (உதாரணமாக, மோதல் சூழ்நிலையொன்று நிலவுகின்றதா என்பது பற்றி, மோதலையுடைய வரலாறொன்று இருக்கின்றதா அல்லது நீண்ட கால பாகுபாடு காண்பிக்கும் போக்கு நிலவுகின்றதா என்பது பற்றி).

II கருத்து வெளியிடுபவர் (Speaker) - வெறுப்பைப் பரப்பும் நபருக்கு தனக்கு செவிமடுப்போர் மீது செல்வாக்கு செலுத்தும் சக்தி உள்ளதா என்பது பற்றி (உதாரணமாக: ஒரு முக்கிய பொது மக்களுடன் தொடர்புடைய கதாபாத்திரம், அரச அதிகாரி அல்லது அதனையொத்த பதவிநிலை இருத்தல், மதத் தலைவராக அல்லது பார்வையாளர்கள் மீது பாதிப்புச் செலுத்தக்கூடிய ஒருவராக இருத்தல்)

செல்வாக்கு செலுத்துவதற்கான அதிகாரம் (சக்தி) இருக்கின்றதாவென தான் வகிக்கும் பதவியின் ஊடாக கிடைக்கின்ற அதிகாரம் அல்லது சமூக அந்தஸ்தை அந்த நபர் கொண்டிருத்தல் வேண்டும் என்பது இதிலிருந்து கருதப்படுவதில்லை. ஒரு நபருக்கு தனக்கு செவிமடுப்போரை கவருவதற்கான ஆற்றல், நபரொருவருக்கு தனது மனப்பாங்கை உணர்த்துவதற்கான ஆற்றல் மற்றும் கேட்போரின் கருத்தை மாற்றியமைப்பதற்கான ஆற்றல் தனக்கு செவிமடுப்போரை வெறுப்பு அல்லது வன்முறைக்கு நகர்த்தும் அளவிற்கு இருக்கும் ஆற்றலைக் கருதப்படுகின்றது. அத்தகைய நபரின் சமூக அந்தஸ்து அல்லது அவரது செல்வாக்கை நிலைநிறுத்த உதவலாம் என்றாலும், வலுவான சமூக அந்தஸ்து மாத்திரம் இருத்தல் போதாது.

III. கருத்து வெளியிடுபவரின் **நோக்கம்**, (Intention of Speaker), - ஒரு நபர் தனது செயல்களின் விளைவுகளைத் தெரிந்துகொண்டு, வெறுப்பூட்டும் பேச்சை தானாக முன்வந்து (தன்னார்வத்துடன்) பரப்பினால் மற்றும் அதுபோன்ற விளைவுகள் உடனடியாகத் தொடரும் என்பதை அறிந்திருந்தால் அத்தகைய நபருக்கு இந்த குற்றத்திற்கான **நோக்கம்** உள்ளது.

IV கூற்றின் (கருத்தின்) உள்ளடக்கம் மற்றும் தன்மை (Content) - உள்ளடக்கத்தின் ஆத்திரமூட்டும் தன்மை, அதில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாதங்கள், வாதங்களின் தன்மை மற்றும் வாதங்களில் பயன்படுத்தப்படும் வெளிப்படுத்தல் முறை, வெளிப்படுத்தலின்போது பயன்படுத்தப்படும் தொனி போன்றவை.

V கருத்தின் (கூற்றின்) அளவு (Extent and Magnitude of the expression ) - கருத்து (கூற்று) பொது இடத்தில் வெளிப்படுத்தப்படுகின்றதா மற்றும் பார்வையாளர்களின் எண்ணிக்கை.

VI கிட்டிய (உடனடி) பாதிப்பு (Imminent harm) - தூண்டுதல் காரணமாக உடனடியாக தீங்கு விளைவிக்கப்படும் என்று நியாயமாக எதிர்பார்க்க வேண்டும்.

இதற்கமைய, மேற்படி விடயங்கள் தொடர்பாக விசாரணையின்போது பிரதிவாதித் தரப்பு கவனம் செலுத்தியதா என்பது பற்றிக் கவனத்தைச் செலுத்தும்போது, பிரதிவாதி தரப்பின் விசாரணைக் குறிப்புகள் மற்றும் வழங்கியுள்ள வாக்குமூலங்களுக்கமைய, பாதிக்கப்பட்டவரின் கருத்து வெளிப்படுத்தப்பட்ட காலப் பகுதியில் மதக் கலவரமோ, இன ரீதியிலான மோதல்களோ இடம்பெற்றதாக எந்தவிதமான குறிப்பையும் காணக் கிடைக்கவில்லையென்பதனைப் போன்றே கருத்து வெளியிடுபவர் பற்றிக் கவனத்திற்கொள்ளும்போது கருத்து வெளியிடுபவர் இந்த விடயம் தொடர்பாக YouTube சேனலில் பிரசித்தப்படுத்தப்பட்டதன் பின்னரே மக்கள் அறிந்து கொண்டுள்ளனர் என்ற விடயம் ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்க்கச் செய்கின்றது. அதன்போது இந்த நபர் (பெண்) 2023.04.01 ஆம் திகதி மேற்கொண்ட 'மொடாபிமானி' நிகழ்ச்சியின்போது பார்வையாளர்கள் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. ஆனாலும் 2023.05.23 ஆம் திகதி YouTube சேனலில் வெளியிடப்பட்டதன் பின்னரே இது கேள்விக்குறியாகியுள்ளது என்பது கவனிக்கத்தக்க விடயமாகும்.

மேலும், கருத்து வெளியிடுபவர் Standup comedian (நகைச்சுவை நிகழ்ச்சித் தொகுப்பாளர்) என்பது அவர் இதற்கு முன்னர் தொகுத்து வழங்கிய நகைச்சுவை நிகழ்ச்சிகளைக் கவனிக்கும்போதும் அவர் 'மொடாபிமானி' என்ற நிகழ்ச்சி ஊடாக வெறுமனே நகைச்சுவை பொழுதுபோக்குக்காக மாத்திரமே அந்த நிகழ்ச்சியை நடாத்தியுள்ளார் என்ற விடயம் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படுகின்றது. ஆனால் பொலிஸாரின் விசாரணையில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்படுகிறது.

மேலும், இந்த பாதிக்கப்பட்டவரின் 'மொடாபிமானி' நிகழ்ச்சியின் இலக்காகக்கொள்ளப்பட்ட குழுவுக்கு இந்த நிகழ்ச்சியின்போது பௌத்தர்களுக்கு எதிராக எந்தவிதமான தூண்டுதல் அல்லது வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டது என்ற விடயத்தை வெளிப்படுத்திக்கொள்வதற்கு 01, 02, 03 ஆகிய பிரதிவாதிகளால் கண்டறிய முடியவில்லை என ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளதுடன், வெறுமனே பொழுதுபோக்கிற்காக வந்தவர்களே இலக்காகக்கொள்ளப்பட்ட குழு என்ற விடயம் சம்பந்தப்பட்ட வீடியோவைப் பார்ப்பதன் மூலம் அவதானிக்கப்படுகிறது.

மேலும், கருத்து வெளியிடுபவரின் நோக்கம் பற்றியும் கவனத்திற்கொள்ளும்போது மற்றும் முழு நிகழ்ச்சி மீதும் கவனத்தைச் செலுத்தினால் அது வெறும் பொழுதுபோக்கிற்காக மாத்திரம் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சி என்ற விடயம் தெளிவாகிறது.
குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக அவதானிக்கும்போது, **"........ அந்த சுத்தோதனின் குழந்தை.. அந்தக் குழந்தை பிறந்த அதே நாளில் நடந்துள்ளது......... அதற்கு இவர்கள்.... நிமிர்த்தித் தூக்கினால் கழுத்து தொங்குகின்றது........ அந்த சுத்தோதனின் சிறியவன் பிறந்த அன்றே கவிதை வாசித்துள்ளான்..... அதற்கு இவர்கள்.... சுத்தோதனின் பையன் பிறந்த நாளை சொல்லவில்லை.... ஆனால் அவன் வளர்ந்ததும் என்ன செய்வான் என்று முடிவு செய்துள்ளார்கள்..... "** எனும் கருத்து (கூற்று) தொடர்பில் கவனத்தைச் செலுத்தும்போது அதனை மாத்திரம் தனியாக கவனத்திற்கொள்ளக் கூடாதென்பதுடன், அதன் மொத்தக் கருத்தையும் விசாரணையின்போது கவனத்திற்கொண்டிருக்கலாம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கருதுகின்றது.
மேலும், சமூகக் குழுக்கள் மற்றும் மத பக்தர்களுக்கு அந்தக் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாமையினால் மற்றும் அவர்களுடைய உள்ளம் புண்படுத்தப்பட்டமையின் அடிப்படையில் அவமதிக்கின்ற விடயங்கள் அல்லது பொறுப்பற்ற வகையில் கருத்துக்கள் (கூற்றுக்கள்) வெளியிடப்பட்ட மாத்திரத்தில் அது சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயச் சட்டத்தின் 3 (1) பிரிவுடன் தொடர்பற்ற சர்வதேச சட்டம் ஏற்றுக்கொண்டுள்ள நிலைமையாகும்.

இதற்கிணங்க மேற்கூறிய அனைத்து விடயங்கள் மீதும் கவனத்தைச் செலுத்தும்போது பிரதிவாதி தரப்பினால் அடிப்படையில் இந்த பாதிக்கப்பட்ட தரப்பினரைக் கைது செய்வதற்கு ஏதுவான காரணங்களை நியாயமான முறையில் ஆராயாமல் சந்தேக நபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட விடயத்தை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

<u>**கணேசன் சம்சன் றோய் A.M.M ஜானக்க மாரசிங்க நிலையப் பொறுப்பதிகாரி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் SCFR 405/2018 ஆம் இலக்க வழக்கில்**</u> பிரதிவாதி தரப்பு முறையான விசாரணையை மேற்கொள்ளாமல் வெறும் முறைப்பாட்டின் அடிப்படையில் சட்ட விரோத நடவடிக்கை எடுத்தது ஆச்சரியமளிக்கின்றதெனவும், குற்றச்சாட்டை நம்புவதற்கு முடியுமென்ற கருத்தின் அடிப்படையில் பெறப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலீசாருக்கு இயந்திரத்தனமாக கைது செய்ய முடியாது எனவும், பெறப்பட்ட முறைப்பாட்டை நம்பலாமா? அல்லது கொடுக்கப்பட்ட தகவல்கள் நம்பகமானதா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு, விடயங்கள் தெளிவாக இருப்பின் தேவையான விசாரணைகளை நடாத்துவதற்கு பொலீஸ் அதிகாரி ஒருவர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன் தெளிவில்லாத சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்படலானது அரசியலமைப்பின் ஊடாக ஒருவருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட சுதந்திரம் குறிப்பிடத்தக்க அளவில் வரையறுக்கப்படுவதற்கு ஏதுவான காரணமொன்றெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>**மொஹமட் ராசிக் மேசி A.B.M.S.K. சேனாரத்ன, தலைமை பொலீஸ் பரிசோதகர் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பலர் இந்த வழக்கில்**</u> சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயச் சட்டத்தின் கீழ் கைது செயல்முறையைக் குறிப்பிட்டனர். கைது செய்யப்படுவதற்கு முன்னர் அதற்கான காரணங்களை அவர் அறிந்து திருப்தியடைய வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
பாதிக்கப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்போது 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினி வழிக் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினி வழிக் குற்றவியல் சட்டத்தின் 6(1)இன் கீழ் குற்றம் தொடர்பில் மீது கவனத்தை செலுத்தும்போது, பிரதிவாதி தரப்பினர் பாதிக்கப்பட்டவர் மீது கணினி குற்றச் சட்டத்தின் குற்றங்கள் எவ்வாறு தொடர்புடையது என்று கேள்வி எழுப்பப்படுகிறது. பாதிக்கப்பட்டவரால் அவருடைய நகைச்சுவை நிகழ்ச்சியொன்றின் முன்னிலைப்படுத்திய நிகழ்ச்சியொன்று Youtube சேனில் பதிவேற்றம் செய்யப்பட்டமையினால் அது மேற்குறித்த சட்டத்தின் 6 (1) இன் கீழ் கொண்டுவருதல் எந்தளவுக்கு நியாயமானது என்பதுதான் பிரச்சனையாகும்.

நியாயமான காரணத்திற்காக, தகவலொன்றுக்காக, முறைப்பாடொன்றுக்காக கைது செய்யப்பட வேண்டும் என்பது பல்வேறு தீர்ப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயமாகும்.

<u>**தர்மசேன தேரர் உட்பட ஏனையோர் எதிர் சன்ஜீவ மஹானாம மற்றும் ஏனையோர் 1 Sri LR 81**</u> டெப் நீதிபதியவர்கள் தெரிவித்திருப்பதாவது, கைது செய்வதற்காக கட்டளை பிறப்பிப்பதற்காக நியாயமான முறைப்பாடொன்று, நம்பகமான தகவலொன்று அல்லது நியாயமான சந்தேகம் இருத்தல் வேண்டும். முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றமையின் அடிப்படையில் அனைத்து அதிகாரிகளுக்கும் நபரொருவரைக் கைது செய்வதற்கு அனுமதி கிடைக்காது. தகவலொன்று அல்லது முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றதன் பின்னர் அந்த முறைப்பாடு மற்றும் தகவல் நியாயமான முறைப்பாடொன்றா? நம்பகமான தகவலொன்றா? என்பதனை கைது செய்வதற்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்தோடு முறையான விசாரணை மற்றும் உண்மை கண்டறியாமல் வெறும் முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யக்கூடாது என்பதும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளால் தெளிவுபடுத்தப்பட்ட உண்மையாகும்.

**<u>எமில் ரஞ்சன் எதிர் சட்ட மா அதிபர் வழக்கில்,</u>** பொது மக்கள் குழப்பமொன்று ஏற்படக்கூடும் என்று வெறும் விசாரணையின் மூலம் கூறப்பட்ட ஒரு நபரை விளக்கமறியலில் வைப்பதற்கு முடியாது எனவும், விசாரணைக்கு உதவியாக மனுதாரரை விளக்கமறியலில் வைக்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

அத்துடன், இந்த முறைப்பாட்டில் பாதிக்கப்பட்ட தரப்பினால் சிவில் மற்றும் அரசியல் சமவாயச் சட்டத்துடன் தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் முன்வைத்த பிணை கோரிக்கையின் பிரகாரம் 2023.07.25 ஆம் திகதி பிணை வழங்கப்பட்டுள்ளது. அதன்போது மேல் நீதிமன்ற நீதிபதி எம்.பட்டபெந்திகே அவர்கள், இந்த வழக்கின் விடயங்களுக்கமைய எமது நாட்டின் சர்வதேச பொறுப்புக்கூறல் மற்றும் பிணைப்புக்களுக்கமைய உண்மையிலேயே சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ், வெறுக்கத்தக்க கூற்று (கருத்து) வெளியிடப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது குறித்து சர்வதேச பொருள்கோடலையும் கவனத்திற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்வது தவிர நபரொருவரின் முறைப்பாடொன்று கிடைத்த மாத்திரத்தில் ஒரு நபரைக் கைது செய்வது இல்லை என்பதாகும். அதன்படி, பாதிக்கப்பட்டவரைப் பற்றிக் கவனத்திற்கொள்ளும்போது பொது மக்கள் குழப்பமொன்று ஏற்படக்கூடுமென நினைத்து ICCR சட்டத்தின் கீழ் உரிய விசாரணையின்றி அவருடைய (பாதிக்கப்பட்ட பெண்ணின்) வெளிநாட்டுப் பயணத்தை தடுத்து கைது செய்ததன் மூலமும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. பெண்ணின் வெளிநாட்டுப் பயணத்தைத் தடுத்ததன் மூலம் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, பாதிக்கப்பட்டவரின் கைதானது சட்டத்தால் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையின்படி மேற்கொள்ளப்படவில்லை என்று கண்டறியப்பட்டதன் அடிப்படையில் அரசியலமைப்பின் 13(1) பிரிவு மீறப்பட்டுள்ளது என்று முடிவு செய்கிறோம்.

**12(1) ஆம் உறுப்புரையை மீறுதல்**

பாதிக்கப்பட்ட தரப்பின் வாக்குமூலம் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிவாதி குறிப்பிட்டார். 2022.05.23 தேதியிடப்பட்ட RTM 541 இன் கீழ் பொலிஸ் மா அதிபர் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை ஆரம்பிக்கும் விதத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சட்டத்தின் கீழ் விசாரணையை ஆரம்பிப்பதற்கு போதிய விடயங்கள் இருக்கும் போது, அந்த விடயங்களுடன் தொடர்பான அனைத்துச் பிரித்தெடுப்புக்களையும் கொண்ட கோப்பு தயாரிக்கப்பட்டு, தாமதமின்றி பணிப்பாளர் (சட்டப் பிரிவு) க்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது 02 ஆவது விடயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அந்த சட்டத்தின் கீழ் எந்தவொரு நபரையும் கைது செய்வதற்கு முன், அது தொடர்பாக பணிப்பாளருக்கு (சட்டப் பிரிவு) தெரிவித்து அவருடைய அறிவுறுத்தல்களின் அடிப்படையிலன்றி அத்தகைய நபரொருவரை 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயச் சட்டத்தின் கீழ் கைது செய்யக்கூடாது.

மேலும், இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளும்போது அவசர மற்றும் அத்தியாவசிய சந்தர்ப்பங்களின்போது வாய் மூலமாகவாவது பணிப்பாளரின் (சட்டப் பிரிவு) அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதோடு, பின்னர் சட்டப் பிரிவுக்கு பிரித்தெடுப்புக்களையும் கொண்ட கோப்பினை அனுப்புதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோப்பினைப் பரிசீலித்து பணிப்பாளரால் (சட்டப் பிரிவு) வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய இந்த விசாரணை தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வாய்மூலமான அறிவுறுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக தொடர்புடைய பொலீஸ் நிலையத்தில் பேணிவரப்படுகின்ற தகவல்கள் அடங்கிய குறிப்புக்கள் ஏடுகளில் குறிப்புக்களை உள்ளடக்குதல் வேண்டுமெனவும் அந்த அறிவுறுத்தல்கள் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு ஏதேனுமொரு விதத்தில் எழுகின்ற விசேட நிலைமையொன்றின் காரணமாக பணிப்பாளரால் (சட்டப் பிரிவு) வழங்கப்படும் எழுத்து மூலமான அல்லது வாய் மூலமான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளாமல் நபரொருவரைக் கைது செய்ய வேண்டியேற்படுகின்ற சந்தர்ப்பமொன்றின்போது, அவ்வாறு ஏற்படுகின்ற விசேட நிலைமை என்னவென்று அந்த சந்தர்ப்பத்திலேயே மேலே குறிப்பிடப்பட்டவாறு சந்தர்ப்பத்திற்கேற்ப குறித்த குறிப்பேடுகளில் குறித்துக்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பாதிக்கப்பட்ட பெண் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும்போது மேலே பொலிஸ் மா அதிபர் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படவில்லை என்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளதுடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடைபெற்ற விசாரணைகளின் போதும் பிரதிவாதி தரப்பினரும் இதனை ஒப்புக்கொண்டுள்ளனர். கைது செய்யப்பட்டதன் பின்னர் சட்ட மா அதிபர் திணைக்களத்திடமிருந்து அறிவுறுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக 1, 2, 3 ஆம் பிரதிவாதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் இவ்வாறான அறிவுறுத்தலை வெளியிட்டமைக்கான நோக்கம், தவறான கைதுகள் மற்றும் சட்டவிரோத கைதுகளை தடுப்பதற்காகவே என்பது தெளிவாகிறது.

அத்துடன், கைது செய்யப்படுவதற்கு முன்னர் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக, ஒருவர் நியாயமற்ற விடயமொன்றுக்காக கைது செய்யப்படுவதிலிருந்து தடுக்கப்பட்டு, அவர் மேலும் பாதிப்புக்குட்படுவதனைத் தவிர்த்துக்கொள்வதாகும்.

இதுவரை, சட்டமா அதிபர் திணைக்களமும் 2021.06.06 ஆம் திகதி பணிப்பாளருக்கு (கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு) குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கவில்லை என்றும், அவர்களை விடுவிக்க முடியும் என்றும், அது குறித்து நீதவானுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளது. இதன்படி, 2024.06.19 ஆம் திகதி பாதிக்கப்பட்ட பெண் நீதவான் நீதிமன்றில் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதை அவதானிக்க முடிகிறது.

01, 02, 03 பிரதிவாதி தரப்பினர் பொலிஸ் மா அதிபர் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி முதலில் செயற்பட்டிருந்தால் பாதிக்கப்பட்ட தரப்புக்கு இதுவரை நடந்த பாதிப்புக்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டிருக்காது. அத்தோடு ஏற்பட்ட பாதிப்புக்கள் ஈடு செய்ய முடியாத பாதிப்புக்கள் என்பதனை இங்கு மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்துகின்றது.

இதன்படி, 1. 2, 3 ஆகிய பிரதிவாதி தரப்பினர் இந்த அறிவுறுத்தல்களின்படி செயற்படாததன் மூலம் பாதிக்கப்பட்ட தரப்புக்கு சட்டத்தின் பாதுகாப்பு கிடைக்கவில்லை எனவும், அதன் மூலம் இலங்கை அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரை மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை பிரதிவாதிகள் மீறியுள்ளதாக அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.
பாதிக்கப்பட்ட தரப்பினால் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில், அவருடைய பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டிற்கான உரிமையை இழக்கச் செய்தல் தொடர்பாக கவனத்தைச் செலுத்தும்போது இலங்கை அரசியலமைப்பின் 14 (1) (அ) உறுப்புரை இலங்கையின் ஒவ்வொரு பிரஜைக்கும் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை உறுதி செய்கிறது. மேலும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் 19 ஆம் பிரிவுக்கமைய

19 (1) ஒவ்வொருவருக்கும் தனது கருத்தை தடையின்றி வெளிப்படுத்த உரிமை உண்டு
ஒவ்வொருவருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு. மேலும் இந்த உரிமையானது தேச எல்லைகளைக் கடந்து தகவல்கள் அனைத்து வடிவங்களிலும், வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ அல்லது அச்சிடப்பட்டதாகவோ, சித்திரங்கள் வடிவிலோ அல்லது தான் விரும்புகின்ற வேறு எந்த ஊடகத்திலிருந்தோ தகவல்களைக் கண்டறிந்து கொள்வதற்கு மற்றும் அறிவிப்பதற்கான சுதந்திரம் இந்த உரிமையில் உள்ளடக்கப்படல் வேண்டும். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமையொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் முழுமையான உரிமை இல்லையென்பதோடு, அது வரையறைகளுக்கு (மட்டுப்பாடுகளுக்கு) உட்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, அரசியலமைப்பின் 15(2) மற்றும் 15(7) உறுப்புரைகளில் அந்த வரையறைகள் குறிப்பிட்டுள்ளன.

15 (2) இன மற்றும் மத ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமைகள், நீதிமன்றத்தை அவமதித்தல், அவதூறு அல்லது குற்றத்திற்கு தூண்டுதல் தொடர்பாக சட்டத்தால் குறித்துரைக்கப்பட முடியுமான வரையறைகளுக்கு உட்பட்டதாகும்.

15 (7) (அ) தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்குகள் அல்லது பொது சுகாதாரம் மற்றும் பண்பாடுகளைப் பாதுகாப்பதற்காக சட்டத்தினால் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதும், தேவையானவைகளாகவும் இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயத்தின்,

20 (1) போருக்கான அனைத்து பிரச்சாரங்களும் சட்டத்தால் தடைசெய்யப்படல், (2) பாகுபாடு, வெறுப்பு அல்லது கொடுமையான செயல்களுக்கு தூண்டுதலை ஏற்படுத்துகின்ற தேசிய, இன, மத வெறுப்பை பரப்புவது சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது.
எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் குழு அதாவது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக கண்டறியும் சுயாதீன நிபுணர் குழு, ICCPR சமவாயத்தின் 20 ஆவது பிரிவு மற்றும் கருத்து சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டுள்ள அதன் 19 ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது. உதாரணமாக, அந்தக் குழுவின் இலக்கம்: 11 பொது விவரணத்தின்படி 20 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுகின்ற தடைசெய்தலானது பிரிவு 19 இன் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்துடன் இயைந்திருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

அதன்படி, பாதிக்கப்பட்டவரின் கருத்து வெளியிடல் வரம்புக்கு இந்தத் தடை பொருந்துமா என்பதை கவனத்திற் கொள்ளும்போது அந்த வரையறைகளுக்கான பிரிவிற்குள் உள்ளடக்கப்படுகின்றதா? என்பதனைக் கவனத்திற்கொள்ளும்போது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயச் சட்டத்தின் பிரிவு 20 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வெறுப்பை பரப்புவதனைக் கண்டறிவதற்கான **ரபாத்** செயல் திட்டத்தின் 06 பகுதிகளைக் கொண்ட சுயாதீன சோதனையை (Threshold test) அ) சூழல் (Context), ஆ) கருத்து வெளியிடுபவர் (Speaker), இ) கருத்து வெளியிடுபவரின் நோக்கம், (Intention of Speaker), ஈ) கூற்றின் (கருத்தின்) உள்ளடக்கம் மற்றும் தன்மை (Content) , உ) கருத்தின் (கூற்றின்) அளவு (Extent and Magnitude of the expression ) ஊ) கிட்டிய (உடனடி) பாதிப்பு (Imminent harm) மீது இங்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

அதன்படி, பாதிக்கப்பட்டவரால் ICCPR சட்டத்தின் பிரிவு 3(1) மீறப்பட்டதாகக் கூறப்படுகின்ற விடயமானது ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியின்றின்போது வேண்டுமென்றே நகைச்சுவையான ஒரு கலை வெளிப்பாடு ஆகும். இது ஒரு அரசியல், மத அல்லது கல்வி சார்ந்த மேடை அல்ல. நகைச்சுவைக் கருத்துக்களை உள்ளடக்கிய வெளிப்பாட்டின் மூலம் மக்களை மகிழ்விக்கும் ஒரு கருத்து வெளிப்பாடு என்ற விடயத்தை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.
புத்தர் பெருமானின் குழந்தைப் பருவத்தைக் குறிப்பிடுவதன் மூலம், மனுதாரர் பௌத்த போதனைகள் மீதான நம்பிக்கையை இழிவுபடுத்தவில்லை, மாறாக அது நடந்துகொண்டிருக்கின்றது என்பதனை ஏற்று ஏனைய குழந்தைகளைப் போன்றே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் திறமைகள், ஆற்றல்களையும் அவ்வாறு எதிர்பார்க்கக்கூடாது என்பதையும் ஒப்புக்கொள்ள வாய்ப்பளிக்கிறார். சம வயதுடைய குழந்தைகளைப் பற்றி அவ்வாறு கூறுவதுடன், தமது பிள்ளைகள் யார் என்பதைப் பெற்றோர்கள் புரிந்துகொள்வதை உறுதிப்படுத்தும் ஒரு கருத்து வெளிப்பாடே தவிர மத நம்பிக்கைகளை அவமதிக்கவோ அல்லது அவதூறு ஏற்படுத்துவதனையோ நோக்கமாகக் கொண்ட கருத்து வெளிப்பாடு இல்லையென்ற விடயமும் அவதானிக்கப்படுகின்றது.

மேலும், தனது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது பாதிக்கப்பட்டவர் பயன்படுத்திய வெளிப்பாடுகளின் நிலை மற்றும் தன்மை எந்த அதிகாரப்பூர்வ தொனியையும் பிரதிபலிக்கவில்லையென்பதோடு அவரால் முன்னிலைப்படுத்தப்பட்ட கூற்றுடன் இணங்குமாறு பார்வையாளர்களுக்கு எந்தவிதமான கோரிக்கையையும் முன்வைக்கவுமில்லை. அதற்கமைய, பாதிக்கப்பட்ட நகைச்சுவை நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்ற வகையில், நேரடியாகவோ அல்லது

மறைமுகமாகவோ மத நம்பிக்கைகளை கேள்விக்குட்படுத்தவோ அல்லது எந்தவொரு நபர் மீதும் மத வெறுப்பை தூண்டும் நோக்கமோ இல்லை என்பது மேலும் அவதானிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவரின் கருத்து வெளிப்பாட்டின் அடிப்படையில் எந்தவொரு நபரும் வேறொரு மதத்திற்கு எதிராக பாரபட்சம், விரோதம் அல்லது வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை. எந்தவொரு நபரும் பாரபட்சமான, விரோதமான அல்லது வன்முறையான முறையில் மத முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும் என்று நியாயமாக கருதுவதற்கு நம்பகமான ஆதாரம் எதுவும் இல்லை.
எனவே, ஆறு பகுதிகள் கொண்ட 06 பகுதிகளைக் கொண்ட சுயாதீன சோதனையில் (Threshold) பட்டியலிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வெறுப்புப் பேச்சுக்குத் தேவையான பகுதிகளுக்குள் கருத்துக்கள் உட்படவில்லை என்பதால், மனுதாரர் தெரிவித்த கருத்துகள் மத வெறுப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை, அவை பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டவில்லை. எனவே, இது ICCPR சட்டத்தின் பிரிவு 3(1) ஐ மீறவில்லை.

பாதிக்கப்பட்டவர் பாரபட்சம் (பாகுபாடு), விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டுதல் என்பவற்றுக்காக எந்தவிதமான துணையும் போகாதிருக்கும்போது, பாதிக்கப்பட்டவரின் கருத்துக்கள் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவோ அல்லது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் என்பதனை சட்டப்பூர்வமாக நிறுவ முடியாது. எனவே, இந்தக் கருத்து வெளிப்பாடு அரசியலமைப்பின் பிரிவு 15(7) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைக்குள் அடங்கும் என்று பிரதிவாதிகள் விடயங்களை முன்வைக்கவில்லையென்பதோடு, பாதிக்கப்பட்டவரின் கருத்து வெளிப்பாடு இலங்கை அரசியலமைப்பின் 15 (7) இன் வரையறைக்குள் உள்ளடக்கப்படாது என்ற விடயத்தை ஆணைக்குழுவினால் அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் கருத்தை தவறாக புரிந்து கொண்டதன் அடிப்படையில் ஒரு மதத்தை சேர்ந்த சிலருக்கு பாதிப்பு ஏற்பட்டதாக கூறப்பட்டாலும், தவறான புரிதலின் அடிப்படையில் தன்னை காயப்படுத்திக்கொள்ளும் ஒருவருக்கு அந்த கருத்தை தெரிவித்த நபரை பொறுப்பாக்குவது மிகவும் அநியாயமாகும். எனவே, பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதில் எந்தவொரு வெளிப்பாட்டையும் வெளிப்படுத்தும் நபரின் ”நோக்கம்” மீது கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம், பாதிக்கப்பட்டவரின் கருத்துக்கள் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட எந்த வரம்புகளுக்கும் உட்பட்டவை அல்ல என்பது மேலும் கவனிக்கப்படுகிறது. இந்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவரின் கருத்து சுதந்திரம் மீறப்பட்டுள்ளதாக தீர்மானிக்கின்றோம்.

பல்வேறு வழக்குத் தீர்ப்புக்கள் இந்த உரிமையின் விடயப் பரப்பு பொருள்கோடப்பட்டுள்ளது (வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது). **ஜோசப் பெரேரா அல்லது புரூட்டன் பெரேரா எதிர் சட்ட மா அதிபர் மற்றும் ஏனையோர் வழக்கில்,** நீதிபதி ஷர்வானந்தா அவர்கள், ‘‘நமது அரசியலமைப்பின் கீழ் நாம் உறுதியளித்துள்ள சுதந்திர சமூகத்தில் அடிப்படை விழுமியங்களில் ஒன்று, நாம் மதிக்கும் சிந்தனைக்கு மட்டுமல்ல. ஆனால் நாம் வெறுக்கும் சிந்தனைக்கும் சுதந்திரம் இருத்தல் வேண்டும் என்ற கருத்தானது மிகக் குறைந்த சமூக முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரியமற்ற கருத்துக்கள் நிலவுகின்ற சூழ்நிலையை வெறுக்கின்ற கருத்துக்களையும் கொண்டுள்ள, அனைத்துக் கருத்துக்களுக்கும் சுதந்திரமாக பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டிற்கு சட்ட ரீதியான பாதுகாப்பு உண்டு.’’ எனத் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க, பாதிக்கப்பட்டவர் தொடர்பாக அரசியலமைப்பின் 14 (1) (அ) உறுப்புரை மீறப்பட்டுள்ளதாக தீர்மானிக்கின்றோம்.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்கள் மீதும் கவனத்தைச் செலுத்தும்போது, பாதிக்கப்பட்ட தரப்பு தொடர்பாக அரசியலமைப்பின் 13(1) 12 மற்றும் 14 (1) (அ) உறுப்புரைகள் ஊடாக பாதுகாக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை 1, 2, 3 பிரதிவாதித் தரப்புக்கள் மீறியுள்ளதுடன், 4 ஆவது தரப்பு 12 ஆவது உறுப்புரையை மீறியுள்ளதாக தீர்மானிக்கின்றோம். அதன்படி, பின்வரும் பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.

01. மேற்குறிப்பிடப்பட்ட 1, 2, 3 ஆகிய பிரதிவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து பொலிஸ் மா அதிபர் விசாரணையொன்றை நடாத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

02. 4 ஆவது பிரதிவாதி தரப்பு பொலிஸ் மா அதிபருடன் கலந்துரையாடி, குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு பயணத்தடை மற்றும் தடுப்புக்காவல் தொடர்பான வழிகாட்டல்கள் கோவையொன்றை தயாரித்து அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் அறிவூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

03. குற்றவாளிகள் நாட்டை விட்டு வெளியேற முயற்சிக்கும்போது குடிவரவுத் திணைக்களத்தில் குற்றவாளிகளை தடுத்து வைத்தல் தொடர்பான பொலிஸ் மா அதிபரால் இற்றைப்படுத்தப்பட்ட முறையான வழிகாட்டல் முறைமையொன்றை தயாரித்தலும், அது சம்பந்தமாக தொடர்புடைய அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவூட்டுகின்ற வேலைத் திட்டமொன்றைத் தயாரித்து அதன் முன்னேற்றம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

04. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயச் சட்டத்தின் பிரிவு 03 தொடர்பாகவும், பொலிஸ் மா அதிபர் வெளியிடப்பட்டுள்ள RTM 541 இன் பிரகாரம் மற்றும் சட்டத்தின் கீழ் கைது செய்தல் தொடர்பான நடைமுறை தொடர்பாக அனைத்து நிலையப் பொறுப்பதிகாரிகள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு அறிவூட்டும் வேலைத்திட்டத்தை தயாரிப்பதை இலங்கை பொலீஸ் துரிதப்படுத்த வேண்டும்.

05. பாதிக்கப்பட்ட தரப்புக்கு ஏற்பட்ட பாதிப்புக்காகரூ. 50000/- தொகையை 1, 2, 3 பிரதிவாதிகள் இணைந்து செலுத்துவதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

2024.11.14 ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் பரிந்துரையை நடைமுறைப்படுத்தி அது தொடர்பான அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 15 (7) ஆம் பிரிவின் பிரகாரம், பிரதிவாதிகளுக்கு அறியத் தருகின்றோம்.

அத்துடன், இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டிய தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் இந்தப் பரிந்துரையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக முறைப்பாட்டாளரும் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டுமென்பதோடு, அந்தத் தேதிக்கு முன்னர் தொடர்புடைய அறிவித்தலை மேற்கொள்ளாவிட்டால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்பட மாட்டாதெனவும் மேலும் அறியத் தருகின்றோம்.

உயர் நீதிமன்ற நீதிபதி (ஓய்வு பெற்ற)
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஆணையாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

**பிரதிகள் :-**

01. கௌரவ அமைச்சர் - பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு

02. பொலீஸ் மா அதிபர், பொலீஸ் தலைமையகம், கொழும்பு 01

03. தவிசாளர், பொலீஸ் ஆணைக்குழு, பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம்

**<u>பரிந்துரை இலக்கம் - 03</u>**

***பாதிக்கப்பட்ட தரப்பினர்:***

*01. எச். எம். ரஷ்மி காஞ்சன,*
*B35/2, நெதிகம்வில, கோனகமுவ,*
*திஸ்ஸமகாராம.*

*02. அன்ரனி சுரேஷ்,*
*12/6, மீதொட்டமுல்ல வீதி,*
*வெல்லம்பிட்டி.*

*03. டப்ளியூ. எம்.சமிந்த சமன் குமார,*
*பல்லெவத்த, தொரவதெனிய,*
*நாவலப்பிட்டி.*

*04. பி.ஜீ.சாமர லக்சான் செனெவிரத்ன,*
*ஆனமடுவை (முகவரி தரப்படவில்லை)*

*05. எம்.எப்.என். பஸ்லான்,*
*இலக்கம் 132/369, தமெல் மாவத்தை,*
*கிராண்ட்பாஸ்,*
*கொழும்பு 14.*

*06. இஷாரகே சஞ்ஜு ப்ரதீப்,*
*இலக்கம் 77/29,*
*வேபடமுல்லை.*

***பிரதிவாதிகள் :***

*01. எம்.எல்.எல். உதார சுமனபால, ( இரண்டாம் தர ஜெய்லர்) இளம் குற்றவாளிகளின் பயிற்சி பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாம் இலங்கை சிறைச்சாலை, வட்டரெக்க, பாதுக்கை*

*02. எம்.டி.பெரேரா ( பொறுப்பதிகாரி). இளம் குற்றவாளிகளின் பயிற்சி பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாம் இலங்கை சிறைச்சாலை, வட்டரெக்க பாதுக்கை*

*03. கே.ஐ.டி பெரேரா (Bவாட்டின் பொறுப்பதிகாரி) இளம் குற்றவாளிகளின் பயிற்சி பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாம் இலங்கை சிறைச்சாலை, வட்டரெக்க பாதுக்கை*

*04. டி. எம். நிமல் சாந்த (உதவி சிறைச்சாலை அத்தியட்சகர்) இளம் குற்றவாளிகளின் பயிற்சி பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாம் இலங்கை சிறைச்சாலை, வட்டரெக்க பாதுக்கை*

*05. அஜித பல்லியகே (தலைமை ஜெய்லர்) இளம் குற்றவாளிகளின் பயிற்சி பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாம் இலங்கை சிறைச்சாலை, வட்டரெக்க பாதுக்கை (தற்போதைய அலுவலக முகவரி வெலிக்கடை)*

**முறைப்பாட்டு இலக்கம் : HRC/904/20/I(Vi)**

**2020** மே மாதம் **23** ஆம் தேதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அவசர கால அழைப்பு இலக்கத்திற்கு வந்த ஓர் அநாமதேய தொலைபேசி அழைப்பினூடாக, வட்டரெக்க இளம் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாமுக்குள் ஆறு இளைஞர்களுக்கெதிராக மனிதாபிமானமற்ற முறையில் ஜெய்லர் ஒருவர் நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழு டி எம் நிமல் சாந்த (சிறைச்சாலை உதவி அத்தியட்சகர்) உடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டபோது, இந்நிகழ்வுடன் தொடர்புடைய உள்ளக விசாரணையொன்று மேற்கொள்ப்பட்ட வண்ணமுள்ளதாக அறிவித்திருந்தார். அச்சந்தர்ப்பத்திலேயே உள்ளக விசாரணையை மேற்கொள்கின்ற அலுவலரான அஜித் பல்லியகே (தலைமை ஜெய்லர்) உடன் தொடர்பு கொண்டு விளக்கம் கோரப்பட்டது.

அதற்கிணங்க, **2020** மே மாதம் **26** ஆம் தேதி வட்டரெக்க சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நிகழ்வுக்கு உள்ளாக்கப்பட்ட **06** கைதிகளையும் நீதிமன்ற வைத்திய அலுவலரிடம் **48** மணித்தியாலங்களுக்குள் துரிதமாக முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும், அத்தகவல்களை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு தொலைநகல் ஊடாக அனுப்பி வைக்குமாறும், சிறைச்சாலையினால் நடாத்தப்பட்ட அடிப்படை விசாரணை தொடர்பான அறிக்கைகள் மற்றும் சிறைச்சாலை வைத்தியசாலையினால் கைதிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட விபரங்கள் பற்றிய ஆவணங்கள் என்பவற்றின் மூலப்பிரதிகளை அனுப்பி வைக்குமாறும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்டிருந்தது.

சிறைச்சாலை அத்தியட்சகர் (இளம் குற்றவாளிகளுக்கான பயிற்சி பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாம்) **2020.06.15** ஆம் திகதி வரை மனித உரிமை ஆணைக் குழுவுக்கு இது தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்கத் தவறியிருந்தார். மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைக் குழுவொன்று **2020.06.15** ஆம் திகதி வட்டரெக்கை இளம் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாமுக்கு நேரடியாக விஜயம் செய்து களப் பரிசோதனையொன்றை மேற்கொண்ட போது இவ்விளம் கைதிகள் நீதிமன்ற வைத்திய அலுவலரிடம் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. ஆதலால், மீண்டும் **2020.06.16** ஆம் திகதி சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உரிய கைதிகளை நீதிமன்ற வைத்திய அலுவலரிடம் முன்னிலைப்படுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

**2020.06.15** ஆம் தேதி மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது, பாதிக்கப்பட்ட அச்சிறுவர்கள் ஆறு பேரிடமிருந்தும் வாக்குமூலங்கள் தனித்தனியாக குறித்துக் கொள்ளப்பட்டிருந்தன.

**<u>பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்கள்.</u>**

**பாதிக்கப்பட்ட முதலாமவரின் வாக்குமூலங்கள் :**

**B35/2,** நெதிகம்வில, கோனகமுவ, திஸ்ஸமகாராம என்ற முகவரியில் வதிகின்ற **18** வயதையுடைய மிடிதொட்ட ஹேவகே ரஷ்மி காஞ்சன என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார். திவச வீடொன்றில் இரண்டு குழுவினரிடையே ஏற்பட்ட குழப்பமொன்று காரணமாக, வீரவில பொலீசாரினால் கைது செய்யப்பட்டு திஸ்ஸமகாராம நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தப்பட்டதாகவும், ஏற்கனவே அடிதடியில் ஈடுபட்ட குற்றமொன்று தொடர்பான வழக்கொன்று காணப்படுவதாகவும், அது மத்தியஸ்த சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், வட்டரெக்க சிறைச்சாலைக்கு **2019.10.04** ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். இச்சம்பவத்தோடு தொடர்புடைய திகதி குறிப்பாக நினைவில் இல்லையெனவும் பிற்பகல் **3.00 - 3.30** மணியளவில் குளித்து முடித்ததன் பின்னர், வாட்டுக்கு வருகை தந்ததாகவும், வாட்டிலே கூச்சலொன்று காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். கீழே இருந்த ஜெய்லர் உதார அவர்கள், இன்சார்ஜ் தயாபால அவர்கள், காவலாளி பெரேரா ஆகியோர் சத்தம் அதிகமாக உள்ளது எனக் கூறிக்கொண்டு மேலே வந்ததாகவும், “அச்சந்தர்ப்பத்தில் பாத்ரூமில் இருந்து இரண்டு பேர் உடைகள் ஏதும் இன்றி (நிர்வாணமாக) வெளியே வந்தனர்” எனவும் அவர் குறிப்பிட்டார். அப்பொழுது அவர்கள் அங்கு வருகை தந்து, **15** நிமிடங்கள் அளவு கழிந்திருந்ததாகவும், அவர் ஒரு துவாயை அணிந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அவ்விடத்தில் இன்னும் மூவர் உடைகள் எவையுமின்றி (நிர்வாணமாகக்) காணப்பட்டதாகவும், உதார அவர்கள், துவாய் அணிந்தவர்கள், உடை ஏதும் இல்லாமல் இருந்தவர்கள் (ஒரு துவாயைப் போட்டுக் கொண்டு) வருகை தருமாறு அறிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய, அவரோடு **5** பேர் அல்லது **6** பேர் அவ்விடத்திற்கு வருகை தந்ததாகவும் அங்கு “நிர்வாணமாக இருந்தமைக்காக முழந்தாளிட்டு நடக்கச் செய்தார். **10** முதல் **15** நிமிடங்கள் வரை இவ்வாறு செய்தார். தாக்குதல் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை” எனக் குறிப்பிட்டுள்ளார். உடைகள் இல்லையா என உதார அவர்கள் கேட்டபோது, சில கைதிகள் உடைகள் இல்லை எனக் கூறியதாகவும் குறைபாடுகள் தொடர்பாக பார்ப்பேன் எனக் கூறி உதார அவர்கள் வெளியேறியதாகவும் குறிப்பிட்டுள்ளார். முழந்தாளிட்டு நடந்தமையால் முழங்கால்கள் காயமுற்றதாகவும், உடைகள் அற்றவர்களின் பெயர்களை எழுதித் தருமாறு அறிவித்ததன் பின்னர், பலர் பெயர்களை எழுதிக் கொடுத்ததாகவும் குறிப்பிட்டார். சிங்கள இலக்கியச் சங்கம் தொடர்பாகப் பேசியதன் பின்னர், அவர்களுக்கு தமது வேலைகளை செய்யுமாறும், குறைபாடுகள் தொடர்பாக தான் பார்ப்பதாகவும் குறிப்பிட்டுவிட்டு உதார அவர்கள் வெளியேறியதாகக் குறிப்பிட்டுள்ளார். தாக்குதல் எதுவும் நிகழவில்லை. முழங்கால்கள் காயமடையக் காரணம் நடந்தமையே எனவும் குறிப்பிட்டுள்ளார். அடுத்த நாள் காலை தலைமை ஜெய்லர் வருகை தந்து, தாக்குதலொன்று தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளது எனவும், அத்தகையோர் வருமாறு தெரிவித்ததாகவும், அப்போது

அவர்கள் அனைவரும் முன்வந்து வாய்மொழி / வாக்குமூலங்களை வழங்கியதன் பின்னர், சிறைச்சாலை வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். தற்போது பிரச்சினைகள் இல்லையெனவும் அவரது வெளிப்படுத்துகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாதிக்கப்பட்ட இரண்டாமவரின் வெளிப்படுத்துகை:**

இலக்கம் **12/6** மீதொட்டமுல்ல வீதி, வெல்லம்பிட்டி என்ற முகவரியில் வதிகின்ற **19** வயதுடைய அன்ரனி சுரேஷ் என்பவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். **10** ஆம் வகுப்பு வரை பாடசாலைக் கல்வியைப் பெற்றதோடு, பாடசாலை செல்லும் காலப்பகுதியிலேயே போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார். ஐஸ் போதைப் பொருளை பயன்படுத்தியமை காரணமாக, வீட்டினரால் வெல்லம்பிட்டி பொலீசாரிடம் கையளிக்கப்பட்டுள்ளார். மறுவாழ்வு அளிப்பதற்காக **2** ஆம் இலக்க புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தினால் **2019** ஓகஸ்ட் **16** ஆம் தேதி வட்டரெக்கை சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். வருகை தந்ததன் பின்னர், விசேட பிரச்சினை எதுவும் காணப்படவில்லையெனவும், குறித்த சம்பவத்தோடு தொடர்புடைய திகதி தனக்கு நினைவில் இல்லையெனவும், அவர் தன்னுடைய நண்பர்கள் ஐவருடன் **3.00** மணியளவில் குளியல் அறையிலிருந்து துவாய் அணிந்து கொண்டு வருகை தந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். வாட்டிற்கு வருகை தந்ததன் பின்னர், உதார சேர் வாட்டிற்கு வருகை தந்துள்ளார். "அடுத்த ஐந்து பேருக்கும் வாட்டிலே முழந்தாளிடச் சொன்னார். ஏனைய பிள்ளைகள் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு விக்கெட் கம்பு ஒன்றினால் உதார சேர் அடித்தார். கைகளுக்கும் கால்களுக்கும் அடித்தார். அவ்வாறு அடித்த போது விக்கெட் கம்பு கொடியில் பட்டது. என்னுடைய உள்ளாடை அக்கொடியிலிருந்து கீழே விழுந்தது. உதார சேர் ஜொகா யாருடையது என்று கேட்டார். நான் என்னுடையது எனக் கூறினேன். அதன் பின்னர் அதனைப் பொறுக்கியெடுத்து தலையில் சுற்றிக் கொண்டு முழந்தாளில் இருக்கச் சொன்னார். முழந்தாளிடுகின்ற பொழுதே காலினால் பின் புறத்தில் உதைத்தார். பின் புறத்திற்கு அடித்ததினால் காயமேற்படவில்லை. ஆயினும் வலித்தது. முழந்தாளிட்டமையினால் முழங்கால்கள் காயமுற்றன. **10** நிமிடங்கள் அளவில் முழந்தாளிட்டிருந்தேன். அதன் பின்னர் **50** சிப் அடிக்குமாறு கூறினார். நான் முன்னர் இராணுவத்தில் இருந்தேன். ஆமி ட்ரெயினிங் தான் உங்களுக்குத் தருகிறேன். யார் வருகிறீர்கள் சண்டை பிடிக்க **?** நீங்கள் எல்லாரும் சண்டியர்களா**?** என்று கேட்டார். சீப் ஜெய்லர் சேருக்கு உண்மையைக் கூறினால் பொய்யான வழக்குப் போட்டு பள்ளஞ்சேனைக்கு அனுப்புவதாகக் கூறினார்" எனக் குறிப்பிட்டுள்ளார். அவர்களைத் தாக்கிய தினத்தன்று தலைமை ஜெய்லருக்கு இந்நிகழ்வு தொடர்பாக அறியக் கிடைத்ததைத் தொடர்ந்து அடி வாங்கிய **6** பேரையும் அவருடைய அறைக்கு அழைத்து வாக்கமூலங்களைப் பெற்றுக் கொண்ட அதேவேளை, ஏற்பட்டிருந்த காயங்களை புகைப்படம் எடுத்ததன் பின்னர் சிறைச்சாலை வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலை வைத்தியசாலையின் வைத்தியரிடம் உதார சேர் அவர்களைத் தாக்கியதாக அவர்கள் கூறியுள்ளனர். மேலும் சமிந்த என்ற பிள்ளைக்கு குறித்த தாக்குதல் நிகழ்ந்த தினத்தன்று எழுந்து நிற்கக் கூட முடியாத நிலை காணப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். தலைமை ஜெய்லர் அவர்களிடமிருந்து வெளிப்படுத்துகைகளைப் பெற்றுக் கொண்டு விசாரணை நடாத்துவதாகவும் அச்சமின்றி இருக்குமாறும், எதற்கும் அவர் இருப்பதாகவும் கூறியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே தற்போது எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் உதார சேர் மீண்டும் தாக்குவார் என்ற பயம் காணப்படுவதாகவும், மேலும் இரண்டரை ஆண்டு காலம் அங்கு தரித்திருக்க வேண்டி உள்ளமையினால் உதார சேர் அவர்களால் நிகழக்கூடிய அநீதிகள், தொல்லைகளை நிமாறு கோரி அவர் தனது வாக்குமூலத்தை வெளிப்படுத்துகையை வழங்கியுள்ளார்.

**பாதிக்கப்பட்ட மூன்றாமவரின் வாக்குமூலம்:**

பல்லெவத்த, தொரவதெனிய, நாவலப்பிட்டி என்ற முகவரியில் வதிகின்ற **18** வயதான விக்ரமசிங்க முதியன்சேலாகே சமிந்த சமன்குமார என்பவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொலைபேசி திருட்டு ஒன்றுடன் தொடர்புடையதாக **2020.04.02** ஆம் திகதி நாவலப்பிட்டி பொலீஸ் நிலையத்தினால் நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட்டேன். **2020** ஏப்ரல் **6** ஆம் திகதி வழங்கப்பட்ட ஒரு தீர்ப்புக்கு அமைய, **3** ஆண்டுகளுக்கு வட்டரெக்க சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டேன். தனக்கு பேசுவது சிரமமாக உள்ளதாகவும், அது சிறு வயது முதலே காணப்படுகின்ற ஒன்று எனவும் குறிப்பிட்டுள்ளார். அவர் வட்டரெக்க சிறைச்சாலையின் பி வாட்டில் தங்க வைக்கப்பட்டிருந்ததோடு, அங்கு **32** பேர் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இச்சம்பவம் நிகழ்ந்த திகதி தொடர்பாக குறிப்பாக நினைவில் இல்லை எனவும் அவர்கள் **06** பேர் மாலை **3,4** மணிகளுக்கு இடையில் தாங்கியில் குளித்துவிட்டு துவாய்களை அணிந்து கொண்டு வாட்டுக்கு வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். ஒரு மணித்தியாலத்தின் பின்னர், உதார சேர் வருகை தந்து அவர்களுக்கு வரிசையாக நிற்குமாறு அறிவித்துள்ளார். துவாய் அணிந்திருந்தவர்கள் முன்னே வருமாறு அறிவித்து, உங்களுக்கு களிசான்கள் இல்லையா என விசாரித்துள்ளார். அப்போது களிசான்கள் மற்றும் ஷேர்ட்கள் என்பவற்றை துவைத்திருப்பதாகவும் அவற்றை காட்டுமாறு கேட்டவுடன் அவருக்கு அவற்றைக் காட்டியதாகவும் வெளிப்படுத்தியுள்ளார். அப்பொழுது அவர் ஈரமான களிசான்களை அணிந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளார். மேலும் " முழந்தாளிடச் சொன்னார். முழந்தாளிட்ட வண்ணம் சீமெந்து அறையில் **6** பேருக்கும் நடக்குமாறு கூறினார். ஏனையவர்கள் வரிசையில் இருந்தனர். கையில் இருந்த விக்கட் பொல்லினால் பின்புறத்தில் அடித்தார். ஏனையோருக்கும் அடித்தார். **20** சுற்றுக்கள் நடந்தோம். பின்னர் எழுந்து நிற்கச் சொன்னார். அப்போது முழங்கால்களிலிருந்த காயங்களிலிருந்து இரத்தம் வடிந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார். அடுத்த நாள் ஜெய்லர்கள் வருகை தந்து சிறைச்சாலை வைத்திய சாலையிலிருந்து சிகிச்சை அளித்தார்கள். வீடுகளிலிருந்து பார்ப்பதற்கு வருவதாகவும், கொரோனா காரணமாக வீடுகளிலிருந்து வருகை தரவில்லையெனவும் குறிப்பிட்டார். தலைமை

ஜெய்லர் சேரினால் விசாரணை நடாத்தப்பட்டிருப்பதோடு, அவர்கள் உண்மையை வெளிப்படுத்தியுள்ளனரெனவும் கூறினார். மேலும், "உதார சேர் அவ்வாறு செய்த போது எவருமே பேசவில்லை. அவர் வயதில் கூடிய ஒருவரல்லவா" எனவும் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலர்களும் முழங்கால்களை பரிசோதித்ததாகவும், அங்கு அழிந்து போன காய சுவடுகள் காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாதிக்கப்பட்ட நான்காமவரின் வெளிப்படுத்துகை:**

ஆனமடுவையில் (முகவரி நினைவிலில்லை எனக் கூறப்பட்டுள்ளது.) வதிகின்ற **17** வயதான பெந்தலுவா கம்லத்கே சாமர லக்சான் செனெவிரத்ன என்பவர் இவ்வாறு குறிப்பிட்டார் மோட்டார் சைக்கிள் திருட்டொன்று தொடர்பாக ஆனமடுவை பொலீசாரினால் குருநாகலை நீதிமன்றத்திற்கு முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார். நீர்கொழும்பு மற்றும் வெலிக்கடை ஆகிய இடங்களில் தங்க வைக்கப்பட்டிருந்து பிணையில் எடுக்க எவரும் முன்வராத காரணத்தினால், **2019.12.16** ஆம் தேதி **3** ஆண்டுகளுக்கு வட்டரெக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளார். உரிய சம்பவம் நிகழ்ந்த திகதி நினைவில் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் இதற்கு முன்னர் மேல் மாடியில் இருந்ததாகவும், தற்பொழுது பி வாட்டில் இருப்பதாகவும் ஒவ்வொரு நாளும் குளிப்பதாகவும் இந்நிகழ்வு நிகழ்ந்த தினத்தன்று பிற்பகல் **3.00, 3.30** மணியளவில் குளியல் அறையில் **12** கைதிகள் போயிருந்தனரெனவும், குளித்து முடிந்ததன் பின்னர், துவாய்களை அணிந்து கொண்டு வந்ததாகவும் ஒரே ஒரு களிசான் மாத்திரம் இருப்பதனாலும், அது துவைக்கப்பட்டிருந்ததாலும், துவாயை அணிந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மாலை **4** மணியளவில் உதார சேர் வருகை தந்து வரிசையில் இருக்குமாறு அறிவித்துள்ளார். களிசான்களை அணிந்த வண்ணம் வரிசையில் இருக்க வேண்டியிருந்தாலும் அச்சந்தர்ப்பத்தில் களிசான்கள் உலர்ந்திருக்காத காரணத்தினால் **5** பேர் துவாய்களை அணிந்திருந்ததாகவும், துவாய்களை அணிந்திருந்தவர்களை தனியாக வரிசைப்படுத்தியதாகவும் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் "எங்களுக்கு முழந்தாளிடச் சொன்னார். முழந்தாளிட்ட வண்ணம் அங்குமிங்கும் நடக்கச் சொன்னார். பொல்லொன்றை (கிரிக்கெட் பொல்லொன்றை) எடுத்து வந்தார். முழந்தாளிட்ட வண்ணம் அங்குமிங்கும் நடக்கச் சொன்னார். என்னை அடிப்பதற்காக பொல்லைத் தூக்கிய பொழுது அங்கிருந்த துணிகள் உலர வைக்கப் படுகின்ற ஒரு கொடியில் பட்டது. பட்டவுடன் அதிலிருந்த உள்ளாடையொன்று கீழே விழுந்தது. அது அன்ரனி சுரேசுடையது. துணி உலர வைக்கும் கொடி வாட்டின் உள்ளே இருந்தது. உள்ளாடையின் உரித்தாளிக்கு வருமாறு கூறி, அதனை அவருடைய தலையில் போட்டுக் கொள்ளுமாறு கூறினார். அங்குமிங்கும் அவரும் முழங்காலில் நடந்தார்." என குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர், **4** பேர் எழுந்து நின்றார்கள். அன்ரனி சுரேஷ் மற்றும் எனக்கு அவ்வாறே இருக்குமாறு கூறியதாகவும் முழங்கால்களில் காயம் ஏற்பட்டவர்களுக்கு மாத்திரம் எழுந்து நிற்குமாறு கூறியதாகவும் பின்னர் உட்கார்ந்தவாறும் நின்றவாறும் அப்பியாசம் ஒன்றில் ஈடுபடுத்தி, ஏனையவர்களை அனுப்பியதாகவும் கூறினார்.

மேலும் "நான் மாத்திரமே எஞ்சி இருந்தேன். உதார சேர் பொல்லால் என்னுடைய கால்களுக்கு அடித்தார். இரண்டு முறை அடித்தார் நடக்குமாறு கூறி. என்னுடைய கன்னத்துக்கு அடித்தபோது சாராய வாடை அடித்தது. என்னை எழச் செய்து சாப்பாட்டு வரிசைக்கு எடுத்துச் செல்ல முயன்று துவாயைக் கழற்றி விட்டார். தற்பொழுது நிர்வாணமாக இருந்தேன். ஆமி ட்ரைனிங் எனக் கூறி லெஃப்ட், ரைட் என நடக்கச் சொன்னார். வாட்டுக்குள் டாய்லெட்டுக்கு அருகில் மற்றும் கதவுக்கு அருகில் **36** பேரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எவருமே கதைக்கவில்லை. இரண்டு அலுவலர்கள் வாட்டில் இருந்தனர். அவர்களுக்கு ஏசி வெளியே அனுப்பினார்" என வெளிப்படுத்தியுள்ளார். அடுத்த நாள் ஜெய்லர் சேர் வருகை தந்து உண்மையைக் கூறுமாறு குறிப்பிட்டு அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று காயங்களின் புகைப்படங்களை எடுத்து, தொடர்ந்து சிறைச்சாலை வைத்தியசாலையில் முன்னிலைப்படுத்தினார். சிறைச்சாலை வைத்திய சாலையில் இருந்து வருகை தந்த போது உதார சேரின் நண்பர் ஒருவரான ஜெய்லர் எரங்க என்பவர், "சம்பவத்தோடு தொடர்புடையதாக என்ன கூறினீர்கள்" எனக் கேட்டார். உண்மையைக் கூறியதாக எரங்க சேருக்குக் கூறியதாக வெளிப்படுத்தியுள்ளார். அப்பொழுது "இன்னும் எவ்வளவு காலம் சிறை அனுபவிக்க வேண்டி இருக்கின்றது" எனக் கேட்டுள்ளார். இரண்டு ஆண்டுகள் இருப்பதாக கூறியதன் பின்னர், "அப்படியா? இருந்து பார் கஷ்டமாக இருக்கும்" எனக் கூறியுள்ளார் தலைமை ஜெய்லர் அவர்கள் உதார சேரை மீண்டும் வாட்டிற்கு அனுப்புவதை இடைநிறுத்தியுள்ளதோடு, தலைமை ஜெய்லரினால் உரிய சம்பவம் தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**பாதிக்கப்பட்ட ஐந்தாமவரின் வாக்குமூலம்:**

இலக்கம் **132/369,** த மெல் மாவத்தை, கிராண்ட்பாஸ், கொழும்பு **14** என்ற முகவரியில் வதிகின்ற **17** வயதான முஹம்மது பாரிஸ் முஹம்மது பஸ்லான் என்பவர் பின்வருமாறு வெளிப்படுத்தினார். பாடசாலைக் கல்வியை இடை நடுவில் விட்டு விட்டு புறக்கோட்டை நாட்டாமி வேலைகளில் ஈடுபட்டிருந்து, பின்னர் வர்த்தக நிலையமொன்றில் தொழில் புரிந்துள்ளார். **2019** ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு நண்பர்களுடன் சேர்ந்து பழகியுள்ளார். நண்பர்களுடன் அக்காலப் பகுதியில் கொழும்பு சுற்றுப்புற பிரதேசங்களில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளார். **2019.10.20** அல்லது **21**ற்கு அண்மித்த திகதி யொன்றில் திருட்டொன்று தொடர்பாக கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையத்தினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், கொழும்பு விளக்க மறியல் சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதன் பின்னர் வட்டரெக்கை சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். **2020** ஆம் ஆண்டு மே மாதத்தின் திகதியொன்றில் அவர்கள் குளித்துக் கொண்டிருந்தனர். உதார சேர் உள்ளே வந்து வரிசையில் இருக்குமாறும், துவாயை அணிந்து கொண்டுள்ளவர்கள் முன்னே வருமாறும் அறிவித்தார்.

அவரும் முன்னே சென்றிருக்கிறார். மேலும் தாக்குதல் தொடர்பாக "அவர் என்னை கையாலும் காலாலும் அடித்தார். முழந்தாளிடுமாறு கட்டளையிட்டார். அவ்வாறு முழந்தாளிட்ட வண்ணம் நடக்குமாறு கூறினார். பின்னர் ஓடுமாறு கூறினார். எனது கால்கள் வலித்த போது, நிறுத்துவதற்காக நான் மெதுவாகச் சென்றேன். என்னுடைய பின் புறத்திற்கு அடித்துக் கொண்டே வந்தார். என்னை எழுப்பினார். கால்களில் காயங்கள் தென்படவில்லை. மீண்டும் எனக்கு முழந்தாளிட்டு நடக்குமாறு கூறினார். நான் **5** சுற்றுகள் நடந்தேன். என்னுடைய கால்களுக்கு அடித்து அடித்து எழும்புமாறு கூறினார்" என குறிப்பிடப்பட்டுள்ளது. உதார சேர் அவ்வளவு மாத்திரமே செய்துள்ளதாகவும், சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து காயங்களுக்கு மருந்து இடப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**பாதிக்கப்பட்ட ஆறாமவரின் வாக்குமூலம்:**

இலக்கம் **77/29** வேபடமுல்ல என்ற முகவரியில் வதிகின்ற **18** வயது சஞ்சு ப்ரதீப் என்பவர் இவ்வாறு வெளிப்படுத்தினார். **2019.03.22** ஆம் தேதி அத்தனகல்ல நீதிமன்ற கட்டளைக்கமைய, திருட்டுக் குற்றமொன்றிற்கு வட்டரெக்கே சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். **2020** மே மாதம் ஒரு நாள் மாலையில் குளித்துக் கொண்டிருந்து விட்டு வெளியே வந்துள்ளார். அச்சந்தர்ப்பத்தில் உதார சேர் வரிசையில் வருமாறு அறிவித்துள்ளார். துவாய் அணிந்திருந்தவர்களுக்கு வருமாறு அறிவித்திருந்தார். அவர்கள் முன்னே சென்றுள்ளனர். பின்னர் அவர்களுக்கு ஏசி களிசான் ஒன்றை அணிந்து வருமாறு கட்டளையிட்டுள்ளார். "முழந்தாளிடச் சொன்னார். முழந்தாளிட்ட வண்ணம் அங்கும் இங்குமாக தேவையான அளவுக்கு நடக்கச் சொன்னார். பின்னர் இரண்டு முழங்கால்களும் காயமடைந்தன அதன் பிறகு அவருடைய பூட்ஸ் கால்களினால் எனது பின்புறத்திற்கு அடித்தார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் வரிசையில் எழுந்து வருமாறு ஏசி அவர்களை வரிசையில் நிற்க வைத்த வண்ணமே உதார சேர் உட்கார்ந்த வண்ணமிருந்தார். உதார சேர் அவருடன் சண்டை பிடிக்க விரும்புகின்ற , முடியுமானவர்களுக்கு முன்னே வருமாறு அறிவித்திருக்கிறார். அவர்களில் எவரும் முன்வராமையினால் மீண்டும் ஏசி உள்ளார் பின்னர் ஜெய்லர் சேர் வருகை தந்து, அது தொடர்பான விசாரணயொன்றிற்கான வாக்குமூலங்களை பெற்றுக் கொண்ட தோடு, அதையடுத்து சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அனுப்பி காயங்களுக்கு மருந்திட்டுள்ளார்.

**எதிர்வாத தரப்பினரின் விளக்கமளிப்புகள்**

**2020** செப்தெம்பர் மாதம் **21**ஆம் திகதி **1** முதல் **4** வரையிலான பிரதிவாதிகள் மற்றும் **2024** ஜூலை மாதம் **10** ஆம் திகதி **5** ஆம் எதிர்வாதி ஆணைக் குழுவிற்கு அழைக்கப்பட்டு வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**1ஆம் பிரதிவாதியான எம். எல். உதார சுமனபால (இரண்டாம் வகுதி ஜெய்லர்)**

மீகஹவலலேகம்லாகே லக்சித உதார சுமனபால (இரண்டாம் வகுதி ஜெய்லர்) அலுவலரினால் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள வெளிப்படுத்துகைக்கு அமைய, 2020. 05 17 ஆம் திகதி முற்பகல் 8.00 மணிக்கு வட்டரெக்க சிறைச்சாலைக்கு கடமைக்காக அறிக்கையிட்டுள்ளார். அன்று பி 2 வாட்டுக்குப் பொறுப்பான ஜெய்லராக பணியாற்றுவதற்கான கடமைப் பொறுப்புகள் வழங்கப்பட்டன. அங்கு 36 பிள்ளைகள் தங்க வைக்கப்பட்டுள்ளார். அவர்களின் அன்றாட கடமைகளினை மேற்பார்வை செய்யும் பணி அவரின் கீழ் பொறுப்புவிக்கப்பட்டுள்ளதாகவும், இளம் குற்றவாளிகளை உள விருத்திக்குப் பொறுப்பான அலுவலர் என்ற வகையில் அவர் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். நிகழ்வோடு தொடர்புடைய பிள்ளைகள் ஆரம்பத்தில் பி 1 என்ற வாட்டின் சிறைக் கூடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் பி 2 என்ற வாட்டில் அனுமதிக்கப்பட்டதாகவும் இவ்வாறு அவர்கள் அனுமதிக்கப்பட்டு இரண்டு தினங்களின் பின்னர் இப்பிரச்சினை ஏற்பட்டதாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

அன்றாடம் பிள்ளைகளுடன் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை விளையாட்டுப் பணிகளில் ஈடுபடுவதோடு, பகல் 12.30 மணியளவில் உணவளிப்பதற்கும், அதனைத் தொடர்ந்து தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதோடு, பிற்பகல் 2.00 மணி முதல் 2.30 வரையிலான காலப் பகுதிக்குள் குளிப்பதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டு, பிற்பகல் 4.30 மணியளவில் இரவுச் சாப்பாடு வழங்கப்படுமெனவும் குறிப்பட்டுள்ளார். அதன் பின்னர் பிற்பகல் 5.00 மணிக்குப் பொறுப்பேற்கும் ஜெய்லர் மாலை கணக்கெடுப்பை மேற்கொள்வதாகவும் மாலை 5.30 மணியளவில் அவருடைய கடமை முடிவடைவதாகவும், சம்பவத்தோடு தொடர்புடைய தினத்தன்று நாளாந்த கடமைகள் அதே விதத்தில் நடைபெற்றதாகவும், அன்று பகல் கடமைக்காக இரண்டு அலுவலர்கள் தனக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். அதற்கமைய, பி 2 வாட்டுக்குப் பொறுப்பான காவலாளியான கே. ஐ. டி. பெரேரா, பொறுப்பதிகாரியான சார்ஜன்ட் எம். டி. பெரேரா ஆகியோர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டார். தானும் சார்ஜன்ட் பெரேராவும் கீழ் மாடியில் உள்ள பி 1 பிரிவின் வாயிலருகிலுள்ள மேசையிலும், பி 2 வாட்டுக்குப் பொறுப்பான அதிகாரி மேல் மாடியில் உள்ள பி 2 வாட்டின் வாயிலருகிலும் உள்ள மேசையிலும் அமர்ந்திருந்ததாக குறிப்பிட்டுள்ளார். பி 2 வாட்டில் போதைப் பொருளுக்கு அதிகம் அடிமையாகிய பலர் இருந்ததோடு, பிணைக்கும் தீர்ப்பினூடாக தண்டனை அளிக்கப்பட்டிருந்த ஒரு பிள்ளைக்கு மாறுபட்ட பாலியல் நடத்தைகள் காணப்பட்டதாகவும் முதலாம் எதிர்வாதி விசாரணையின் போது வெளிப்படுத்தினார்.

இவ்விளம் கைதிகள் குளிக்கின்ற சந்தர்ப்பத்தில் பலத்த கூச்சல் கேட்டதாகவும், அச்சந்தர்ப்பத்திலே கீழ் மாடியிலிருந்து சாதாரண சிறைக் கைதிகள் 50 பேரளவில்

காணப்பட்டதாகவும், வாட்டுக்குப் பொறுப்பான காவலாளி கே.ஐ.டி. பெரேரா தொடர்ச்சியாக அமைதி காக்குமாறு கட்டளையிடுவது தனக்குக் கேட்டதாகவும், குறிப்பிட்டார். கடந்த காலங்களில் குளிக்கச் சென்ற சந்தர்ப்பத்தில், தலைகளைக் கூட உடைத்துக் கொண்டு காயப்படுத்திக் கொண்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டதாகவும், இந்நிலைமை காரணமாக இக்குழப்ப நிலையை இனம் கண்டு கொள்வதற்கு முழுப் பகுதியையும் மூடும் விதத்திலான ஒரு கதவு இருப்பதோடு, அக்கதவை பொறுப்பதிகாரி மூடி மேலே உள்ள மாடிக்குச் சென்றதாகவும் அச்சந்தர்ப்பத்திலே வாட்டுக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரி கதவருகில் இருந்து அமைதிப்படுத்துவதற்கு முயற்சித்ததைத் தொடர்ந்து தான் வாட்டின் பொறுப்பதிகாரிக்குக் கூறி கதவைத் திறந்து கொண்டு தானும் பொறுப்பதிகாரியும் உட்பிரவேசித்ததன் பின்னர், வாட்டுக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரிக்கு கதவை மூடிக்கொண்டு வெளியே இருக்குமாறு அறிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நான் உள்ளே சென்ற பொழுது உள்ளே அமர்ந்திருந்த பிள்ளைகள் குறைவாக இருப்பதாக தோன்றியதோடு, தேடிப்பார்த்தபோது குளியலறையில் குழப்பத்தோடு நிர்வாணமாக மிக மோசமான வசனங்களைப் பயன்படுத்தி குழப்பம் செய்து கொண்டிருந்ததாகவும் அவர்களுக்கு வாட்டுக்குள் செல்லுமாறும், ஆடைகளை அணிந்து கொள்ளுமாறும் எச்சரித்ததாகவும், **45** நிமிடங்களளவில் எச்சரிக்கைகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றை மேற்கொண்டதன் பின்னர், மாடிக்கு வந்ததாகவும் முதலாம் எதிர்வாதி குறிப்பிட்டுள்ளார். இரவுச் சாப்பாட்டுக்கான நேரம் பிற்பகல் **4.30** மணியாதலால் பிள்ளைகளை கீழ் மாடிக்குத் தருவித்து இரவுச் சாப்பாட்டினை வழங்கியதாகவும், தலைமை ஜெய்லர் அவ்விடத்திற்கு வருகை தந்ததாகவும், வழமை போலவே இரவில் கதவினை மூடுகின்ற ஜெய்லர் இரவுச் சேவை அலுவலரோடு வாடுகளுக்கான கட்டிடத் தொகுதியை மூடியதாகவும், அதனைத் தொடர்ந்து பகல் நேர சேவைக்கான அலுவலர்களோடு தனது கடமையை முடித்துக் கொண்டதாகவும் முகாமின் வளவிற்குள் அமையப் பெற்றுள்ள தனி நபர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்றதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்த நாள் பகல் எனக்குரிய கடமை இருந்தமையால், முற்பகல் **11:30** மணியளவில் ஜெய்லர் குடியிருப்பில் தங்கி இருந்ததோடு, அச்சந்தர்ப்பத்தில் அலுவலகத்தின் ஒரு சிறைக் கைதியூடாக தலைமை ஜெய்லர் அவர்கள் என்னை அழைத்து, விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டுமெனக் கூறியதாக **1** ஆம் எதிர்வாதி வெளிப்படுத்தினார். அன்று மாலை உரிய நிகழ்வு தொடர்பான உண்மையான வாக்குமூலங்ளை வழங்கிய இரண்டு பிள்ளைகளை வாட்டிலிருந்த ஏனைய பிள்ளைகள் தாக்கியதாகவும், தலைமை ஜெய்லருக்கு அது பற்றி அறிவித்ததாகவும் அதற்கெதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார். **2020.05.19** ஆம் தேதி பூர்வாங்க விசாரணைக்காக தன்னிடமிருந்து வாக்குமூலமொன்றைப் பெற்றுக் கொண்டதாகவும், அதன் போது எவ்வடிப்படையுமற்ற குற்றச் சாட்டுகளை தனக்கு எதிராக முன்வைத்ததாகவும், பின்னர் வெளிவந்த தகவல்களுக்கு அமைய, பிள்ளைகளை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த அலுவலர்களை

வெளியேற்றி விட்டு பிள்ளைகளிடமிருந்து தனித்தனியாக வாக்குமூலமொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளாரெனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பி **1** வாட்டில் இளம் கைதிகளை சிறை வைப்பதைத் தவிர்ப்பதற்காக பி **2** வாட்டிற்கு அனுமதித்த திகதிகள் தனக்கு சரியாக நினைவிலில்லை எனவும் கூறியுள்ளார். பிள்ளைகளை குளிப்பதற்காக அனுப்புகின்ற பொழுது, ஏதேனும் ஒரு மேற்பார்வையின் கீழ் அது நிகழ்கின்ற போதிலும், அலுவலர் வாட்டிற்குள் செல்ல மாட்டாரெனவும், கைதிகளில் அதிகூடுதலான காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஒரு கைதியை மேற்பார்வைக்காக ஆற்றுப்படுத்தி, வாட்டுக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரி வெளியே இருப்பாரெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரே பி வாட்டிற்குள் சென்றதாகவும், வெளியே இருந்து எச்சரிக்கை செய்து கூச்சல் அதிகமாதலால் உள்ளே சென்றதாகவும், வாட்டுக்குப் பொறுப்பான அதிகாரிக்கு கைதிகளை அமைதிப்படுத்த முடியாதெனக் கூறியமையினாலேயே அவ்வாறு உள்ளே செல்ல வேண்டி வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இக்காலப் பகுதிக்குள் பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதற்காக குழப்பம் விளைவித்த இடத்துக்குச் சென்று பின்னர் அவர்கள் குளிக்கின்ற இடத்திலிருந்து வாட்டின் உள்ளே அழைத்து வந்து அமர்ந்திருக்குமாறு கட்டளை இட்டதாகவும் பிள்ளைகள் கட்டைக் காற்சட்டைகள் மற்றும் துவாய் (சிறியது) அணிந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஆணைக் குழு தொடர்ந்து விளக்கம் கோரிய போது, எச்சரிக்கையொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதாகவும், பி வாட்டிலுள்ள **6** பிள்ளைகளுக்கு மாத்திரம் ஒரே விதத்தில் முழங்கால்கள் காயமடையக் காரணம் யாதெனத் தெரியாதெனவும், முழங்கால்களில் காயமேற்பட்டுள்ளமையை தான் காணவில்லையெனவும், **1** ஆம் பிரதிவாதி குறிப்பிட்டுள்ளார். **2020.05.18** ஆம் திகதி இப்பிள்ளைகள் தொடர்பான ஏதேனும் ஒரு நிகழ்வு நிகழ்ந்திருப்பின், பூர்வாங்க விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு தலைமை ஜெய்லர் அவர்களுக்குக் கட்டளை கிடைக்கப் பெற்றுள்ளமை பற்றிக் குறிப்பிடுகையில், இது தொடர்பான விடயங்களை அறிந்து கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். அப்பிள்ளைகள் வட்டரெக்கை சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தரித்திருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டமை பற்றி தனக்குத் தெரியாதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

**2 ஆம் பிரதிவாதியான எம்.டி. பெரேரா (பொறுப்பதிகாரி)**

மீமனகே தயாபால பெரேரா (பொறுப்பதிகாரி) அலுவலர் **2020.09.29** ஆம் தேதி ஆணைக் குழுவுக்கு வழங்கியுள்ள வெளிப்படுத்துகைக்கு அமைய, **2020.05.17** ஆம் தேதி முற்பகல் **08:00** மணிக்கு தலைமை ஜெய்லரினால் பி **1** மற்றும் பி **2** வார்டுகளுக்கு பொறுப்பதிகாரியாக கடமைக் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டது. அக்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, பிற்பகல் **2.30, 3.00** மணியளவில் ஒரு கூச்சல் கேட்டமையால் உதார அவர்களுக்கு அது

தொடர்பாக அறிவித்து, அவரோடு வாட்டுக்குச் சென்றுள்ளார். அச்சந்தர்ப்பத்தில் குளிக்கின்ற இடத்தில் ஒரு கூட்டம் இருந்ததாகவும், வாட்டுக்குப் பொறுப்பானவர் வரிசையாக வைத்துப் பார்ப்போமா**?** எனக் கேட்டதாகவும், அதற்கு அமைய, வரிசைப்படுத்தியதாகவும் **2** ஆம் பிரதிவாதி வெளிப்படுத்தியிருந்தார். அப்பகுதிக்கு சிறைச்சாலை அத்தியட்சகரின் கட்டளைக்கமைய, ஜெய்லர் உதார அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதனால், உதார அவர்கள் இருக்கின்ற போது தான் கீழே வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். தாங்கிக்கு அருகில் **10 - 15** பிள்ளைகள் காணப்பட்டதாகவும், ஏனையோர் உள்ளே காணப்பட்டதாகவும் வரிசையில் நிற்குமாறு உதார அவர்கள் கூறியதன் பின்னர், சுமார் **20** பேரளவில் வரிசையில் நின்றதாகவும், குளித்து முடித்திருந்தவர்கள் ஆடைகளை அணிந்திருந்ததாகவும், வரிசைப்படுத்தியதன் பின்னர் என்ன நடந்ததென தனக்குத் தெரியாதெனவும் **10** நிமிடங்களின் பின்னர் தான் கீழே வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். உள்ளே நடக்கின்ற நிகழ்வுகள் வெளிக்குத் தெரியாதெனவும், அவருடைய கையில் சாவியிருந்த போதிலும் உதார அவர்கள் வரும் வரை தான் கீழே இருந்ததாகவும், உதார அவர்கள் **15 - 20** நிமிடங்களுக்கு பின்னர் வருகை தந்ததாகவும், பிள்ளைகளின் காயங்கள் தொடர்பாக எதுவும் அறிவிக்கவில்லையெனவும், இரவுச் சேவையின் பின்னரே தான் சம்பவம் தொடர்பாக அறிந்து கொண்டதாகவும் வெளிப்படுத்தினார். பிள்ளைகளை கரடு முரடான நிலத்தில் நடக்கச் செய்தமை தொடர்பாக தான் எதையும் அறிந்திருக்கவில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார்.

**3 ஆம் பிரதிவாதியான கே.ஐ.டி.பெரேரா (வாட்டிற்குப் பொறுப்பான காவலாளி)**

கலுபோவிலகே இரங்க தில்சான் பெரேரா (வாட்டிற்குப் பொறுப்பான காவலாளி) என்பவரால் **2020.09.29** ஆம் தேதி ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள வெளிப்படுத்துகைக்கு அமைய, **2020.05.17** ஆம் தேதி வட்டரெக்க சிறைச்சாலையின் பி **2** வாட்டிற்குப் பொறுப்பாளராக முற்பகல் **08:00** மணிக்கு கடமைக்கு அறிக்கையிட்டுள்ளார். அன்றைய தினம் மாலை **2.30 - 3.00** மணிக்கு இடைப்பட்ட காலத்தில் கைதிகள் குளிப்பதற்காக சென்றிருந்ததாகவும், அச்சந்தர்ப்பத்தில் ஒரு பாரிய கூச்சல் கேட்டதாகவும், அதற்கமைய அமைதி காக்குமாறு கைதிகளுக்கு தான் அறிவித்ததாகவும், அவர்களின் கூச்சல் ஓயவில்லையெனவும் அவர் வெளிப்படுத்தியிருந்தார். அன்றைய தினம் பி வாட்டிற்குப் பொறுப்பாகவிருந்த ஜெய்லர் உதார அவர்களென்பதாலும், அவர் கீழ் மாடியில் இருந்துள்ளாராதலாலும் பிள்ளைகளின் கூச்சல் அதிகரித்த காரணத்தினால் உதார அவர்களை தான் அழைத்ததாகவும், அதற்கு அமைய உதார அவர்கள் வாட்டின் பொறுப்பதிகாரியான தயாபால அவர்களோடு வருகை தந்து கதவருகில் நின்று கொண்டு சப்தத்தைக் குறைக்குமாறு கட்டளை இட்டதாகவும், அதனைத் தொடர்ந்து தனக்குக் கதவைத் திறக்குமாறு சாவியைக் கொடுத்தமையினால் தான் கதவைத் திறந்ததன்

பின்னர், அவர்கள் இருவரும் வாட்டிற்குள் சென்றதன் பின்னர் தான் கதவை மூடி தாழிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளேயிருந்த அனைவரையும் வரிசைப்படுத்தியதாகவும், தயாபால அவர்களினால் பிள்ளைகள் கணக்கெடுக்கப்பட்ட போது பிள்ளைகள் குறைவாகக் காணப்பட்டதாகவும். அவர்கள் குளிக்கின்ற இடத்தில் கூச்சலிட்டவாறு குளித்துக் கொண்டிருந்ததாகவும் கூறியுள்ளார். வரிசையாக நின்றவர்களுக்கு இருந்த இடத்திலேயே உட்காருமாறும், குளித்துக் கொண்டு இருந்தவர்களுக்கு வெளியே வருமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அனைவரும் ஒரே முறையில் வெளியே வரவில்லையெனவும் குளிக்கின்ற இடத்திற்குச் செல்கின்ற இடத்தில் வருகின்றவர்கள் ஒவ்வொருவராக உட்கார வைக்கப்பட்டதாகவும் கூச்சலிடக் காரணம் என்னவெனக் கேட்டு எச்சரிக்கை செய்து எதிர்வரும் சங்கக் கூட்டக் கணக்குகள் பற்றி விவரங்கள் கேட்கப்பட்டதாகவும் அவர் வெளிப்படுத்தினார். பிள்ளைகளின் பிரிவுக்குப் பொறுப்பான பணிகளை உதார சேர் மேற்கொள்வதால், தான் வெளியே உள்ள கதிரையில் உட்கார்ந்த வண்ணம் வாயிலருகில் உள்ள புத்தகங்களின் பணிகளை செய்து கொண்டிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து தயாபால அவர்கள் வெளியே வந்ததாகவும் உதார அவர்கள் உள்ளே இருந்து பிள்ளைகளுக்கு எச்சரிக்கை செய்து கொண்டிருந்ததாகவும் பிற்பகல் **3.45** மணியளவில் உதார அவர்கள் வெளியே கதவினை திறந்ததாகவும் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து, உணவைப் பெற்றுக் கொள்வதற்காக பிள்ளைகள் வெளியே வந்ததாகவும், அச்சந்தர்ப்பத்தில் உதார அவர்கள் கீழே சென்றதாகவும் தயாபால அவர்கள் அதே இடத்தில் தரித்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அவரால் பிள்ளைகளிடம் உதார சேர் என்ன சொன்னார் என்று கேட்கப்பட்டுள்ளது. மலசல கூடத்துக்குப் பக்கத்தில் இருந்து கொண்டு உதார அவர்கள் சொன்ன விடயங்கள் தனக்குக் கேட்கவில்லையென்பதனால் அவ்வாறு கேட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாட்டின் சுத்தம் மற்றும் நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்க முறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதோடு, கூச்சலிடவோ சண்டையிடவோ வேண்டாமெனவும், எதிர்வரும் சங்கக் கூட்டங்களுக்குத் தேவையான பிள்ளைகளுடன் கதைத்ததாகவும் பிள்ளைகள் குறிப்பிட்டதாக அவர் வெளிப்படுத்தியுள்ளார். அனைத்து பிள்ளைகளும் சாப்பிட்டு விட்டு மீண்டும் உள்ளே சென்றதாகவும், இந்நிகழ்வு தொடர்பாக அடுத்த தினம் தான், தான் தெரிந்து கொண்டதாகவும் பிள்ளைகள் எதனையும் கூறவில்லையெனவும், அன்றைய இரவின் சேவைக்குப் பொறுப்பாகவிருந்த பாதுகாப்பு அலுவலர் பிற்பகல் **5.00** மணிக்கு வாட்டினைப் பரிசீலித்து பிள்ளைகளை கணக்குப் பார்த்து கடமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். அன்றைய தினம் மாலை கடமை கையளிக்கப்பட்ட அலுவலர் யார் என்பது ஞாபகத்தில் இல்லை எனவும், அன்றைய தினம் சாவிகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் சார்ஜன்ட் தயாபால அவர்களெனவும், வாட்டின் கதவுகளை மூடி விட்டு விராந்தாவில் நின்றதாகவும் அவர் இருந்த இடத்திற்கு வாட்டின் உள்ளே நிகழும் எதுவும் புலப்படவில்லையென வும் குறிப்பிட்டுள்ளார். பி **2** வார்ட்டுக்குப் பொறுப்பான அலுவலராக அன்றைய தினம் கடமை கையளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் ஏனைய அலுவலர்கள் வாட்டுக்குள் உட்பிரவேசிக்கின்ற போது அவர் மிக உன்னிப்பாக இருக்க வேண்டுமெனவும், பி

**2** வாட்டின் கடமைக்காக தயாபால மற்றும் ஜெய்லர் உதார ஆகியோர் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**2020.05.18** மற்றும் **2020.05.19** ஆகிய தினங்கள் விடுமுறை தினங்களாகையால், **2020.05.20** ஆம் திகதி கடமைக்கு வருகை தந்ததைத் தொடர்ந்தே பிள்ளைகளுக்கு நிகழ்ந்த சம்பவம் தொடர்பாக தனக்கு அறியக் கிடைத்ததாகவும், பிள்ளைகளின் முழங்காலில் உள்ள காயங்கள் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாதெனவும், சம்பவம் நிகழ்ந்த தினத்தன்று தான் எதையும் காணவில்லையெனவும் குறிப்பிட்டார். சார்ஜன்ட் தயாபால மற்றும் ஜெய்லர் உதார ஆகியோர் பி **2** வாட்டில் சுமார் **20** நிமிடங்களளவில் தரித்திருந்ததாகவும், அவ்வாட்டின் தரை மற்றும் வெளிப் பகுதி சீமெந்து பூச்சிடப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளதெனவும், சீமெந்து இடப்பட்டு கணிசமான காலம் கழிந்திருப்பதால் சற்று கரடு முரடான இயல்புடன் கூடியதாக காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

**4 ஆம் பிரதிவாதியான டி.எம். நிமல் சாந்த (சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் )**

தேவப்புரஆரச்சிகே மொகான்தாஸ் நிமல் சாந்த (சிறைச்சாலை உதவி அத்தியட்சகர்) என்பவரால் **2020.09.29**ஆம் திகதி ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள வெளிப்படுத்துகைக்கு அமைய, **2019.10.03** ஆம் திகதியிலிருந்து இதுவரை வட்டரெக்கை சிறைச்சாலைக்கு இணைக்கப்பட்டு கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். சிறைச்சாலையுடன் இணைக்கப்பட்டுள்ள சுனீத பாடசாலைக்குரிய தடுப்புக் காவலிலுள்ள இளம் கைதிகள் **30** பேரளவிலான தொகையினர் பி **2** என்ற வாட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளதோடு, **2020.05.18** ஆம் தேதி கடமை நடவடிக்கை ஒன்றிற்காக சிறைச்சாலை தலைமை அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தபோது அப்போதைய சிறைச்சாலை ஆணையாளர் (நிருவாகம்) பந்துல ஜெயசூரிய அவர்களினால் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கமைய உரிய விடயம் தனக்குத் தெரிய வந்ததாகக் குறிப்பிட்டார்.

**2020.05.17** ஆம் திகதிக்கு அண்மித்த தினமொன்றில் தடுப்புக் காவலிலுள்ள மாணவர்கள் பலருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற ஒழுக்க விரோத செயற்பாடு தொடர்பாக அந் நிறுவனத்தின் தலைமை ஜெய்லர் மூலம் பூர்வாங்க விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இம்மாணவ பிள்ளைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை தேடிப் பார்ப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த ஜெய்லர் எம். எல். எஸ். உதார சுமனபால தடுப்புக் காவலில் உள்ளவர்கள் பலரை முழந்தாளிடச் செய்த செயற்பாடொன்று நிகழ்ந்துள்ளதாகவும், அவ்வாறு முழந்தாளிடச் செய்ததன் காரணமாக, தடுப்புக் காவலில் உள்ள கைதிகளின் முழங்கால்களில் சிராய்ப்புக் காயங்களுக்கான அடையாளங்கள் பல காணப்படுவதாக அவதானிக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிகழ்வோடு தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது இம்மாணவ பிள்ளைகள் ஒழுக்க சீலமற்ற நடத்தைகளைப் பின்பற்றியதாகவும், உரிய ஜெய்லர் அந்நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக குறைந்தபட்ச அதிகார பலத்தைப் பிரயோகித்து கட்டுப்படுத்தச் சென்ற பொழுது

இது நிகழ்ந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார். பாதிப்புக்குள்ளான இளம் கைதிகளின் முழங்கால்களில் ஏற்பட்டுள்ள சிராய்ப்பு காய வடுக்கள் காரணமாக, உரிய ஜெய்லருக்கு எதிராக தாபன விதிக் கோவையின் **11** ஆம் அட்டவணையின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டு, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு ஒழுக்காற்று நடவடிக்கைக்காக அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இளம் தடுப்புக் காவல் கைதிகள் மேற்கொண்ட ஒழுக்க சீலமற்ற செயலென பி.ப. **5.00** மணியளவில் கைதிகள் குளிக்கின்ற பணிகள் ஜெய்லர் உதார சுமனபாலவின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட பொழுது, இளம் குற்றவாளிகள் சிலர் மிகுந்த கூச்சலோடும் கலகம் விளைவிக்கும் இயல்போடும் மிகுந்த ஆக்ரோஷமாக நடந்து கொண்டமை இந்நிகழ்விற்கு அடிப்படையாக அமைந்துள்ளதாகவும் அச்சந்தர்ப்பத்தில் ஜெய்லரின் கட்டளைக்கு அடிபணியாத முறையில் நடந்து கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. உரிய இளம் கைதிகளின் நடத்தை முறை சராசரி நிலைமையை மீறிய ஒன்றாக காணப்பட்டமையினால் அந்நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக ஜெய்லர் குறைந்தபட்ச அதிகார பலத்தைப் பிரயோகித்துள்ளாரெனவும், எந்தவொரு கைதியும் சராசரி நடத்தைக்கு அப்பால் சென்று நடந்து கொள்கின்ற பொழுது அவரை கட்டுப்படுத்துவதற்காக செயல்படுத்தப்படுகின்ற நடவடிக்கைகள் குறைந்தபட்ச அதிகார பலமெனக் கூற முடியுமெனவும் அவரால் தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வு வாட்டிற்குள் நிகழ்ந்த ஒன்றெனவும், வாட்டிற்கு வெளியே கரடு முரடான தரையொன்று இருப்பதாகவும், சம்பவத்தோடு தொடர்புடைய கைதிகளை ஹோமாகம அரசாங்க வைத்தியசாலையின் நீதிமன்ற வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

**5 ஆம் எதிர்வாதியான அஜித் பல்லியகே (அப்போதைய தலைமை ஜெய்லர்)**

சர்ச்சைக்குரிய இச்சம்பவத்தோடு தொடர்புடையதாக அக்காலத்தில் இளம் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாமின் தலைமை ஜெய்லர் அஜித் பல்லியகே அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணை அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**2020.05.18** ஆம் தேதி மு.ப. **09.15** மணியளவில் சிறைச்சாலை ஆணையாளர் (நிருவாகம்) திரு. கே. டப்ளியூ. பி. ஜயசிங்க அவர்களினால் வட்டரெக்க சிறைச்சாலையின் தொலைபேசிக்கு அழைப்பினை எடுத்து, தலைமை ஜெய்லர் அஜித் பல்லியகே அவர்களுக்கு **2020.05.17** ஆம் திகதி உங்களது நிறுவனத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் குற்றவாளிகள் பலரை ஜெய்லர் ஒருவர் தாக்கியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் அந்த ஜெய்லர் உதார எனும் ஒரு ஜெய்லரெனவும், ஆதலால் உடனடியாக இது பற்றி தேடிப் பார்த்து பூர்வாங்க விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறும், காயமடைந்துள்ள பிள்ளைகளை புகைப்படமெடுத்து அவருக்கு அனுப்பி வைக்குமாறும், அப்பிள்ளைகளை உடனடியாக வைத்தியர் ஒருவரிடம் ஆற்றுப்படுத்துமாறும் கட்டளையிட்டிருந்தார். மேலும் பூர்வாங்க விசாரணையை தலைமை ஜெய்லராகிய அஜித் பல்லியகே அவர்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்ததோடு, இதனோடு தொடர்புடைய நிறுவனத்திற்குரிய அத்தியட்சகருக்கு

அறிவித்து அவரின் அறிவுறுத்தலுக்கு அமைய, பூர்வாங்க விசாரணை அச்சந்தர்ப்பத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.

பூர்வாங்க விசாரணைக்காக இரண்டாம் வகுப்புக்குரிய ஜெய்லர் எம்.எல்.எல் உதார சுமனபால, இரண்டாம் வகுப்புக்குரிய ஜெய்லர் சானக சேனாரத்ன, சார்ஜன்ட் எம். டி. பெரேரா (தயாபால) காவலாளர் கே.ஐ.டி. பெரேரா மற்றும் சி - **08** சஞ்ஜு ப்ரதீப், சி - **28** சாமர லக்சான், டி - **5** சமிந்த சமன் குமார, சி - **20** ரஷ்மி காஞ்ஜன, டி - **01** பாரீஸ் மொகமட் பஸ்லான், சி - **17** அன்ரனி சுரேஷ் , பி - **19** நிசல் அசங்க, பி - **16** ஏ. டபிள்யூ. பிரமோத் சம்பத், சி - **10** பி. லக்சித செஹான் பெரேரா, சி - **06** ஜீ. டபிள்யூ .சுபுன் சி **-15** சி- **25** திலின மதுசங்க ஆகியோரின் வாக்குமூலங்கைள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இளம் கைதிகள் வழங்கிய வாக்குமூலங்ளை சீ - **20** ரஷ்மி காஞ்சன தவிர்ந்த அனைத்து இளம் கைதிகளும் வெளிப்படுத்தியுள்ளவாறு, **2020.05.17** ஆம் தேதி பிற்பகல் **3:30** க்கும் **4** மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் சி - **2** என்ற வாட்டின் மூடப்பட்டிருந்த கதவைத் திறந்து கொண்டு ஜெய்லர் உதார அவர்கள் கிரிக்கெட் ஸ்டம்ப் ஒன்றுடன் அவ்வாட்டிற்குள் கத்திய வண்ணம் உள்ளே நுழைந்து, அனைவரையும் வரிசையாக நில்லுங்கள் எனக் கூறி துவாய் அணிந்திருந்தவர்களுக்கும் முன்னே வருமாறும் கூறியுள்ளார்.

அனைத்து பிள்ளைகளுக்கும் வரிசையில் நிற்குமாறும் துவாய் அணிந்திருந்தவர்களுக்கு முன்னே வருமாறும் கூறப்பட்டுள்ளது. சி - **08** சஞ்ஜு பிரதீப், சி - **28** சாமர லக்சான், டி - **5** சமிந்த சமன் குமார, சி - **20** ரஷ்மி காஞ்சன, டி - **01** பாரிஸ் மொஹமட் பஸ்லான் ஆகிய ஐவரும் முன்னே வந்துள்ளனர். அதன் பின்னர், அவர்களை முழந்தாளிடச் செய்துள்ளார். சி - **17** அன்ரனி என்ற கைதியின் உள்ளாடை அருகிலிருந்ததற்காக அதனை தலையில் முகத்தையும் மூடத் தக்கவாறு போடுமாறு அக்கைதிக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. அன்ரனி அவ்வாறு மேற்கொண்டதன் பின்னரும், அவரையும் தரையில் முழந்தாளிட்டு ஏற்கனவே முழங்காலில் நடந்தவாறிருந்த ஏனைய ஐவரோடு வாட்டிற்குள் நடந்து செல்லுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. இவ்வாறு முழங்காலில் செல்கின்ற சந்தர்ப்பத்தில், ஜெய்லர் உதார தனது கையிலிருந்த தடியாலும், கைகளாலும், கால்களாலும் தாக்கியிருப்பதாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று அவ்வாறு நடந்ததனூடாக அவ்வறுவருக்கும் காயங்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் அன்றைய தினம் ஜெய்லர் உதார சி - **28** சாமர லக்சான் என்ற இளம் குற்றவாளி அணிந்திருந்த துவாயை அகற்றி நிர்வாணமாக வலம், இடம் எனக் கூறி அங்குமிங்கும் வாட்டிற்குள் நடக்கச் செய்ததாகவும் கூறப்பட்டது.

சி- **20** ரஷ்மிக காஞ்சன தானும் முழந்தாளிட வைக்கப்பட்டு தரையில் உரசவிடப்பட்ட போதிலும் தனக்கு எந்தவொரு அடியும் விழவில்லையெனவும், தவழ்ந்து சென்றமையால்

முழங்காலில் காயமேற்பட்டதாகவும், அருகிலிருந்த தயாபால அவர்கள் தனது கையில் ஸ்டம்ப் ஒன்றை வைத்திருப்பதைக் கண்டதாகவும், தான் முழங்காலில் சென்ற போது சிரித்த பிள்ளைகளுக்கு தயாபால அவர்கள் தனது கையில் இருந்த தடியினால் பல அடிகளைக் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். மேலும், சி **- 28** சாமர லக்சான் என்ற பிள்ளை அணிந்திருந்த துவாயைக் கழற்றி வாட்டிற்குள் வலம், இடம் என கால்களை அடிக்குமாறு உதார அவர்கள் கூறியதாகவும் மேலும் தெரிவித்தார்.

அன்றைய தினம் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய எம்.டி பெரேரா, ஜெய்லர் உதாரவுடன் வாட்டிற்குள் சென்றதன் பின்னர், பிள்ளைகளை வரிசையாக அமர வைத்த போது தான் பி வாட்டிலிருந்து வெளியேறியதாகவும் இந்நிகழ்வு தொடர்பாக எதுவும் தெரியாதெனவும் பூர்வாங்க விசாரணையில் குறிப்பிட்ட்டிருந்தார்.

அன்றைய தினம் கையேற்பு ஜெய்லராகப் பணியாற்றிய ஜெய்லர் சானக சேனாரத்ன தனது கடமைக் காலத்தினுள் எந்தவோர் இளம் குற்றவாளியிடமிருந்தோ அல்லது எந்தவோர் அலுவலரிடமிருந்தோ இது போன்ற ஒரு சம்பவம் பற்றி அறியக் கிடைக்கவில்லையெனவும் அத்தகையவொன்று பற்றி தான் அறிந்து வைத்திருக்க வில்லை எனவும், அடுத்த நாள் தலைமை ஜெய்லர் அவர்கள் தம்மை அழைத்ததன் பின்னரே இத்தகைய நிகழ்வொன்று பற்றித் தெரிந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

இரண்டாம் வகுப்புக்குரிய ஜெய்லர் உதார சுமனபால பி **2** வாட்டிற்கு பொறுப்பாகவிருந்த மேற்பார்வை அலுவலராக கடமையாற்றியிருக்கிறார். பிள்ளைகள் பிற்பகல் **3:30** க்கும் **4.30**க்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கூச்சலிடுகின்ற சப்தமொன்றை தான் கேட்டதாகவும், அதன் பின்னர் தான் வாட்டுக்குச் சென்று இளம் குற்றவாளிகளை வரிசைப்படுத்தி அமைதி அடையச் செய்தது தவிர வேறெந்த தண்டனைக்கும் உள்ளாக்கவில்லையெனவும் பிள்ளைகளின் குறைபாடுகள் பற்றி தேடிப் பார்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் சார்ஜன்ட் தயாபால தன்னோடு வாட்டிற்குள் தரித்திருந்ததோடு, காவலாளர் கே.ஐ.டி பெரேரா வாட்டின் வாயிலருகில் கருத்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பூர்வாங்க விசாரணைக்காக பாதிக்கப்பட்டவர்களுக்கும் எதிர்வாதிகளுக்கும் மேலதிகமாக, மேலும் **5** மாணவர்களினதும் அலுவலர்களினதும் சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளதோடு, அலுவலர்கள் இத்தகைய நடத்தையொன்று நிகழவில்லையென குறிப்பிட்டுள்ள போதிலும், பூர்வாங்க விசாரணக்கமைய, இரண்டாம் வகுப்பு ஜெய்லர் உதார சுமனபால இளைஞர்களை கீழே முழந்தாளிடச் செய்து முழங்காலில் நடக்கச் செய்து செய்து, தாக்கியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளமையினால் இது ஒழுக்க மீறல் செயலென இனம் காணப்பட்டு, அவருக்கெதிராக (அ) அட்டவணையின் கீழ் குற்றச்சாட்டுக்கள் கோவைப்படுத்தப்பட்டு ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பொறுப்பாதிகாரி மற்றும் வாட்டுக்குப் பொறுப்பான அலுவலர் இந்நிகழ்வினை அறிக்கையிடாமை, நிகழ்வு தொடர்பான விடயங்களை மூடி மறைத்தமை மற்றும் கடமைப் புறக்கணிப்பு என்பன காரணமாக, (அ) அட்டவணையின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது

**வட்டரெக்கை சிறைச்சாலை வைத்தியசாலையின் வைத்திய அறிக்கைகள்**

**2023.05.18** ஆம் தேதி வட்டரெக்கை சிறைச்சாலையின் வைத்திய அலுவலருக்கு இளைஞர்கள் அனைவரும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த வைத்திய அறிக்கையில் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு குறிக்கப்பட்டுள்ளது.

**2020518** ஆம் தேதி இரண்டு முழங்கால்களினதும் மேற்பரப்பில் காயம் ஏற்பட்டுள்ள பிள்ளைகள் அறுவர் என்னிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். நோயாளிகளின் வரலாற்றுக்கு அமைய, இவ்விளைஞர்கள் சிறுவர் விடுதி அறையில் முழந்தாளிட்டமையால் காயங்கள் ஏற்பட்டுள்ளன. ஜெய்லர் ஒருவரினால் தண்டனைக்காக பிள்ளைகள் வலுக்கட்டாயமாக முழந்தாளிடப்பட்டு மண்டபத்தைச் சுற்றி முழங்காலில் நடக்கச் செய்யப்பட்டுள்ளனர். கம்புத் தடியொன்றினால் பின்புறத்திலும், பிட்டத்திலும், கால்களின் பின்பக்கத்திலும் தாக்கப்பட்டிருக்கிறது. இந்நிகழ்வு **2020.05.17** ஆம் தேதி மாலை **3.00** மணி முதல் **4.30** மணி வரையிலான காலப் பகுதிக்குள் நிகழ்ந்துள்ளது. பிள்ளைகளின் விபரங்களும் காயங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**(01) D-01 - எம்.எப்.எம். பஸ்லான் (வயது 16)**

- இரண்டு முழங்கால்களினதும் மேற்பரப்பில் காயங்களை காண முடியும்.
  வலது காலில் **- 4 cm x 2 cm** அளவிலான காயமொன்று
  இடது காலில் **- 2 cm x 2 cm** அளவிலான காயமொன்று
- உடம்பில் வேறேதும் சிராய்ப்புக் காயங்கள், தாக்குதல் அடையாளங்கள் என்பவற்றைக் காண முடிந்ததற்கான சாட்சியங்கள் கிடையாது.

**(02) C-17 - ஏ.சுரேஷ் (வயது 19)**

- இரண்டு முழங்கால்களினதும் மேற்பரப்பில் காயங்களை காண முடியும்.
  வலது காலில் **- 1 cm x 1 cm** அளவிலான காயமொன்று
  இடது காலில் **- 1 cm x 1 cm** அளவிலான காயமொன்று
- உடம்பில் வேறேதும் சிராய்ப்புக் காயங்கள், தாக்குதல் அடையாளங்கள் என்பவற்றைக் காண முடிந்ததற்கான சாட்சியங்கள் கிடையாது.

**(03) C-20- ரஷ்மி காஞ்சன(வயது 18)**

- இரண்டு முழங்கால்களினதும் மேற்பரப்பில் காயங்களை காண முடியும்.
  வலது காலில் **- 3 cm x 1 cm** அளவிலான காயமொன்று.

இடது காலில் **- 3 cm x 1 cm** அளவிலான காயமொன்று

- தாக்குதல் ஏதும் நிகழ்ந்ததில்லை..
- உடம்பில் வேறேதும் சிராய்ப்புக் காயங்கள், தாக்குதல் அடையாளங்கள் என்பவற்றைக் காண முடிந்ததற்கான சாட்சியங்கள் கிடையாது.

**(04) B -05 - *சமிந்த சமன் குமார* (வயது 18)**

- இரண்டு முழங்கால்களினதும் மேற்பரப்பில் காயங்களைக் காண முடியும்.
- பாதத்தின் மேற்புற முன்புறத்தில் உராய்வுடன் கூடிய காயங்களைக் காண முடியும்.

வலது காலில் **- 2 cm x 1 cm** அளவிலான காயமொன்று

இடது காலில் **- 3 cm x 1 cm** அளவிலான காயமொன்று.

- உடம்பில் வேறேதும் சிராய்ப்புக் காயங்கள், தாக்குதல் அடையாளங்கள் என்பவற்றைக் காண முடிந்ததற்கான சாட்சியங்கள் கிடையாது.

**(05) C-28 - *சாமர லக்சான் செனெவிரத்ன* (வயது 17)**

- இரண்டு முழங்கால்களினதும் வெளிப்புறத்தில் காயங்களைக் காண முடியும்

வலது காலில் **- 1 cm x 2 cm** அளவிலான காயமொன்று

இடது காலில் **- 1 cm x 3 cm** அளவிலான காயமொன்று

- உடம்பில் வேறேதும் சிராய்ப்புக் காயங்கள், தாக்குதல் அடையாளங்கள் என்பவற்றைக் காண முடிந்ததற்கான சாட்சியங்கள் கிடையாது.

**(06) C-08 - *சஞ்ஜு பிரதீப்*(வயது 18)**

- இரண்டு முழங்கால்களினதும் வெளிப்புறத்தில் காயங்களைக். காணமுடியும்
- பாதத்தின் மேற்புற முன்புறத்தில் நேர் கோட்டு வடிவில் உராய்வுடன் கூடிய காயங்களைக் காண முடியும்.

வலது காலில் **- 2 cm x 1 cm** அளவிலான காயமொன்று

இடது காலில் **- 2 cm x 1 cm** அளவிலான காயமொன்று

- உடம்பில் வேறேதும் சிராய்ப்புக் காயங்கள், தாக்குதல் அடையாளங்கள் என்பவற்றைக் காண முடிந்ததற்கான சாட்சியங்கள் கிடையாது.

**அவிஸ்ஸாவெல்லை தள வைத்தியசாலையினால் விநியோகிக்கப்பட்டுள்ள சட்ட வைத்திய அறிக்கைகள்**

**2020.06.16** ஆம் திகதி மனித உரிமை ஆணைக் குழுவினால் வட்டரெக்க, சிறைச்சாலை அத்தியட்சகருக்கு பாதிக்கப்பட்ட தரப்பினரை சட்ட வைத்திய அலுவலருக்கு அலுவலரிடம் முன்னிலைப்படுத்துமாறு மீண்டும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, வட்டரெக்கை,

சிறைச்சாலை அத்தியட்சகரினால் அவரது வடா.வெக./லி.லி/01/பல்வேறு/2020 ஆம் இலக்க மற்றும் 2020.06.16 ஆம் தேதிய கடிதத்தினூடாக கோரிக்கை முன்வைக்கப்பட்டு, 2020.06.17 ஆம் தேதி இளைஞர்கள் அறுவர் நீதிமன்ற வைத்திய அலுவலரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். நீதிமன்ற வைத்திய அறிக்கையில் பின்வரும் விடயங்கள் காட்டப்பட்டுள்ளன.

**(01) D-01 - எம்.எப்.எம்.பஸ்லான் (வயது 16)**

**சம்பவத்துடன் தொடர்புடைய சுருக்கமான அறிமுகம்.**

முகாமில் இரண்டு மாதங்கள். இதற்கு முன்னர் வீட்டில். திருட்டு ஒன்றில் ஈடுபட்டு ஐஸ் பயன்படுத்தினார். இப்பொழுது எண்ணம் வருவதில்லை. சிரமம் எதுவுமில்லை. குளித்துக் கொண்டிருந்தார். ஓர் ஆடை மாத்திரமே உண்டு. நிர்வாணத்தோடு மறைந்து கொண்டிருந்தார். சேர் கண்டு முழந்தாளிடச் சொன்னார். மேலே உள்ள வாட்டின் சீமெந்தில் அரை மணித்தியாலமளவு 20 மீற்றர் தூரம் வேகமாக செல்லுமாறு கூறினார். பின்புறத்திற்கு காலால் உதைத்தார். காலைப் பார்த்து விட்டு சரியாக காயப்படவில்லை என்று மீண்டும் போ என்றார். எனக்கும் சாமரவுக்கும். மீண்டும் முழந்தாளிடச் சொன்னார் காயம் ஏற்படும் வரை. கன்னத்தில் அறைந்தார். பின்புறத்திற்கு காலால் உதைத்தார். சப்பாத்து அணிந்திருந்தார். அதன் பின்னர் அடிக்கவில்லை.

- **3 cm x 2 cm** அளவிலான வலது முழங்காலின் முன் பகுதியில் கரிய நிறத்திலான ஒரு வடு. (முழந்தாளிட்ட போது காயமடைந்ததமை)
- **3 cm x 2 cm** அளவிலான இடது முழங்காலின் முன்பகுதியில் கரிய நிற வடு (முழந்தாளிட்ட போது காயமடைந்தமை)
- வலது மற்றும் இடது மேல் கைகளில் சம்பவத்தோடு தொடர்பற்ற விதத்தில் முன்பு ஏற்பட்ட வெட்டுக் காயங்களின் வடுக்கள் **(horizontally)** காணப்படுகின்றன.
- முழங்காலின் முன்புறத்தில் கரிய நிறத்திலான வடுக்கள் கரடு முரடான தரையில் முழங்காலில் நடக்க வைத்ததனால் ஏற்பட்டிருக்கலாம்.
- மறைந்து காணப்படுகின்ற உடலியல் ரீதியான வதைகளுக்கான சாட்சிகள் கிடையாது.

**(02) C-28 - சாமர லக்சான் செனெவிரத்ன (வயது 17)**

**சம்பவத்துடன் தொடர்புடைய சுருக்க அறிமுகம்**

*முகாமில் 6 மாதங்கள் அதற்கு முன்னர் நீர் கொழும்பு சிறைச்சாலையில் 4 மாதங்கள். மது அருந்தியவர். தற்போது அருந்தத் தோன்றவில்லை. உதார சேர் எங்களுக்கு முழந்தாளிட்டு நடக்கச் செய்தார். 15 நிமிடம் அளவில் 12 முதல் 14 அடிகள் வரை. துவாய் அணிந்திருந்தார் தடியினால் கால்களுக்கும் தொடைகளுக்கும் அடித்தார். முழங்கால்கள் உராய்ந்தன. பி.எச். அனுப்பி 18 அன்று மருந்து இட்டனர்.*

மாதம் நினைவில் இல்லை. தற்போது சிரமம் இல்லை. அதன்பின்னர் அடிக்கவில்லை. சேர் மது அருந்தி இருந்தார். வலது காதுக்கு அடித்தார். வலி இல்லை.

- சம்பவத்தோடு தொடர்பற்ற வகையிலான விகாரமடைந்த பச்சை குத்தப்பட்ட அடையாளங்களும் ஏனைய பழைய வடுக்களும் உடம்பில் உள்ளன.
- **2 cm x 2 cm** அளவிலான பளபளப்பான வடுக்கள் இரண்டு கால்களினதும் முழங்கால்களின் முன் பகுதியில் காணப்படுகின்றன. **(**முழந்தாளிட்டபோது காயமடைந்தமை**)**
- **8 cm x 1 cm** அளவிலான பளபளப்பான நீண்ட வடுவொன்று வலது தொடையின் பின்புறத்தில் காணப்படுவதோடு, அதன் உள்ளக விளிம்பு அதன் வெளிப்புற விளிம்பிலும் பார்க்க கூடுதலாக காணப்படுகின்றது. **(**ஸ்டம்ப் ஒன்றினால் அடிக்கின்ற பொழுது காயம் ஏற்பட்டு தண்ணீர் கொப்புளங்கள் உருவாகி தற்போது ஆறியிருக்கின்றது.**)**
- முழங்காலில் உள்ள கரிய நிற வடுக்கள் கரடு முரடான மேற்பரப்பு ஒன்றில் முழங்கால்களினால் நடந்த காரணத்தினால் ஏற்பட்ட காயங்களாக இருக்கலாம்.
- விக்கெட் போன்ற கூர்மையற்ற ஒன்றினால் ஏற்பட்ட தண்ணீர் கொப்புளங்களாக இருக்கலாம்.
- உள் காயத்துடன் கூடிய உடலியல் ரீதியான வதைகளுக்கான சாட்சியங்கள் கிடையாது.

**(03) C - 08 - இசாரகே சஞ்ஜு பிரதீப் (வயது 18)**
**சம்பவத்துடன் தொடர்புடைய சுருக்கமான அறிமுகம்**

முகாமில் **1** வருடமும் **3** மாதங்கள். அதற்கு முன்னர் மாக்கொலையில் **9** மாதங்கள். திருட்டில் ஈடுபட்டார். கேரள கஞ்சா பயன்படுத்தினார். இப்பொழுது பயன்படுத்த எண்ணம் வருவதில்லை. குளித்துவிட்டு துவாய் அணிந்திருந்தார். உதார வந்து ஆடை அணியச் சொன்னார். **-** கட்டைக்.காற்சட்டை**-** சீமெந்து தரையில் கரடு முரடான சீமெந்தில். முழங்கால்கள் காயமடையும் வரை. முழங்காலில் நடக்கச் சொன்னார். **50** முறை அளவில் **30** அடிகள் அளவில் முதுகுப் புறத்திற்கு சப்பாத்தினால் முழங்காலில் நடந்த போது அடித்தார். தடி ஒன்றினாலும் அடித்தார். அடுத்த நாள் பி.எச். ல் காயங்களுக்கு மருந்திட்டனர். தற்பொழுது வலியில்லை.

- வலது மற்றும் இடது மேல் கைகளின் முன் பகுதியில் சம்பவத்தோடு தொடர்பற்ற ஏற்கனவே வெட்டப்பட்ட கடும் நிறத்திலான வடுக்கள் உள்ளன
- **2 cm x 1.5 cm** அளவிலான வலது முழங்காலின் முன்புறத்தில் பளபளப்பான வடு. **(**முழங்காலில் நடந்த பொழுது காயமேற்பட்டமை**)**
- **2 cm x 1 cm** அளவிலான இடது முழங்காலின் முன்புறத்தில் பளபளப்பான வடு. **(**முழங்காலில் நடந்த பொழுது காயமேற்பட்டமை**)**
- **1 cm x 1 cm** அளவிலான கடும் நிறத்திலான சிறிய வடுக்கள் இடது பாதத்தின் மேற்பரப்பில் காணப்படுகின்றன. **(**முழங்காலில் நடந்த போது காயம் ஏற்பட்டமை**)**

- முழங்கால்களின் முன்புறத்திலும் இடது பாதத்திலும் காணப்படுகின்ற வடுக்கள் கரடு முரடான மேற்பரப்பு ஒன்றில் முழங்கால்களினால் நடந்ததன் விளைவாக ஏற்பட்டவையாக இருக்கலாம்.
- உட்காயங்களுடன் கூடிய உடலியல் ரீதியான வதைகளுக்கான சாட்சியங்கள் இல்லை.
- ஹெரோயின் தொடர்பாக உள்ள ஆசையை இல்லாது ஒழிப்பதற்கான மறுவாழ்வளிப்பு அவசியமாகும்.

**(04) C-17 - ஏ.சுரேஷ் (வயது 19)**

**சம்பவத்துடன் தொடர்புடைய சுருக்கமான அறிமுகம்-**

முகாமில் **8** மாதங்கள். இதற்கு முன்னர் அத்தெஸ்ஸ மறுவாழ்வு முகாமில். ட்ரக்ஸ் பயன்படுத்தினார். **2** ஆண்டுகளாக. தற்போது இல்லை. பின்புறத்திற்கு அடித்த பொழுது எனது காற்சட்டை கீழே விழுந்தது. அதனை எனது முகத்தில் போட்டு முழங்காலில் நடக்கச் சொன்னார். வாட்டில் உள்ள சீமெந்து பூசப்பட்ட தரையிலே நடந்தோம். **10** நிமிடங்கள் அளவில். **10 - 5** அடிகள் வரை. முழங்கால்களில் உராய்வு ஏற்பட்டது. அதற்கடுத்த நாள் மருந்து போட்டார்கள். பின்புறத்திற்கு காலால் உதார சேர் உதைத்தார். சப்பாத்து அணிந்திருந்தார். இரண்டு அடிகள். ஸ்கொட் அடித்தேன். சிரமம் இல்லை. ஏனைய நாட்களில் அடிப்பதில்லை. அதன் பின்னரும் அடிக்கவில்லை. இன்னும் ஹெரோயின் அடிக்க எண்ணம் வருகிறது.

- சம்பவத்தோடு தொடர்பற்ற ஏற்கனவே ஏற்பட்ட வெட்டுக் காயங்களின் வடுக்கள் உடம்பில் உள்ளன.
- **2 cm x 2 cm** அளவிலான வலது முழங்காலின் முன்புறத்தில் உராய்வுடன் கூடிய வடு. (முழங்காலில் நடந்த பொழுது காயமேற்பட்டு சொரிந்தது)
- **1.5 cm x 1 cm** அளவிலான இடது முழங்காலின் முன்புறத்தில் உராய்வுடன் கூடிய வடு. (முழங்காலில் நடந்த பொழுது காயமேற்பட்டு சொரிந்தது.)
- பழைய காயங்களின் வடுக்கள்
- முழங்கால்களில் உள்ள வடுக்கள் கரடு முரடான மேற்பரப்பொன்றில் முழங்கால்களூடாக நடந்ததன் காரணமாக ஏற்பட்ட காயங்களால் முழங்கால்களில் காயம் ஏற்பட்டிருக்க முடியும். சொரிந்த காரணத்தினால் காயங்கள் ஆறுவதற்கு காலம் எடுத்திருக்க முடியும்.
- உட்காயத்துடன் கூடிய உடலியல் வதைகளுக்கான சாட்சியங்கள் இல்லை.
- ஹெரோயின் தொடர்பாக உள்ள ஆசையை இல்லாது ஒழிப்பதற்கு மறுவாழ்வு அளித்தல் அவசியமாகும்.

**(05) C-20- ரஷ்மி காஞ்சன (வயது 18)**

**சம்பவத்துடன் தொடர்புடைய சுருக்கமான அறிமுகம்**

- முகாமில் **8** மாதங்களாக உள்ளார். அதற்கு முன்னர் அங்குனகொல சிறைச்சாலையில் ஒரு மாதம். அதற்கு முன்னர் வீட்டில். கைகலப்பொன்று காரணமாக சிறைக்குச் சென்றார்.

திகதி நினைவில் இல்லை. குளித்துவிட்டு துவாயும் இன்றி ஆடையும் இன்றி இருந்துள்ளார். வாட்டின் ஜெய்லர் சேர் உதார, இன்சார்ஜ் தயாபால சேர், காவலாளர் பெரேரா ஆகியோர் வந்தனர். துவாய் இல்லாத ஆறு பேருக்கும் முழந்தாளிட்டு இருக்குமாறு கூறினார். முழங்கால்களில் நடக்குமாறு கூறினார். அந்த வாட்டின் சீமெந்து பூசப்பட்ட தரையில் **10** நிமிடங்கள் முழங்காலில் நடந்தோம். **12** முதல் **13** அடிகள் அளவில். குறைபாடுகள் பற்றிக் கேட்டார். தாக்கவில்லை எந்தவொரு வலியும் இல்லை. **3,4** வாரங்களுக்கு முன்பு நடைபெற்றது. வேறு பிரச்சினைகள் இல்லை. பிரிசன் ஹாஸ்பிடலுக்கு எடுத்துச் சென்றனர். அங்கே முழங்கால்களில் தோல் உரிந்த காயங்களுக்கு மருந்து இட்டார்கள். அடுத்த நாளிலேயே மருந்து போட்டார்கள்.

- சம்பவத்தோடு தொடர்பற்ற ஏற்கனவே ஏற்பட்ட வெட்டுக் காயங்களின் வடுக்கள் உடம்பில் உள்ளன.
- வெள்ளை நிறத்திலான வடுவொன்று சுமார் **1.5 cm x 1 cm** அளவில் வலது முழங்காலில் உள்ளது. (முழங்காலில் நடந்த போது காயம் ஏற்பட்டமை)
- இளம் சிவப்பு நிறத்திலான வடுவொன்று சுமார் **2 cm x 0.5 cm** அளவில் இடது முழம் காலில் உள்ளது. (முழங்காலில் நடந்த போது காயம் ஏற்பட்டமை)
- முழங்கால்களின் காய வடுக்கள் கரடு முரடான மேற்பரப்பு ஒன்றில் முழங்கால்களினால் நடந்தமை காரணமாக உருவான காயங்களாக இருக்க முடியும்
- உட்காயங்களுடன் கூடிய உடலியல் வதைகளுக்கான சாட்சியங்கள் இல்லை.

**(06) B-05 - சமிந்த சமன் குமார (வயது 18)**

**சம்பவத்தோடு தொடர்புடைய சுருக்கமான அறிமுகம் -**

முகாமில் **2** மாதங்கள். அதற்கு முன்னர் வீட்டில் இருந்தேன். களவெடுத்ததனால் முகாமில் போட்டார்கள். கதைக்கின்ற போது திக்குவேன் சிறுவயதிலிருந்தே. குளித்துவிட்டு துவாய் அணிந்திருந்தேன். உதார சேர் முழங்காலில் இருக்கச் சொன்னார். அடிக்கவில்லை. **2** மீற்றர் அளவில் முழங்காலில் சென்றேன். **10** நிமிடங்கள் அளவு. அதன் பின்னர் அடிக்கவில்லை. காலில் தோல் உரிந்து விட்டது. உள்ளே கொங்கிரீட் சீமெந்து தரை. காயங்களுக்கு மருந்து இட்டது அடுத்த நாளிலேயே. எந்தவிதமான சிரமமும் இல்லை. இப்பொழுதும் மதுபானம் அருந்த எண்ணுகின்றேன். குடிப்பதில்லை.

- சம்பவத்துடன் தொடர்பற்ற வடுக்கள் உடலில் உள்ளன.
- **1.5 cm x 1.5 cm** அளவிலான வலது முழங்காலின் முன்புறத்தில் கடும் நிறத்திலான வடுவொன்று உண்டு. . (முழங்காலில் நடந்த பொழுது காயமேற்பட்டமை)
- **2 cm x 1 cm** அளவிலான இடது முழங்காலின் முன்புறத்தில் வெள்ளை நிறத்துடன் கூடிய வடுவொன்று உண்டு. (முழங்காலில் நடந்த பொழுது காயமேற்பட்டமை)

- **1 cm x 0.5 cm** அளவிலான வெள்ளை நிறத்திலான வடுவொன்று வலது பாதத்தின் மேல் பக்கத்தில் உள்ளது. (முழங்காலில் நடந்த போது காயம் ஏற்பட்டமை)
- முழங்கால்களிலும் பாதத்திலும் காயங்களின் வடுக்கள் கரடு முரடான மேற்பரப்பொன்றில் முழங் கால்களினால் நடந்தமை காரணமாக ஏற்பட்ட காயங்களுக்கு உரியவையாக இருக்கலாம்.
- உட்காயங்களுடன் கூடிய உடலியல் ரீதியான வதைக்கான சாட்சியம் இல்லை.
- மதுபானம் தொடர்பான ஆசையை இல்லாது ஒழிப்பதற்கான மறுவாழ்வு அவசியமாகும்.

**<u>அவதானிப்புகள்</u>**

உத்தேச சம்பவம் **2020.05.17** ஆம் தேதி பிற்பகல் **2:30** மணிக்கும் **4:30** மணிக்கும் இடையில் வட்டரெக்கை இளம் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாமின் மேல் மாடியில் பி **2** வாட்டின் உட்பகுதியில் நிகழ்ந்துள்ளதாகவும், குளிப்பதற்காக சென்றுள்ள பாதிக்கப்பட்டவர்களில் சில இளைஞர்கள் துவாய்களை அணிந்து கொண்டும், சிலர் நிர்வாணமாகவும் காணப்பட்டதோடு, வாட்டிற்குள் கூச்சல் நிலவியமையும் பாதிக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்துகைகள், எதிர்வாத தரப்பினரின் விடய முன்வைப்புக்கள், சிறைச்சாலையின் பூர்வாங்க விசாரணை அறிக்கை மற்றும் வைத்திய அறிக்கைக் குறிப்புகள் என்பவற்றிற்கு அமைய அவதானிக்கப்பட்டது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சம்பவம் பற்றி அறிவிக்கப்பட்ட **2020.05.23** ஆம் திகதியன்றே வட்டரெக்கை சிறைச்சாலைக்கு பாதிக்கப்பட்ட பிள்ளைகளை **48** மணித்தியாலங்களுக்குள் நீதிமன்ற வைத்தியர் ஒருவரிடம் முன்னிலைப்படுத்துமாறு அறிவித்த போதிலும், **2020.06.15** ஆம் தேதி இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணை அணியொன்று வட்டரெக்கை சிறைச்சாலைக்குச் சென்று களப் பரிசோதனை மேற்கொண்ட சந்தர்ப்பம் வரையிலும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை நீதிமன்ற வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தத் தவறியிருப்பதோடு, உரிய சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதத்தின் பின்னர் ஆணைக் குழு மேற்கொண்ட இரண்டாவது நினைவூட்டலுக்கு அமைய, பாதிக்கப்பட்டவர்களை **2020.06.17** ஆம் திகதியே நீதிமன்ற வைத்தியர் ஒருவரிடம் முன்னிலைப்படுத்தி இருப்பது புலப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் துவாய்களுடனும் நிர்வாணமாகவும் காணப்பட்டமைக்கு போதியளவு ஆடைகள் இல்லாமையே காரணமாக இருந்ததாகவும், வழங்கப்பட்டிருந்த ஆடைகளை கழுவியமை காரணமாக, ஆடைகள் ஈரமாக இருந்தமையால் இவ்வாறு காணப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இப் பிரச்சினையின் பின்னர் சில பிரிவினருக்கு மாத்திரம் சிறைச்சாலையினால் மேலதிக ஆடைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அனைத்து பிள்ளைகளுக்கும் போதியளவு ஆடைகள் வழங்கப்படாமையும் அவதானிக்கப்பட்டது.

1 ஆம் பாதிக்கப்பட்டவரான ரஷ்மிக காஞ்சன 2020.06.15 ஆம் தேதி மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வழங்கிய வெளிப்படுத்துகைக்கமைய, இரண்டாம் வகுப்புக்குரிய ஜெய்லர் 10 - 15 நிமிடங்களளவில் முழந்தாளிட்டு நடக்கச் செய்ததாகவும், தாக்குதல் எதுவும் நிகழ்த்தப்படவில்லையெனவும் கூறியுள்ளார். 1 ஆம் பாதிப்புக்குள்ளானவர் தொடர்பாக சிறைச்சாலை வைத்தியசாலையினால் வழங்கப்பட்டிருக்கின்ற வைத்திய அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அவதானிக்கையில் வலது காலில் 3cm x 1cm அளவிலும் இடது காலில் 3cm x 1cm அளவிலுமாக முழங்கால்கள் இரண்டினதும் மேற்புறத்தில் காயங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே 1 ஆம் பாதிக்கப்பட்டவர் தொடர்பாக அவிஸ்ஸாவெல்ல தள வைத்தியசாலையூடாக விநியோகிக்கப்பட்டுள்ள சட்ட வைத்திய அறிக்கையில் பாதிக்கப்பட்டவரின் வலது முழங்காலில் 1.5cm x 1cm அளவிலான வெண்ணிற வடுவொன்றும், இடது முழங்காலில் சுமார் 2 cm x 1cm அளவிலான இளம் சிவப்பு நிற வடுவொன்றும் காணப்படுவதாகவும், முழங்கால்களில் உள்ள காயங்கள் கரடு முரடான மேற்பரப்பற்றில் முழங்காலில் நடந்ததன் விளைவாக ஏற்பட்ட காயங்களாக இருக்குமெனவும் கூறப்பட்டுள்ளது.

நோயாளி வைத்தியரிடம் முன் வைத்துள்ள நோயின் வரலாற்றில் ஜெய்லர் உதார வாட்டிலுள்ள சீமெந்து தரையில் 10 நிமிடங்களளவில் 12 முதல் 13 அடிகள் வரையிலான தூரம் மாத்திரம் முழங்காலில் நடக்குமாறு அறிவித்ததாகவும், அவ்வாறு நடந்தமையினால் காயம் ஏற்பட்டதாகவும் தன்னைத் தாக்கவில்லை எனவும் கூறியிருக்கிறார். அதற்கமைய, 1 ஆம் பாதிப்புக்குள்ளானவரான ரஷ்மி காஞ்சன என்பவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள வெளிப்படுத்துகைக்கு சமமான வெளிப்படுத்துகையொன்றை நீதிமன்ற வைத்தியருக்கும் வழங்கியுள்ளார் என்பது அவதானிக்கப்படுகின்றது.

மேற்குறித்த அவதானிப்புகளுக்கு அமைய, 1 ஆம் பாதிப்புக்குள்ளானவரான ரஷ்மி காஞ்சன என்பவரை முதலாம் பிரதிவாதியான எம்.எல் உதார சுமனபால (இரண்டாம் வகுப்பு ஜெய்லர்) முழங்கால்களில் காயங்கள் ஏற்படும் வரை முழங்காலில் நடக்கச் செய்திருக்கிறார் என்பது உறுதியாகிறது.

2 ஆம் பாதிப்புக்குள்ளானவரான அன்ரனி சுரேஷ் என்பவர், 2020.06.15 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள வாக்குமூலத்திற்கு அமைய, ஜெய்லர் உதார ஏனைய பிள்ளைகள் ஐவருக்கு வாட்டில் முழந்தாளிடுமாறு கூறியதாகவும், அவர்களது கைகள் மற்றும் கால்களுக்கு விக்கெட் தடியொன்றினால் தாக்கியதாகவும், அவ்வாறு தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கொடியில் பட்டு அவரது உள்ளாடை கீழே விழுந்ததாகவும் அச்சந்தர்ப்பத்தில் ஜெய்லர் உதார இந்த உள்ளாடையை தலையில் போட்டுக்கொண்டு முழங்காலில் கீழே நடக்கச் செய்ததாகவும் அவ்வாறு நடந்த பொழுது பின்புறத்தை தாக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறே மனித உரிமை ஆணைக் குழுவுக்கு பாதிப்புக்குள்ளான சாமர லக்சான் செனெவிரத்ன என்பவர் 2020.06.15 ஆம் திகதி வழங்கியுள்ள வெளிப்படுத்துகையிலும் தன்னைத் தாக்குவதற்கென ஜெய்லர் உதார என்ற அலுவலர் தடியை மேலே தூக்கிய போது

கொடியிலிருந்த உள்ளாடை ஒன்று கீழே வீழ்ந்ததாகவும், அது அன்ரனி சுரேஷ் என்பவருக்கு உரியதொன்றெனவும், ஜெய்லர் உதார என்ற அலுவலர் அன்ரனி சுரேஷ் என்பவரை அழைத்து, அதனை அவரது தலையிலே சுற்றி முழங் காலில் நடக்கச் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலையின் பூர்வாங்க விசாரணை அறிக்கையிலும் இந்நிகழ்வு தொடர்பாக அன்ரனி என்ற கைதியின் உள்ளாடை அருகிலிருந்து அதனை அவரது முகத்தை மூடத்தக்கவாறு தலையில் போட்டுக் கொள்ளுமாறு கட்டளையிட்டுள்ளதாகவும், அன்ரனி அவ்வாறு செய்ததன் பின்னர் அவரை கீழே முழந்தாளிடச் செய்து ஏலவே அந்த வாட்டிற்குள் முழந்தாளிட்டுள்ள ஏனைய ஐவரோடும் முழங்காலில் நடக்குமாறு கட்டளை இட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. **2** ஆம் பாதிப்புக்குள்ளானவரான அன்ரனி சுரேஷ் சட்ட வைத்தியருக்கு வழங்கியுள்ள நோய் வரலாற்றிலும் பஸ்லானின் பிட்டுக்கு உதார சேர் அடித்தபோது கொடியிலிருந்து காற்சட்டை வீழ்ந்ததாகவும், அதனை முகத்தில் போட்டுக்கொண்டு முழங்காலில் செல்லுமாறு அறிவித்ததாகவும், வாட்டில் உள்ள சீமெந்தில் சுமார் **10** நிமிடங்களளவில் **10** முதல் **15** அடிகள் வரை நடந்ததனால் முழங்காலில் உராய்வுகள் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறே இந்த **2** ஆம் பாதிப்புகுள்ளானவர் தொடர்பாக சிறைச்சாலை வைத்திய அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்களை அவதானிக்கையில், வலது காலில் **1cm x 1cm** அளவிலும், இடது காலில் **1cm x 1cm** அளவிலுமான காயங்கள் இரண்டு முழங்கால்களிலும் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவிஸ்ஸாவெல்ல பொது வைத்திய சாலையூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட நீதிமன்ற வைத்திய அறிக்கையை அவதானிக்கின்ற போது, வலது முழங்காலின் முன்பகுதியில் **2cm x 2cm** அளவிலான உராய்வுடன் கூடிய வடுக்களும், இடது முழங்காலின் முன்பகுதியில். **1.5cm x 1cm** அளவிலான உராய்வுடன் கூடிய வடுக்களும் காணப்பட்டதாகவும், இந்த முழங்கால்களில் உள்ள வடுக்கள் கரடு முரடான மேற்பரப்பொன்றில் முழங்காலில் நடந்ததன் காரணமாக உருவாகிய காயங்களாக இருக்குமெனவும், காயங்கள் சொறிந்ததன் காரணமாக அவை ஆறுவதற்கு காலதாமதம் எடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நீதிமன்ற வைத்திய அறிக்கையில் **2** ஆம் பாதிப்புக்குள்ளானவரான அன்ரனி சுரேஷ் என்பவருக்கு ஹெரோயின் மீதுள்ள ஆசையை இல்லாதொழிப்பதற்கு மறுவாழ்வளித்தல் விடயத்தில் கவனம் செலுத்தப்படுவது அவசியமெனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்குறித்த அவதானிப்புகளுக்கு ஏற்ப, **2** ஆம் பாதிப்புக்குள்ளானவரான அன்ரனி சுரேஷ் என்பவர் முதலாம் பிரதிவாதியான எம். எல் உதார சுமனபால **(**இரண்டாம் வகுப்பு ஜெய்லர்**)** என்பவரால் உள்ளாடை தலையில் போடப்பட்டு முழங்காலில் காயங்கள் ஏற்படும் வரை முழங்காலில் நடக்கச் செய்யப்பட்டுள்ளாரென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. **3**ஆம் பாதிப்புக்குள்ளானவரான சமிந்த சமன் குமார என்பவர். **2020.06.15** ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள வெளிப்படுத்துகைக்கு அமைய, ஜெய்லர் உதார, முழந்தாளிடச் செய்து சீமெந்துத் தரையில் முழங்காலில் நடக்குமாறு அறிவித்ததாகவும் ஜெய்லர் உதாரவின் கையில் விக்கெட் கம்பொன்று இருந்ததாகவும், அதனால் பின்புறத்தில் ஒரு முறை அடித்ததாகவும் முழங்கால்கள்

காயமடைந்து இரத்தம் வடியும் வரை சுமார் **20** சுற்று அளவில் நடக்கச் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அவரால் நீதிமன்ற வைத்தியருக்கு வழங்கியுள்ள நோய் வரலாற்றில் தனக்கு உதார சேர் உள்ளேயுள்ள சீமெந்துத் தரையில் முழந்தாளிடுமாறும் காலிலுள்ள தோல் கழறும் வரை **2** மீற்றர் அளவு சுமார் **10** நிமிடங்கள் முழங்காலினால் நடக்குமாறு கட்டளையிட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

**3**ஆம் பாதிப்புக்குள்ளானவர் தொடர்பாக விநியோகிக்கப்பட்டுள்ள சிறைச்சாலை வைத்தியசாலை வைத்திய அறிக்கையில் வலது காலில் **2cm x 1cm** மற்றும் இடது காலில் **3cm x 1cm** அளவிலான காயங்கள் இரண்டு முழங்கால்களினதும் மேற்பரப்பில் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவிஸ்ஸாவெல்ல பொது வைத்திய சாலையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சட்ட வைத்திய அறிக்கை பாதிப்புக்குள்ளானவரின் வலது முழங்காலின் மேற்பரப்பில் **1.5cm x 1.5cm** அளவிலான கடும் நிறத்திலான வடுவொன்று காணப்படுவதாகவும், இடது முழங்காலின் மேற்பரப்பில் **2cm x 1cm** அளவிலான வெண்ணிற வடுவொன்றும் வலது பாதத்தின் மேற்பரப்பில் **1cm x 0.5cm** அளவிலான வெண்ணிற வடுவொன்று காணப்படுவதாகவும், முழங்கால்களிலும் பாதத்திலும் உள்ள காயங்களின் வடுக்கள் கரடு முரடான மேற்பரப்பொன்றில் முழங்காலில் நடந்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள காயங்களாக இருக்க முடியும் எனவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே **3** ஆம் பாதிப்புக்குள்ளானவரான சமிந்த சமன் குமார என்பவரிடம் மதுபானம் தொடர்பாக உள்ள ஆசையை இல்லாதொழிப்பதற்கு மறுவாழ்வளிப்பதற்காக ஆற்றுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் உள்ளதாக சட்ட வைத்தியர் பரிந்துரை செய்துள்ளார்.

மேற்குறித்த **3** ஆம் பாதிப்புக்குள்ளானவரான சமிந்த சமன் குமார என்பவரை முதலாவது பிரதிவாதியான எம்.எல். உதார சுமனபால **(**இரண்டாம் வகுப்பு ஜெய்லர்**)** என்பவர் முழங்கால்கள் காயமடையும் வரை முழங்கால்களினால் நடக்கச் செய்துள்ளார் என்பது உறுதியாகியுள்ளது.

**4** ஆம் பாதிப்புக்குள்ளானவரான சாமர லக்சான் செனெவிரத்ன என்பவர் **2020.06.15** ஆம் தேதி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள வெளிப்படுத்துகைக்கு அமைய, ஜெய்லர் உதார என்பவரால் முழந்தாளிட்டு நடக்குமாறு அறிவிக்கப்பட்டதாகவும், கிரிக்கெட் தடியொன்றை அவர் தனது கையில் வைத்திருந்ததாகவும், தான் மாத்திரம் எஞ்சியதன் பின்னர் அத்தடியால் காலில் தாக்கப்பட்டதாகவும் அணிந்திருந்த துவாயை கழற்றி நிர்வாணமாக ஆமி ட்ரெயினிங் எனத் தெரிவித்து, லெஃப்ட் ரைட் எனக் கூறிக்கொண்டு நடக்குமாறு அறிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். சிறைச்சாலை பூர்வாங்க விசாரணை அறிக்கையில் **4** ஆம் பாதிப்புக்குள்ளானவரான சாமர லக்சான் செனெவிரத்ன என்பவர் அணிந்திருந்த துவாயைக் கழற்றி, நிர்வாணமாக இடம், வலம் எனக் கூறி வாட்டுக்குள் நடக்கச் செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பெற்றுக்கொள்ளப்பட்ட புகைப்படங்களில் அவருடைய வலது காலின் மேல் தொடையிலே சிராய்ப்பு அடையாளமொன்று காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

சட்ட வைத்தியருக்கு வழங்கப்பட்டுள்ள நோய் வரலாற்றிலும் ஸ்டம்ப் தடி ஒன்றினால் கால் தொடையைத் தாக்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4** ஆம் பதிப்புக்குள்ளானவரான சாமர லக்சான் செனெவிரத்ன என்பவர் தொடர்பாக விநியோகிக்கப்பட்டுள்ள சிறைச்சாலை வைத்தியசாலை வைத்திய அறிக்கையில் வலது காலின் முழங்காலில் **1cm x 2cm,** இடது காலில் **1cm x 3cm** அளவிலான காயங்கள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் தொடர்பாக அவிஸ்ஸாவெல்ல பொது வைத்தியசாலையினால் விநியோகிக்கப்பட்டுள்ள சட்ட வைத்திய அறிக்கையிலும் **2cm x 2cm** அளவிலான மின்னுகின்ற வடுக்கள் இரண்டு கால்களினதும் முழங்கால்களின் மேற்பரப்பில் காணப்படுவதாகவும், **8cm x cm 1** அளவிலான பளபளப்பான நீண்ட வடுவொன்று வலப்புறத் தொடையின் பிற்பகுதியில் காணப்படுவதாகவும், அதன் உள்ளக விளிம்பு அதன் வெளி விளிம்பிலும் பார்க்கக் கூடுதலாகக் காணப்படுவதாகவும், அது ஸ்டம்ப் ஒன்றினால் அடிக்கின்ற பொழுது காயம் ஏற்பட்டு தண்ணீர்க் கொப்புளங்கள் வந்து ஆறியிருப்பதாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. முழங்காலில் உள்ள கரிய நிற வடுக்கள் கரடு முரடான மேற்பரப்பு ஒன்றில் முழங்கால்களினால் நடந்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள காயங்கள் எனவும், ஸ்டம்ப் போன்ற மொட்டையான ஒன்றினால் ஏற்படக்கூடிய நீர்க் கொப்புளங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. வைத்திய அறிக்கைக்கமைய, வாக்குமூலங்களோடு தொடர்புடைய விடயங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

மேலே உள்ள அவதானிப்புகளுக்கு அமைய. **4** ஆம் பாதிப்புக்குள்ளானவரான சாமர லக்சான் செனெவிரத்ன என்பவர் முதலாம் பிரதிவாதியான எம்.எல். உதார சுமனபால **(**இரண்டாம் வகுப்பு ஜெய்லர்**)** என்பவரால் முழங்கால்கள் காயமடையும் வரை முழங்கால்களில் நடக்கச் வைக்கப்பட்டுள்ளாரென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**5** ஆம் பாதிப்புக்குள்ளானவரான எம்.எப்.எம்.பஸ்லான் என்பவர், **2020.06.15** ஆம் திகதி மனித உரிமைகள் ஆனை குழுவுக்கு வழங்கியுள்ள வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ஜெய்லர் உதார கைகளாலும் காலாலும் தாக்கியதாகவும். முழங்கால்களில் நடக்குமாறும் ஓடுமாறும் அறிவித்ததாகவும், வேகத்தைக் குறைத்து நடந்த போது தன்னுடைய பின்புறத்தை தாக்கியதாகவும், கால்கள் காயப்படாத காரணத்தினால் மீண்டும் முழங்காலினால் நடக்க வைத்ததாகவுமாகும். சிறைச்சாலையின் பூர்வாங்க விசாரணை அறிக்கையிலும் பாதிப்புக்குள்ளானவரின் முழங்கால்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிறைச்சாலை வைத்திய வைத்தியசாலையின் வைத்திய அறிக்கையிலும் வலது காலில் **4cm x 2cm** மற்றும் இடது காலில் **2cm x 2cm** அளவிலான வகையில் இரண்டு முழங்கால்களினதும் மேற்பரப்புக்களில் காயங்களைக் காண முடிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளமையும்அவதானிக்கப்பட்டது.

**5** ஆம் பாதிப்புக்குள்ளானவரான எம்.எப்.எம்.பஸ்லான் என்பவர் சட்ட வைத்தியரிடம் வழங்கியுள்ள நோய் பற்றிய வரலாற்றிலும் மேல் மாடி வாட்டில் சீமெந்து தரையில் அரை மணித்தியாலமளவு **20** மீற்றர் தூரம் முழங்காலில் நடக்க வைத்ததாகவும், வேகமாகச் செல்லுமாறு சப்பாத்துடன் கூடிய பாதத்தினால் உதைத்ததாகவும், முழங்காலில் காயங்கள் ஏற்படாமையினால் மீண்டும் காயம் ஏற்படும் வரை முழங்காலில் நடக்க வைத்ததாகவும், கன்னத்தில் அறைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அவிஸ்ஸாவெல்ல பொது வைத்திய சாலையிலிருந்து பெறப்பட்ட சட்ட வைத்திய அறிக்கைக்கு அமைய, **5** ஆம் பாதிப்புக்குள்ளானவரான எம்.எப்.எம்.பஸ்லான் என்பவரின் முழங்கால்கள் காயமடைந்துள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய முதலாம் எதிர்வாதியான எம்.எல். உதார சுமனபால **(**இரண்டாம் வகுப்பு ஜெய்லர்**)** வேண்டுமென்றே இப் பாதிப்புக்குள்ளானவரின் முழங்கால்கள் காயமடையும் வரை முழங்காலில் நடக்க வைத்துள்ளமை நிரூபணமாகியுள்ளது. அதேபோன்று சட்ட வைத்திய அறிக்கையில் வலது முழங்காலின் மேற்புறத்தில் **3cm x 2cm** அளவிலான கரிய நிற வடுவும், இடது முழங்காலின் மேற்புறத்தில் **3cm x 2cm** அளவிலான கரிய நிற வடுவும் காணப்பட்டதாகவும், இந்த முழங்கால்களின் மேற்பரப்பில் கரிய நிற வடுக்கள் கடினமான மேற்பரப்பொன்றில் முழங்காலில் நடந்தமையாலேயே நிகழ்ந்துள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறித்துக் காட்டப்பட்ட அவதானிப்புகளுக்கு அமைய, **5** ஆம் பாதிப்புக்குள்ளானவரான. எம்.எப்.எம்.பஸ்லான் என்பவர் முதலாம் பிரதிவாதியான எம் எல் உதார சுமனபால **(**இரண்டாம் வகுப்பு**)** ஜெய்லரினால் முழங்கால்கள் காயமடையும் வரை முழங்காலில் நடக்க வைக்கப்பட்டுள்ளாரென்பது உறுதியாகியுள்ளது.

**6** ஆம் பாதிப்புக்குள்ளானவரான சஞ்ஜு பிரதீப் என்பவர் **2020.06.15** ஆம் திகதி மனித உரிமை ஆணைக் குழுவுக்கு வழங்கியுள்ள வெளிப்படுத்துகையில், ஜெய்லர் உதார முழந்தாளிடச் செய்து முழங்கால்களினாலேயே நடக்குமாறு அறிவித்ததாகவும். முழங்கால்களில் காயம் ஏற்பட்டதன் பின்னர், சப்பாத்து அணிந்த பாதத்தினால் பின்புறத்தை உதைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். சிறைச்சாலையின் பூர்வாங்க விசாரணை அறிக்கையிலும் இந்த பாதிப்புக்குள்ளானவரின் முழங்கால்கள் காயமடைந்துள்ளனவென குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்புக்குள்ளானவர் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள சிறைச்சாலை வைத்திய அறிக்கையின் படி, கால் பாதத்தின் மேல் பரப்பின் முன்பகுதியில் நேர்கோட்டு வடிவிலான உராய்வுடன் கூடிய காயமும், வலது காலில் **2cm x 1cm** மற்றும் இடது காலில் **2cm x 1cm** அளவிலான காயங்களும் என்ற வகையில் இரண்டு முழங்கால்களினதும் வெளிப்புறத்தில் காயங்களைக் காண முடிந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6** ஆம் பாதிப்புக்குள்ளானவரான சஞ்ஜு பிரதீப் என்பவர் நீதிமன்ற வைத்தியரிடம் வழங்கியுள்ள நோய் வரலாற்றிலும் ஜெய்லர் உதார கடினமான சீமெந்துத் தரையில் முழங்கால்கள் காயப்படுமளவுக்கு முழந்தாளிடுமாறு அறிவித்ததாகவும், **30** அடியளவில் **50** முறை முழங்காலில் நடந்ததாகவும், சப்பாத்துடன் கூடிய பாதத்தினால் முதுகுப் புறத்திற்கு உதைத்ததோடு, தடியொன்றினால் தாக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வெளிப்படுத்துகை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட வெளிப்படுத்துகைக்கு சமமான ஒரு வெளிப்படுத்துகையென அவதானிக்கப்பட்டது. வலது முழங்காலின் மேற்பரப்பில் **2cm x 1.5cm** அளவிலான பளபளப்பான வடு ஒன்றும், இடது முழங்காலின் முன்புறத்தில் **2cm x 1cm** அளவிலான பளபளப்பான வடு ஒன்றும், இடது பாதத்தின் மேற்பரப்பில் **1cm x 1cm** அளவிலான கடும் நிறத்திலான ஒரு சிறிய வடுவும் காணப்பட்டதாகவும், அவிஸ்ஸாவெல்ல பொது வைத்தியசாலையின் மூலம் வழங்கப்பட்டுள்ள நீதிமன்ற வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அம் முழங்காலின் மேற்பரப்பிலும் இடது காலிலும் உள்ள வடுக்கள் கடினமான மேற்பரப்பொன்றில் முழங்காலினால் நடந்தமை காரணமாக ஏற்பட்ட காயங்கள் எனவும் காட்டப்பட்டுள்ளன.

மேற்குறித்த அவதானிப்புகளுக்கு அமைய, **6** ஆம் பாதிப்புக்குள்ளானவரான சஞ்ஜு பிரதீப் என்பவர் முதலாம் எதிர்வாதியான எம்.எல். உதார சுமனபாலவினால் **(**இரண்டாம் வகுப்பு ஜெய்லர்**)** முழங்கால்கள் காயமடையும் வரை முழங்காலில் நடக்க வைக்கப்பட்டுள்ளாரென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது .

மேற்குறித்த அவதானிப்புகளுக்கு அமைய, **1,2,3,4,5,** மற்றும் **6** ஆம் பாதிப்புக்குள்ளானவர்கள் முதலாம் பிரதிவாதியான எம்.எல். உதார சுமனபால **(**இரண்டாம் வகுப்பு**)** ஜெய்லரினால் முழங்கால்கள் காயமடையுமளவிற்கு கடினமான மேற்பரப்பின் மீது முழங்கால்களினால் நடக்க வைக்கப்பட்டுள்ளார்களெனவும், முதலாவது பாதிப்புக்குள்ளானவர் தவிர்ந்த ஏனைய **2,3,4,5** மற்றும் **6** ஆம் பாதிப்புக்குள்ளானவர்கள் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளமையும் தெளிவாகியுள்ளது.

**2** ஆம் பிரதிவாதியான என்.டி. பெரேரா **(**பொறுப்பதிகாரி**)** மற்றும் **3** ஆம் எதிர்வாதியான ஐ.டி. பெரேரா **(**வாட்டிற்கு பொறுப்பான காவலாளர்**)** சம்பவத்தோடு தொடர்புடைய தினத்தன்று பணியாற்றிய பொறுப்புடன் கூடிய அலுவலர்களென இனம் காணப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிகழ்ந்த பாதிப்புகள் தொடர்பான உண்மையான விடயங்களை மூடி மறைத்து மற்றும் பொறுப்புக்களை விட்டு விலகியிருந்து பாதிப்புக்குள்ளானவர்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தவறிய வண்ணம், கடமைப் பணிகளை மேற்கொண்டுள்ளமையால் சம்பவத்தோடு தொடர்புடைய எதிர்வாதிகளாக இனங் காணப்பட்டுள்ளனர்.

**4** ஆம் எதிர்வாதியான சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் டி. எம். நிமல் சாந்த அவர்கள் **1** ஆம் எதிர்வாதியான எம்.எல். உதார சுமனபால **(**இரண்டாம் வகுப்பு ஜெய்லர்**)** என்ற அலுவலர் பிள்ளைகளின் ஒழுக்க விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக குறைந்தபட்ச பலத்தை பிரயோகித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். சில கைதிகள் சராசரி நடத்தைகளுக்கு அப்பாற் சென்று நடந்து கொள்வார்களாயின், அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செயன்முறையே குறைந்தபட்ச பலப் பிரயோகமெனவும் அவர் வரைவிலக்கணப்படுத்திக் காட்டியுள்ளார். இளம் கைதிகளை கடினமான தரையொன்றில் முழங்கால்கள் காயப்படுமளவுக்கு நடக்க வைத்தல் எந்தவோர் அலுவலரினாலும் மேற்கொள்ளப்படுதல் குறைந்தபட்ச பலப் பிரயோகமென வரைவிலக்கணப்படுத்துவது பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரென்ற வகையில் அவருடைய தொழில் வாண்மைக்கு அமைய மிகுந்த கவலைக்குரிய ஒரு நிலைமையென அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே **4** ஆம் எதிர்வாதியினால் மனித உரிமை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய, பாதிக்கப்பட்டவர்களை **48** மணித்தியாலத்திற்குள் நீதிமன்ற வைத்தியர் ஒருவரிடம் முன்னிலைப்படுத்தாத காரணத்தினால் இப்பாதிப்பு தொடர்பான ஓர் பிரதிவாதியாக இனம் காணப்பட்டுள்ளார்.

**5** ஆம் பிரதிவாதியான அப்போதைய தலைமை ஜெய்லரான அஜித் பல்லியகே அவர்கள் இச்சம்பவம் தொடர்பான நீதியானதும் நேர்மையானதுமான பூர்வாங்க விசாரணை ஒன்றை நடாத்தி **1,2** மற்றும் **3** ஆம் எதிர்வாதிகளான அலுவலர்களுக்கெதிரான குற்றச் சாட்டுகளை கோவைப்படுத்தி வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினால் டி**17/**வட்டரெக்கை**/**பொது இலக்க மற்றும் **2024.08.24** ஆம் திகதிய கடிதத்தை ஆணைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தி, வட்டரெக்கை சிறைச்சாலையில் நிகழ்ந்த இந்த ஒழுக்க விரோத செயற்பாடு தொடர்பாக, அப்போதைய தலைமை ஜெய்லரான அஜித் பல்லியகே அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைக்கமைய, இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த ஜெய்லர் எம்.எல்.எல். உதார சுமனபால, சார்ஜன்ட் எம்.டி. பெரேரா மற்றும் காவலாளர் கே.ஐ.டி பெரேரா ஆகிய அலுவலர்களுக்கு எதிராக முதலாம் அட்டவணையின் கீழ் குற்றம் சாட்டுவதற்கான பரிந்துரையை வழங்கி பூர்வாங்க விசாரணை அறிக்கையை வட்டரெக்கை, சிறைச்சாலை அத்தியட்சகருக்கு ஆற்றுப்படுத்தியுள்ளதைத் தொடர்ந்து, வட்டரெக்கை சிறைச்சாலையின் அத்தியட்சகரால் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த ஜெய்லர் எம்.எல்.எல் உதார சுமனபால என்ற அலுவலருக்கு எதிராக மாத்திரம் தாபன விதிக் கோவையின் இரண்டாம் தொகுதியின் **11** ஆம் அட்டவணையின் கீழ் குற்றச் சாட்டுப் பத்திர வரைபை மேற்கொண்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளாரெனவும், அதற்கமைய **2020.07.15** ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட குற்றச் சாட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் சாட்டினை இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த ஜெய்லர் எம்.எல்.எல் உதார சுமனபால அவர்கள் ஏற்றுக் கொண்டு விடுவிப்புக்கான விடயங்களை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, டி**17/**வட்டரெக்கை**/35/20** ஆம் இலக்க மற்றும்

**2020.10.06** ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அலுவலர் குற்றவாளியாக இனம் காணப்பட்டு, **5** நாட்களுக்கான சம்பளம் தண்டப் பணமாக விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளாரென அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, இச்சம்பவத்தோடு தொடர்புடைய **1** ஆம் பிரதிவாதியான இரண்டாம் வகுப்புக்குரிய ஜெய்லர் எம்.எல்.எல் உதார சுமனபால அவர்கள் தொடர்பாக மாத்திரம் ஒழுக்காற்றுச் செயன்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

__முடிவு__

மேலே காட்டப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் முழுமொத்தமாக கருத்தில் எடுத்து நோக்குகையில், **1** ஆம் எதிர்வாதியான என்.எல்.எல் உதார சுமனபால **(**இரண்டாம் வகுப்பு ஜெய்லர்**)** அலுவலர் **1,2,3,4,5** மற்றும் **6** ஆம் பாதிக்கப்பட்டவர்களின் முழங்கால்கள் காயமடையுமளவிற்கு கடினமான தரை மீது முழங்காலினால் நடக்க வைத்துள்ளாரெனவும், **1** ஆம் பாதிப்புக்குள்ளானவர் தவிர்ந்த ஏனைய **2,3,4,5** மற்றும் **6** ஆம் பாதிப்புக்குள்ளானவர்களை தாக்கியுள்ளாரெனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மையால், **1978** ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் **11** ஆம் உறுப்புரை மூலம் பாதுகாக்கப்பட்டுள்ள **"**ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது**"** என்ற அடிப்படை உரிமையை **1** ஆம் எதிர்வாதியான எம்.எல்.எல். உதார சுமனபால **(**இரண்டாம் வகுப்பு ஜெய்லர்**)** அலுவலர் **1,2,3,4,5** மற்றும் **6** ஆம் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக மீறியிருப்பதாக இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**2** ஆம் எதிர்வாதியான எம்.டி. பெரேரா **(**பொறுப்பதிகாரி**)** மற்றும் **3** ஆம் எதிர்வாதியான கே.ஐ.டி. பெரேரா **(**வாட்டிற்குப் பொறுப்பான காவலர்**)** சம்பவத்தோடு தொடர்புடைய திகதியன்று பி **2** என்ற வாட்டின் கடமைக்குப் பொறுப்பான அலுவலர்களாக இருந்தமையால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக உண்மையான விடயங்களை மூடி மறைத்தமை மற்றும் பொறுப்புகளிலிருந்து விலகியிருந்து பாதிப்புக்குள்ளானவர்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தவறியமை என்பவற்றின் காரணமாக மேற்குறித்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக பொறுப்புக் கூற பணைக்கப்பட்டுள்ளாரெனவும் தீர்மானிக்கப்படுகின்றது.

**4** ஆம் எதிர்வாதியான சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் டி.எம். நிமல் சாந்த அவர்கள் இச்சம்பவம் அறிக்கையிடப்பட்ட சந்தர்ப்பத்தில், பாதிப்புக்குள்ளானவர்களை நீதிமன்ற வைத்தியர் ஒருவரிடம் முன்னிலைப்படுத்தாத காரணத்தினால், அவருக்குப் பொறுப்புவிக்கப்பட்டிருந்த கடமைப் பொறுப்பை மீறியிருப்பதாகவும், தனக்குக் கீழேயுள்ள கைதிகளின் பாதுகாப்புத் தொடர்பாக அவருக்குள்ள மேற்பார்வைப் பொறுப்பை எச்சந்தர்ப்பத்திலும் மீற முடியாதெனவும் தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வாறே மனித உரிமை ஆணைக் குழுவினால் காயப்பட்டவர்களை நீதிமன்ற வைத்தியர் ஒருவரிடம் முன்னிலைப்படுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட கட்டளையை கருத்திலெடுக்காமல் மற்றும் **/** அல்லது

தாமதப்படுத்தியமையூடாக **1978** ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் **12(1)** ஆம் உறுப்புரையூடாகப் பாதுகாக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையை **4** ஆம் எதிர்வாதியான சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் டி.எம். நிமல் சாந்த அவர்கள் மீறி இருக்கின்றாரெனவும் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இச் சர்ச்சைக்குரிய சம்பவம் நிகழ்ந்த காலப் பகுதியில் வட்டரெக்க சிறைச்சாலையின் தலைமை ஜெய்லராகப் பணியாற்றிய அஜித் பல்லியகே அவர்கள் **5** ஆம் எதிர்வாதியாக பெயரிடப்பட்டுள்ள போதிலும், அவரால் இச் சம்பவம் தொடர்பான நீதியானதும் நேர்மையானதுமான பூர்வாங்க விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு, பரிந்துரை வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமையால் அவருக்கு இச்சம்பவத்தோடு தொடர்புடைய நேரடி அல்லது மறைமுக பொறுப்பொன்றை பொறுப்புவிப்பதற்கான விடயமெதுவும் வெளிப்படுத்தப்படவில்லையெனவும் தீர்மானிக்கப்படுகின்றது.

**இதற்கமைய கீழ் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.**

**01.** **1** ஆம் பிரதிவாதியான எம்.எல்.எல். உதார் சுமனபால **(**இரண்டாம் வகுப்பு ஜெய்லர்**)** அலுவலர் ஒவ்வொரு பாதிக்கப்பட்டவருக்கும் இரண்டாயிரத்து ஐநூறு ரூபா **(**ரூ.**2500/=)** வீதம் மொத்தம் ரூபா பதினையாயிரம் **(15,000/=)** பணத்தை பாதிக்கப்பட்ட ஆறு பேருக்கும் நட்ட ஈடாக வழங்குதல் வேண்டும்.

**02.** **2** ஆம் பிரதிவாதியான பொறுப்பதிகாரி எம்.டி. பெரேரா, **3** ஆம் எதிர்வாதியான வாட்டிற்குப் பொறுப்பான காவலாளர் கே.ஐ.டி. பெரேரா மற்றும் **4** ஆம் எதிர்வாதியான சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் டி.எம். நிமல் சாந்த ஆகிய அலுவலர்களுக்கெதிராக பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடுவதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**03.** வட்டரெக்கை இளம் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலை மற்றும் திறந்த வேலை முகாமிற்குள் இருக்கின்ற கைதிகளுக்கு ஆடைகள் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகளை போதியளவில் வழங்குவதற்கு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

*2024.11.20* திகதிக்கு முன்னர் இப் பரிந்துரைகளை செயல்படுத்தி, இது தொடர்பான அறிக்கையொன்றை ஆணைக் குழுவுக்கு கிடைக்கச் செய்யுமாறு **1996** ஆம் ஆண்டின் **21** ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் **15(7)** ஆம் பிரிவின் பிரகாரம் பிரதிவாதிகளுக்கு அறியத் தருகின்றோம்.

*உயர் நீதிமன்ற நீதிபதி* **(***ஓய்வு நிலை***)** *தவிசாளர்*
*இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு*

*ஆணையாளர்,* *இலங்கை மனித உரிமைகள்*
*ஆணைக்குழு*

| | | | |
|---|---|---|---|
| *பிரதிகள்* | **-** | *01.* | *கௌரவ அமைச்சர் அவர்கள்,*<br>*நீதிமன்ற சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு,* *இல.***19,** *ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,*<br>கொழும்பு **10.** |
| | | *02.* | *சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்,*<br>*சிறைச்சாலைகள் திணைக்களம்,*<br>இலக்கம் **150,** பேஸ்லைன் வீதி<br>கொழும்பு **9.** |

**உரிய பரிந்துரைகளை அமுலாக்கம் செய்வதற்காக.**

**பரிந்துரை இலக்கம் - 4**

முறைப்பாட்டாளர் - திரு. ஜெக்சன் பிரேமசிரி கன்னங்கர,
K.E.W. அப்பர் அபர்டீன் பவர் கிரீட் லிமிடட்
115 A, பாடசாலை மாவத்தை,
கங்கொடவில,
நுகேகொட.

பிரதிவாதிகள் - 01 தவிசாளர்
மத்திய சுற்றாடல் அதிகார சபை,
பரிசர பியச
104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

02 பணிப்பாளர்,
மத்திய சுற்றாடல் அதிகார சபை அலுவலகம்,
பொல்கொல்ல.

**முறைப்பாட்டு இல.: - H.R.C. / 4835/23**

**முறைப்பாடு** -

மேற்குறிப்பிடப்பட்ட முறைப்பாட்டாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை தாக்கல் செய்து, முன்மொழியப்பட்டுள்ள அப்பர் அபர்டீன் சிறிய நீர் மின் உற்பத்தித் திட்டத்திற்காக புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி நிலையமொன்றை புதிதாக தாபித்தலுடன் தொடர்பாக முறைப்பாட்டாளரால் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

01 விவசாயத் திணைக்களம்
02 பூகற்பவியல் ஆய்வு சுரங்கப் பணியகம்
03 நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
04 தொல்பொருளியல் திணைக்களம்
05 நீர்ப்பாசனத் திணைக்களம்
06 கமநல சேவை மாவட்ட அலுவலகம்
07 அம்பகமுவ பிரதேச சபை
08 மத்திய சுற்றாடல் அதிகார சபை
09 இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபை
10 இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு
11 அம்பகமுவ பிரதேச செயலகம்
12 மத்திய மாகாண காணி ஆணையாளர் அலுவலகம்
13 காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

ஆகிய நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும், அதற்கமைய சுற்றாடல் அமைச்சின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஜனாதிபதி, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டு இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்டிருக்கையில் சட்ட ரீதியாக இலங்கை மின்சார சபையின் இணக்கப்பாடு காணப்படுகையில் எந்த விதமான சட்ட ரீதியான உரிமையும் இல்லாத மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளரால் மேலுள்ள அனைத்து அங்கீகாரங்களையும் தாண்டி நடவடிக்கை மேற்கொண்டு பாரிய நட்டமொன்றை ஏற்படுத்தியுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர் மேலும் தெரிவிப்பதாவது, தொடர்புடைய அனைத்து நிறுவனங்களின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் பேண்தகு சக்தி அதிகார சபையினால் கருத்திட்டத்தை

நிர்மாணிப்பதற்கான அனுமதிப்பத்திரமும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் மின் உற்பத்திக்கான அனுமதிப்பத்திரம் மற்றும் இலங்கை மின்சார சபையினால் இந்தக் கருத்திட்டத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தையும் கைச்சாத்திட்டதன் பின்னர் 2012.01.31 முதல் 2014.01.31 வரையான காலப் பகுதியினுள் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பெப்ரவரி முதல் மின்சாரத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அந்தப் பிரதேசத்தின் அரசியல் நிறுவனமொன்றின் அழுத்தம் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2014.07.21 ஆம் திகதிய கடிதத்தினூடாக அந்த ஆறு நெடுகிலும் சுமார் 60 மீட்டர் உயரத்தில் காணப்படும் கல்கெடிவலை வரை மின் உற்பத்தி நிலையத்தை நீடித்து ஆற்றின் குறுக்கு அணையை தேவையானளவு உயரத்திற்கு எடுக்குமாறும் இந்த திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டத்திற்கான திருத்தம் மாத்திரமாகுமெனவும் தேவையான திட்டமிடல் மற்றும் மேலதிக அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அதனை அங்கீகரித்துக்கொள்ள முடியுமெனவும் மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச்செல்வதற்கு முடியுமெனவும் எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட திருத்தங்களுக்காக மீண்டும் அளவிட்டு சுற்றாடல் சார்ந்த மேலதிக அறிக்கையை 2016.10.04 ஆம் திகதி வழங்குவதற்கு முடியமாகவிருந்ததாகவும் (மேலும் தாமதத்திற்கான காரணமாக சீரற்ற காலநிலை நிலவியதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன்) அந்த திருத்தத்தைப் பார்ப்பதற்கு (அவதானிப்பதற்கு) செல்வதற்காக ரூ. 50000/- செலுத்த வேண்டுமென மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2019.03.22 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் முறைப்பாட்டாளர் குறித்த தொகையை செலுத்தி நிறைவு செய்ததாகவும் அதன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2019.06.03 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விடுக்கப்பட்ட அந்த முன்மொழிவுகள் உள்ளடங்கிய கருத்திட்டத்திற்கு அங்கீகாரத்தை வழங்க முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அந்த தீர்மானத்திற்கு எதிராக அமைச்சின் செயலாளருக்கு 30 நாட்களுக்குள் மேன்முறையீடொன்றை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் முறைப்பாட்டாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனாலும் முறைப்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் வெளிநாடு சென்றிருந்தமையினால் 2019.06.03 ஆம் திகதிய கடிதத்திற்கு பதிலொன்றை அனுப்புவதற்கு காலத்தை நீடித்து தருமாறு கோரிய போதிலும் அதற்கு பதில் கிடைக்கவில்லையெனவும் ஆயினும் அந்த கடிதம் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக முறைப்பாட்டாளர் எண்ணியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் முறைப்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் இலங்கைக்கு வருகைதந்ததன் பின்னர் மேன்முறையீடொன்றை முன்வைத்ததுடன் அது நிராகரிக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த கருத்திட்டத்திற்கு 14 நாட்களுக்குள் அனுமதி வழங்குமாறு 2021.08.17 கடிதத்தின் ஊடாக பேண்தகு சக்தி அதிகார சபையினால் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருப்பினும் அந்த அதிகார சபையினால் அந்த கடிதத்திற்கு பதில் அனுப்பப்படவில்லை. 2023.10.19 சுற்றாடல் அமைச்சில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது அதில் பங்குப்பற்றிய அனைவரும் முறைப்பாட்டை மேற்கொண்டுள்ள நிறுவனத்திற்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொண்டதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பிரதிவாதியின் கருத்துத் தெரிவிப்பு :**

பிரதிவாதி தரப்பான மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இந்த ஆணைக்குழுவிற்கு 2024.01.03 ஆம் திகதிய எழுத்து மூலமான சமர்ப்பணம் ஊடாக விண்ணப்பதாரியினால் இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், நீர்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், இலங்கை மஹாவலி அதிகார சபை, வனப்பாதுகாப்புத் திணைக்களம் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்று கூடி உத்தேச கருத்திட்டத்தினால் நீர்வீழ்ச்சிக்கு பாதிப்பு ஏற்படாதெ இனங்கண்டுக்கொள்ளப்பட்டதன் பின்னர் PA-207001 மற்றும் 2003.10.12 ஆம் திகதி பேண்தகு சக்தி அதிகார சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த கருத்திட்டத்திற்கு சுற்றாடல் சார்ந்த தாக்கங்களை மதிப்பீடு செய்வதன் நடைமுறையின் கீழ்

ஆரம்ப சுற்றாடல் சார்ந்த சோதனையொன்று 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2010.09.03 ஆம் திகதி சுற்றாடல் தொடர்பான அங்கீகாரமும் 3 வருடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆரம்ப சுற்றாடல் சார்ந்த சோதனை செயற்பாட்டிற்கு பூகற்பவியல் அறிக்கை, மண்சரிவு ஆய்வறிக்கை, நீர் சார்ந்த ஆய்வறிக்கை, தாவரங்கள் மற்றும் விலங்குகள் தொடர்பான ஆய்வறிக்கை, ஆரம்ப சுற்றாடல் சார்ந்த சோதனை அறிக்கை ஆகிய அறிக்கைகளை ஆய்வுசெய்ததன் பின்னர் பல்வேறு சுற்றாடல் சார்ந்த தாக்கங்கள் தொடர்பாக விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் முக்கியமாக இந்த கருத்திட்டம் அமைந்துள்ள நிலப்பகுதி வன பாதுகாப்புத் திணைக்களத்திற்குரியதாக இருப்பதனால் அந்த நிறுவனத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படாமை மற்றும் அபர்டீன் நீர்வீழ்ச்சிக்கு மேலே காணப்படும் சிறிய நீர்வீழ்ச்சிகள் வற்றி போவதனால் நீர்வீழ்ச்சியின் அழகு எழில் குறைவடைதல் பற்றிய சிக்கலொன்று அவதானிக்கப்பட்டுள்ளமையினால் மத்திய மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் கட்டளை பிரகாரம் குறித்த கருத்திட்டம் அமைந்துள்ள நிலப்பகுதி தொடர்பாக நில அளவை அறிக்கையொன்றுப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும், அபர்டீன் நீர்வீழ்ச்சிக்கு மேலே காணப்படும் சிறிய நீர்வீழ்ச்சிகள் தொடர்பாக தொழில்நுட்பக் குழுவின் அலுவலர்களது பரிந்துரைக்கமைய அந்த நீர்வீழ்ச்சிகளின் எழிலை பேணி வருவதற்காக நீர் 700 1/5-1 அளவை விடுவித்தல் போதுமானதாகுமெனவும் இந்த கணக்கிடலானது மழைக்காலங்களில் உச்சளவு மின்சாரத்தை உற்பத்தி செய்வதும் மழை குறைந்த காலப்பகுதிகளில் மின்சாரம் உற்பத்தி செய்வதனை இடைநிறுத்துவதற்குமான அடிப்படையிலாகும் எனவும் அதன் காரணமாக அபர்டீன் நீர்வீழ்ச்சிக்குப் பாதிப்பு ஏற்படாமையும் அதற்கு மேலே காணப்படும் நீர்வீழ்ச்சிகளின் எழிலை முடியுமானவரை பாதுகாத்தல் மழை காலங்களில் உச்சளவு மின்சாரத்தை உற்பத்தி செய்தல் போன்ற விடயங்கள் அந்த குழுவின் ஒன்றிணைந்த தீர்மானமாகும். இது தொடர்பாக சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரின் தலைமையில் 2013.06.04 ஆம் திகதி நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது கௌரவ அமைச்சரின் அறிவுறுத்தல்களுக்கிணங்க கீழ் குறிப்பிடப்படும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1 களச்சோதனையொன்றை மேற்கொண்டு அவதானிப்புக்கள், முடிவுகளுடன் கூடிய அறிக்கையொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவரால் கௌரவ அமைச்சருக்சு சமர்ப்பித்தல்.

2 இதனகத்துப் பின்னர் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையமொன்றை நிருமாணிக்கும்போது பொருத்தமான இடங்களைக் கண்டறிந்து அவை தொடர்பான பணிகளை இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபையூடாக மேற்கொள்ளல்.

3 சாத்தியத்தகவு ஆய்வொன்றை மேற்கொண்டதன் பின்னர் பொருத்தமென இனங்கண்டு கொள்ளப்படும் இடங்களுடன் தொடர்புடைய சுற்றாடல் சார்ந்த அறிக்கைகள், காணிகளை விடுவித்துக்கொள்ளல் போன்ற அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய அங்கீகாரங்களை இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபையூடாக மேற்கொள்ளல்.

4 தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் திறந்த அடிப்படையிலான விலை மனுக்கள் பின்னர் கோரப்பட்டு கருத்திட்டதுடன் தொடர்புடைய பணி ஒப்பந்தங்களை நிறுவனங்களுக்கு வழங்குதல்.

முதலாவது தீர்மானத்திற்கமைய 2013.08.12 ஆம் திகதி கூட்டமொன்று மற்றும் ஒன்றினைந்த களச்சோதனையொன்று மேற்கொள்ளப்பட்டது. அதில் களவல்தெனிய உதயரத்ன தேரர் உட்பட இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, நுவரெலியா மாவட்டச் செயலாளர், அம்பகமுவ பிரதேச செயலாளர், நுவரெலியா மாவட்ட அலுவலகம், மாகாண காணி ஆணைக்குழு (Provincial Land Commission) முறைப்பாட்டு நிறுவனம், அபர்டீன் சுற்றாடல் அமைப்பு ஆகிய நிறுவனங்கள் பங்குப்பற்றின.

அதன் போது இந்த சிறிய நீர்மின் உற்பத்தி நிலையத்தை நிருமாணித்தல் தொடர்பாக தனது அல்லது பிரதேசத்தில் வசிப்பவர்களின் எந்தவித எதிர்ப்பும் இல்லையெனவும் சுற்றாடலுக்கு மற்றும் நீர்வீழ்ச்சியின் எழிலுக்கு பாதிப்பு ஏற்படுவதனால் மின் உற்பத்தி நிலையத்திற்கு இடது கரைக்கு அல்லது மேல் பகுதிக்கு கொண்டுசெல்லல் மிகப் பொருத்தமெனவும் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கிணங்க நீர்வீழ்ச்சியிலிருந்து மேலே கொண்டுசெல்லல்

தொடர்பாக பேண்தகு சக்தி அதிகார சபையினால் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு மின்னுற்பத்தி நிலையத்தின் மற்றும் அணைக்கட்டின் புதிய திருப்பப்பட்ட இடம்தொடர்பாக 2014.01.30 மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக 2014.06.24 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சரப, பேண்தகு சக்தி அதிகார சபை, அம்பகமுவ பிரதேச சபை கட்டிடங்கள் மேம்பாட்டுத் திணைக்களம், வனப்பாதுகாப்புத் திணைக்களம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை போன்ற நிறுவனங்களினால் ஒன்றிணைந்த களச்சோதனையொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய அனைத்து நிறுவனங்களிமிருந்தும் பரிந்துரைகள்/ கால நீடிப்புக்கள்/ இணக்கப்பாடுளுடன் கூடிய புதிய திருத்தங்களுடன் தொடர்புடைய விடயங்கள் உள்ளடங்கிய குறைநிரப்பு அறிக்கையொன்றை (Supplementtory Report) வழங்குவதற்கு மற்றும் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டிற்குட்படுத்தியதன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிபார சபையினால் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் பொருத்தமெனவும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளும்போது தொழில்நுட்பம் சார்ந்த விடயங்கள் மற்றும் எழ கூடிய சமூக சிக்கல்களையும் கவனத்திற்கொள்ளுதல் முக்கியமென்பதனால் நுவரெலியா மாவட்டச் செயலாளரின் தலைமையிலான மாவட்ட சுற்றாடல் சார்ந்த சட்டங்களை நடைமுறைப்படுத்தும் குழுவின் விசேட கவனத்தை இந்த கருத்திட்டத்தின் மீது ஈர்த்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2013.08.12 மேற்கொள்ளப்பட்ட களச்சோதனை மற்றும் அதன் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பின்னரும் முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தின் அணைக்கட்டு மற்றும் மின்உற்பத்தி நிலையத்தை நிருமாணிப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட இடங்கள் தொடர்பாக பல்வேறு எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், 2016.10.11 கருத்திட்ட பணிப்பாளரால் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு புதிய இடமொன்று தொடர்பான மேலதிக அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கைக்கமைய மற்றும் பேண்தகு சக்தி அதிகார சபை கடிதத்தின் செல்லுபடியாகும் தன்மை பற்றிய குறித்துரைக்கப்பட்ட திகதியொன்று இல்லாமையினால் அது தொடர்பாக வினவி 2018.10.12 ஆம் திகதி நடைபெற்ற Over Site குழுவுக்கு சமர்ப்பித்து அறிவுறுத்தல் கோரப்பட்டுள்ளன. அக்குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க பேண்தகு சக்தி அதிகார சபையினால் அவதானிக்கப்பட்ட செல்லுபடியாகும் Provisional Approval இனை சமர்ப்பிக்குமாறும், அதன் பின்னர் சுற்றாடல் சார்ந்த அங்கீகாரத்தை (Env Approval) இனை பெற்றுக்கொடுப்பதனை கவனத்திற்கொள்வதாகவும் முறைப்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட்டது. (அறிவிக்கப்பட்ட கடிதம் இணைக்கப்படவில்லை)

ஆனாலும் அவரால் செல்லுபடியாகும் Provisional Approval சமர்பபிக்கப்படவில்லை என்பதோடு, 2018.01.15 ஆம் திகதி பேண்தகு சக்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள கடிதத்தில், குறித்த கருத்திட்டத்தின் புதிய இடங்களுக்கான அனுமதிப் பத்திரத்தில் (Energy Permit) செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு சுற்றாடல் சார்ந்த பரிந்துரையை எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு விடயங்கள் தொடர்பில் 106 ஆவது தீர்மானம் எடுக்கும் குழு கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் தொழில்நுட்பக் குழுவொன்றை அமைத்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த குழுவின் அறிக்கைக்கமைய குறித்த இடம் பொருத்தமற்றதாக இருப்பதனால் அங்கீகாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு அங்கீகாரம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக 2019.06.03 ஆம் திகதி கருத்திட்டத்தை முன்மொழிந்தவருக்கு பதிவுத் தபாலில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த தீர்மானத்தினால் அதிருப்தி அடைந்தால் 30 நாட்களுக்குள் சுற்றாடல் அமைச்சின்

செயலாளருக்கு மேன்முறையீடொன்றை தாக்கல் செய்யவேண்டியிருந்த போதிலும், அந்த மேன்முறையீடானது 2019.08.29 திகதியே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய காலப்பகுதியினுள் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த மேன்முறையீட்டை விசாரிக்க முடியாதென 2023.02.03 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சின் தலைமை சட்ட அலுவலரால் மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அவதானிப்பு :**

முறைப்பாட்டாளர் கீழ் குறிப்பிடப்படும் நிறுவனங்களிடமிருந்து தனது கருத்திட்டத்திற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டுள்ளமையை அவதானிக்க முடியுமாகவிருக்கின்றது.

விவசாயத் திணைக்களம்
பூகற்பவியல் ஆய்வு சுரங்கப் பணியகம்
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
தொல்பொருளியல் திணைக்களம்
நீர்ப்பாசனத் திணைக்களம்
கமநல சேவை மாவட்ட அலுவலகம்
அம்பகமுவ பிரதேச சபை
மத்திய சுற்றாடல் அதிகார சபை
இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபை
இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு
அம்பகமுவ பிரதேச செயலகம்
மத்திய மாகாண காணி ஆணையாளர் அலுவலகம்
காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து அங்கீகாரங்களையும் பெற்றுக்கொண்டதன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபை 2010.09.06 ஆம் திகதி மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சில நிபந்தனைகள் உடன் மூன்று வருட காலத்திற்கு அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. அதற்கிணங்க மத்திய சுற்றாடல் அதிகார சபையின் CEA/CPO/NW/P &E/08/32 மற்றும் 2010.09.06 ஆம் திகதி இந்த கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சில நிபந்தனைகள் உடன் 03 வருட காலத்திற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் பிரகாரம் பேண்தகு சக்தி அதிகார சபையினால் இலக்கம் EP/322900 மற்றும் 2012.01.31 ஆம் திகதி மின் உற்பத்தி நிலையத்திற்கு நிருமாணிப்பதற்குத் தேவையான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டாளருக்கு வழங்கப்பட்டிருந்த Enviornmental Approval அனுமதிப் பத்திரத்திற்குரிய செல்லுபடியாகும் காலப்பகுதியினுள் பிரதிவாதிக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பிரதேசவாசிகளினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் காரணமாக மற்றும் குறித்த கருத்திட்டத்தின் நிர்மாணங்கள் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய காணிப்பகுதியொன்று உள்ளடக்கப்படும் வகையில் அமைந்திருந்தமையினால் சுற்றாடல் அமைச்சரின் தலைமையில் 2013.06.04 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின்போது மீண்டும் களச் சோதனையொன்றை மேற்கொண்டு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பொது முகாமையாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடியுமாகவிருப்பதுடன் குறித்த காணி வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்குரியதல்லவெனவும் காணி ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதெனவும் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் பொது முகாமையாளரால் (GM), தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது அறிவுறுத்தல்களுக்கிணங்க அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக 2013.08.12 ஆம் திகதி கூட்டமொன்றும் ஒன்றிணைந்த களச்சோதனையொன்றும் நடாத்தப்பட்டுள்ளதாகவும் உறுதியாகின்றது.

அக்கூட்டத்தின்போது அணைக்கட்டு மற்றும் மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணிப்புத் தொடர்பாக மாற்று முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க புதிய

திருத்தப்பட்ட இடம் பற்றி 2014.05.30 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பேண்தகு சக்தி அதிகார சபையின் அறிவித்தலின் பின்னர் 2014.06.24 ஆம் திகதி ஒன்றிணைந்த சோதனையொன்றை (முன்மொழியப்பட்டுள்ள திருத்தம்) நடாத்தி புதிய திருத்தத்துடன் தொடர்புடைய குறைநிரப்பு அறிக்கையொன்றை வழங்கியதன் பின்னர் தொழில்நுட்பக் குழுவின் மதிப்பீட்டிற்குட்படுத்தி பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவ்வாறு அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்னர் தொழில்நுட்ப ரீதியிலான விடயங்கள் மற்றும் எழக்கூடிய சிக்கல்களை கவனத்திற் கொள்வதற்காக மாவட்டச் செயலாளரிடமிருந்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்புடைய புதிய திருத்தம் முறைப்பாட்டாளருக்கு 2014 யூலை 21 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதெனவும், அதற்கிணங்க முறைப்பாட்டாளரால் மீண்டும் அளவிடப்பட்டு சுற்றாடல் சார்ந்த மேலதிக அறிக்கையொன்று 2016.10.04 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டாளரின் எழுத்து மூலமான தெரிவிப்புக்கமைய தெளிவாகின்றது. தாமதத்திற்கான காரணமாக அக்காலப்பகுதியில் நிலவிய சீரற்ற காலநிலை நிலவியமை காரணமென முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளமையை அவதானிக்க முடியுமாகவிருக்கின்றது.

அந்த மேலதிக அறிக்கையை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மத்திய மாகாண சுற்றாடல் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு 2017.09.22 ஆம் திகதி அனுப்பியுள்ளதாகவும் அதாவது சுமார் ஒரு வருட காலம் தாமதப்படுத்தியுள்ளதாக அவதானிக்கப்படுவதுடன் அந்த திருத்தப்பட்ட இடத்தை பார்ப்பதற்கு செல்வதற்காக ரூபா 50000/- செலுத்துமாறு 2019.03.22 முறைப்பாட்டாளருக்கு அறிவித்துள்ளதாகவும் அதற்கிணங்க குறித்த செலுத்துகை தொடர்பாக அறிவிப்பதற்குக்கூட சுமார் 2 1/2 வருட காலம் எடுத்துள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது. அதற்கிணங்க மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் முன்மொழியப்பட்ட அந்த புதிய திருத்தத்துடன் தொடர்பாக முறைப்பாட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2 1/2 வருட காலம் எடுத்திருந்தாலும் அதற்காக நியாயமான காரணங்களை சமர்ப்பிக்கவில்லையெனவும் அவதானிக்கப்படுகின்றது.

மேலும் 2013.08.12 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களச்சோதனை மற்றும் அதற்கிணங்க எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பின்னர் இந்த கருத்திட்டத்தின் திருத்தப்பட்ட இடம் தொடர்பாக நீர் தேவைப்பாடு மீது தாக்கம் ஏற்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளதாக 2019.06.03 ஆம் திகதிய மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அதனை உறுதிப்படுத்துவதற்கான எந்தவொரு ஆவணமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

முறைப்பாட்டாளரால் 2016.10.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை தொடர்பில் Over site குழுவின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த அறிக்கை 2019.10.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது 3 வருடங்களின் பின்னர் என்ற விடயம் அவதானிக்கப்படுகின்றது. மேலும் குறித்த முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தின் அணைக்கட்டு மற்றும் உற்பத்தி நிலையம் தொடர்பான திருத்தப்பட்ட இடங்கள் சம்பந்தமாக பிரதிவாதி மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களை உள்ளடக்கிய ஒன்றிணைந்த களச்சோதனை மற்றும் கலந்துரையாடலின் பின்னரே முன்மொழியப்பட்டுள்ளதாகவும், அவர்களினாலேயே முன்மொழியப்பட்ட திருத்தப்பட்ட இடங்கள் பொருத்தமற்ற இடங்கள் என தொழில்நுட்பக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டமை காரணமாக அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்ற விடயம் அவதானிக்கப்படுகின்றது.

அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான தீர்மானத்திற்கு எதிராக 30 நாட்களுக்குள் சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீட்டை முன்வைப்பதற்கான வாய்ப்பு நிலவினாலும் முறைப்பாட்டாளரால் பணிப்பாளர் வெளிநாடு சென்றிருந்தமையினால் மேன்முறையீடு செய்வதற்கான திகதியை நீடித்துத் தருமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. ஆனாலும் அந்த கடிதம் தொடர்பில் சுற்றாடல்

அமைச்சின் செயலாளர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையை அறிவுறுத்தவில்லையென அவதானிக்கப்படுகின்றது. அதற்கிணங்க முறைப்பாட்டாளர் உரிய காலப்பகுதியினுள் செயலாளருக்கு மேன்முறையீட்டை சமர்ப்பிப்பதற்கு தவறியுள்ளதாகக் கருதி முறைப்பாட்டாளரால் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள 2019.08.27 ஆம் திகதிய மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளதென்ற விடயத்தையும் அவதானிக்க முடிகின்றது. மேலும் இந்த கருத்திட்டத்தை 14 நாட்களுக்குள் மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்குமாறு பேண்தகு சக்தி அதிகார சபையினால் 2021.08.19 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கோரிக்கை தொடர்பில் பிரதிவாதி பதிலளித்துள்ளமையை காணமுடியவில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற்கொள்ளும்போது முறைப்பாட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட இடம் பற்றிய மேலதிக அறிக்கை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்க மத்திய சுற்றாடல் அதிகார சபை நியாயமாக காரணத்தை சமர்ப்பிக்காமல் சுமார் 3 வருட காலம் எடுத்து இருக்கும்போது முறைப்பாட்டாளரால் நியாயமான காரணத்தின் அடிப்படையில் (அதாவது நிறுவனத்தின் பணிப்பாளர் வெளிநாடு சென்றமை) குறித்த தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீட்டை முன்வைப்பதற்கு கால நீடிப்பைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்து மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தீர்மானம் வழங்கப்பட்டு 30 நாட்களுக்குள் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக எந்திவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் இவ்வாறான பாரிய தொகையொன்றை செலவு செய்து தேசிய மின்சக்தி இலக்கை பூர்த்திசெய்துகொள்வதற்கான கருத்திட்டமொன்றுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை இரத்துச் செய்லுடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டைக் கவனத்திற் கொள்ளவும் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மிகக் கவனமாக நடவடிக்கை மேற்கொள்வதற்கிருந்த சந்தர்ப்பங்களும் தவறவிடப்பட்டுள்ளதாக மேலும் அவதானிக்கப்படுகின்றது.

முறைப்பாட்டாளருக்கு அவருடைய குறித்த கருத்திட்டம் தொடர்பாக தேவைப்படுகின்ற அனைமத்து அனுமதிகள் மற்றும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டிருக்கையில் பிரதிவாதியினால் சுற்றாடல்சார் அங்கீகாரம் (Environmental Approval) செல்லுபடியாகும் காலப் பகுதியினுள் இந்தக் கருத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அரச நிறுவனங்களே இடையூறாக இருப்பதனை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

மேலும் நாட்டின் பொருளாதார நிலைமையை மேம்படுத்திக்கொள்வதற்கான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் நாட்டின் பிரஜைகளுக்கும் தேவைப்படுகின்ற இவ்வாறான கருத்திட்டமொன்று தொடர்பாக தொடர்புடைய முறைப்பாட்டுத் தரப்பான கருத்திட்ட முன்மொழிவாளரால் பாரிய தொகையொன்றை செலவிடுவதற்கு முன்னர் தேவையான அங்கீகாரங்களை பெற்றுக்கொடுப்பதனை தேவையான அனைத்து சோதனை நடவடிக்கைகளையும் முறையாக மேற்கொள்வதன் பின்னர் மற்றும் பொது மக்களின் எதிர்வினைகளையும் கவனத்திற்கொண்டதன் பின்னர் இவ்வாறான கருத்திட்டத்திற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் பொருத்தமெனினும் இந்த முறைப்பாட்டாளருடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் கவனத்திற்கொள்ளும்போது மேலே குறிப்பிடப்பட்டவாறு பிரதிவாதி உரிய முறையில் செயற்படத் தவறியுள்ளதுடன் பாரிய தொகையொன்றை செலவுசெய்து கருத்திட்டத்தின் பணிகளை ஆரம்பித்ததன் பின்னர் பல்வேறு திருத்த முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ள விடயத்தை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

பிரதிவாதி **2010.09.06** ஆம் திகதி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்து (Environmental Approval) **2019. 06.03** இந்தக் கருத்திட்டத்துடன் தொடர்புடைய திருத்தப்பட்ட இடங்கள் பொருத்தமற்றவையெனத் தீர்மானித்துள்ளார். அதாவது, கருத்திட்டத்துடன் தொடர்புடைய இடங்கள் பொருத்தமானதா? இல்லையா? என்பதனைத் தீர்மானிப்பதற்கு சுமார் 10 வருட காலத்தை எடுத்துள்ளார். இலங்கை போன்ற சிறிய நாடொன்றில் இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுப்பதற்கு இந்தளவு காலம் எடுப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு பாதிப்பு ஏற்படுவதுடன், செலவு செய்யப்படும் பணத்தின் பெறுமதிக்கும் இவ்வாறான நிலைமைகள் தாக்கம் செலுத்தியுள்ளதனை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

அதற்கிணங்க, சுமார் 10 வருட காலத்தை விரயமாக்கியதன் பின்னர் பிரதிவாதிகளாலேயே முன்மொழியப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட இடங்கள் பொருத்தமற்றவையெனத் தீர்மானித்து அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்பட்ட இறுதித் தீர்மானத்தினால் முறைப்பாட்டாளருக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், அத்தோடு முக்கியமாக சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட சில அரச நிறுவனங்களின் செயற்பாடற்ற நிலைமை, மந்த கதியில் நடவடிக்கை மேற்கொள்ளல், முறையான நடைமுறைகளின் அடிப்படையில் செயலாற்றாமை போன்ற விடயங்கள் ஊடாக இலங்கை அரசியலமைப்பின் 12 (1) உறுப்புரை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சட்டத்தை அமுல்படுத்தல் மற்றும் பாதுகாப்பு என்பன நீதியானதாக இருத்தல் வேண்டுமென்ற அடிப்படை உரிமையை பிரதிவாதிகள் மீறியுள்ளதாகத் தீர்மானிக்கின்றோம்.

அத்தோடு, முறைப்பாட்டாளருக்கு இலங்கை அரசியலமைப்பின் 14 (1) (எ) உறுப்புரை ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளும் பிரதிவாதிகளின் நடவடிக்கை காரணமாக மீறப்பட்டுள்ளதாகத் தீர்மானிக்கின்றோம்.

எனவே, ஆணைக்குழு கீழுள்ளவாறு பரிந்துரைகளை முன்வைக்கின்றது.

01 முறைப்பாட்டாளருக்கு ஏற்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பாக மத்திய மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் அதில் பணியாற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய அமைச்சின் செயலாளர் இது தொடர்பான விசாரணையை மேற்கொண்டு உரியவர்களுக்கு எதிராக பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

02 முறைப்பாட்டாளருக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை மதிப்பீடு செய்து முறைப்பாட்டாளருக்கு போதுமானளவிலான நட்டஈட்டை செலுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2024.09.26 ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் பரிந்துரையை நடைமுறைப்படுத்தி அது தொடர்பான அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 15 (7) ஆம் பிரிவின் பிரகாரம், பிரதிவாதிகளுக்கு அறியத் தருகின்றோம்.

அத்துடன், இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டிய தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் இந்தப் பரிந்துரையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக முறைப்பாட்டாளரும் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டுமென்பதோடு, அந்தத் தேதிக்கு முன்னர் தொடர்புடைய அறிவித்தலை மேற்கொள்ளாவிட்டால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்பட மாட்டாதெனவும் மேலும் அறியத் தருகின்றோம்.

உயர் நீதிமன்ற நீதிபதி (முன்னாள்)
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஆணையாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

**பிரதிகள்**

01. கௌரவ சுற்றாடல்துறை அமைச்சர் - சுற்றாடல்துறை அமைச்சு
02. செயலாளர், சுற்றாடல்துறை அமைச்சு
03. தலைவர், பூகற்பவியல் ஆய்வு சுரங்கப் பணியகம்
04. தலைவர், பேண்தகு சக்தி அதிகார சபை
05. தலைவர், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

**<u>பரிந்துரை இலக்கம் 05</u>**

**<u>முறைப்பாட்டாளர்</u>**

*ருக்ஷன் பெர்னாண்டோ*
*3/4 கமுனு மாவத்தை, அட்டிடிய,*
*தெஹிவளை.*

***<u>பிரதிவாதி:</u>***

*கடற்படை தளபதி*
*இலங்கை கடற்படை,*
*கடற்படை தலைமையகம், கொழும்பு,*
*இலங்கை.*

***<u>முறைப்பாட்டு இலக்கம் : HRC/K1/015/2021</u>***

***முறைப்பாட்டின் சுருக்கம்***

*முறைப்பாட்டாளர் 2021 மார்ச் 5ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் (HRCSL) முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தார். அதில், அரசியலமைப்பின் 14(1)(h)ஆம் பிரிவின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள தன்னுடைய நகர்வதற்கான சுதந்திரம் மீறப்பட்டுள்ளதாக கூறினார்.*

*முறைப்பாட்டாளர், தன்னுடன் இரண்டு பிற பத்திரிகையாளர்கள் கூட 2021 மார்ச் 5ஆம் திகதியிலிருந்து முலாங்காவில் இரணைமதநகருக்கு சென்று, பின்னர் இரணைத்தீவு செல்வதற்காக காலை நேரத்தில் வந்ததாக கூறினார். எனினும், அந்த சமயத்தில் இருந்த இலங்கை கடற்படையின் சோதனைக்கூடத்தில், முறைப்பாட்டாளர் மற்றும் மற்ற இரண்டு நபர்களுக்கும் படகில் ஏறி தீவிற்கு செல்வது தடைக்கப்பட்டது. இதனால், தனது நகர்வதற்கான சுதந்திரம் மீறப்பட்டதாக முறைப்பாட்டாளர் கூறினார்.*

*இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டம் பிரிவு 15இன் கீழ் தகுந்த பரிந்துரைகளைச் செய்யவும், தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதை அங்கீகரிக்கவும் ஆணைக்குழுவை அழுத்தமாகக் கோரினார். மேலும், இரணைத்தீவுக்கு செல்லவேண்டிய பயணச் செலவுக்காக நட்ட ஈடாகவும் இழப்பீடு வழங்குமாறு கோரினார்.*

***யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்***

**1. *இலங்கை கடற்படை தலைமையகத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கை***

*யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் வழியாக, முறைப்பாட்டாளர் செய்த முறைப்பாட்டை முன்னிட்டு இலங்கை கடற்படை தலைமையகத்திலிருந்து ஒரு அறிக்கையை மனித உரிமைகள் ஆணைக்குழு* (HRCSL) *கோரியது.*

*பிராந்திய ஒருங்கிணைப்பாளர் விசாரணை மேற்கொண்டது:* (a) *கடற்படையினர் ஏதேனும் குடிமக்களை இறானைத்தீவுக்குள் நுழைய மறுத்ததா; மற்றும்* (b) *இவ்வாறு மறுத்திருந்தால், அதன் சட்ட அடிப்படை என்னவென்பது.*

*இலங்கை கடற்படை தளபதியின் பெயரில் அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம்,* 2021 *மார்ச்* 16 *ஆம் திகதி, இலங்கை கடற்படை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தியது, இலங்கை கடற்படை தலைமையகம் மற்றும் வட மத்திய கடற்படை பகுதி (இறானைத்தீவின் கடற்படை பகுதி) இடையே 'தொடர்பு பிழை' ஏற்பட்டது எனவும், எந்த ஊடகவியலாளர்களும் குறித்த தீவிற்கு செல்ல மறுக்கப்படவில்லை எனவும் கூறியது. மேலும், எதிர்காலத்தில் எந்த ஊடகவியலாளர்களும் குறித்த தீவிற்கு செல்ல விரும்பினால், அவர்கள் இலங்கை கடற்படைக்கு தகவல் கொடுத்து, கடற்படையின் உதவியுடன் பயணம் மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்தது.*

**2. *கிளிநொச்சி மாவட்ட செயலாளர் மத்தியிலிருந்து பெறப்பட்ட அறிக்கை***

*யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் மூலம், கிளிநொச்சி மாவட்ட செயலாளரிடமிருந்து ஒரு அறிக்கையை மனித உரிமைகள் ஆணைக்குழு* (HRCSL) *கோரியது. குறித்த அறிக்கையில், பூநகரி பிரதேச செயலாளரின் தகவலின்படி, இறானைத்தீவைச் சேர்ந்தோர் அல்லாதவர்கள் இறானைத்தீவுக்குள் நுழைய விரும்பினால், அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலாளரிடமிருந்து அனுமதி பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்ந்து மாவட்ட செயலாளரிடமிருந்து விசாரித்தது:* (a) *இறானைத்தீவைச் சேர்ந்தவர்களுக்கு இறானைத்தீவை விட்டு வெளியேறுவதற்கு எந்தவிதத் தடைகளும் உள்ளனவா;* (b) *இறானைத்தீவைச் சேர்ந்தவரல்லாதவர்கள் இறானைத்தீவுக்குள் நுழைய எந்தவிதத்*

தடைகளும் உள்ளனவா; மற்றும் (c) இவ்வாறு இருந்தால், அவற்றின் அடிப்படை என்னவென்பது.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் இதற்கு பதிலளித்தது:

1. இறானைத்தீவைச் சேர்ந்தவர்களுக்கு இறானைத்தீவை விட்டு வெளியேறுவதற்கு எந்தவிதத் தடைகளும் இல்லை.

2. 2021 பிப்ரவரி 14 ஆம் திகதி இறானைத்தீவில் 'ஏற்றுமதி கிராமம்' தொடங்கும் முயற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது, மற்றும் அதில் பங்கேற்க விரும்பும் இறானைத்தீவைச் சேர்ந்தவரல்லாதவர்கள் கடற்படையின் போக்குவரத்து சேவைகளைப் பெற வேண்டுமானால், இலங்கை கடற்படைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. இவ்வாறான சூழ்நிலைகளில் மட்டுமே, இறானைத்தீவைச் சேர்ந்தவரல்லாதவர்கள் கடற்படைக்கு பயண நேரத்தைத் தெரியப்படுத்த வேண்டும் எனவும், இதைத் தவிர, இறானைத்தீவுக்குச் செல்லுவதற்கான வேறு எந்தத் தடைகளும் இல்லை எனவும் தெளிவுபடுத்தப்பட்டது.

3. இறானைத்தீவில் காவல் நிலையம் இல்லாத காரணத்தால், இலங்கை கடற்படை சட்டவிரோத செயல்பாடுகளைப் பொறுத்து எச்சரிக்கையுடன் இருப்பதாகவும், எனவே, இறானைத்தீவைச் சேர்ந்தவரல்லாதவர்கள் இறானைத்தீவுக்குள் நுழைய விரும்பும்போது, அவர்கள் அடையாளத்தைச் சரிபார்க்கும் நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் தெரிவித்தது.

***முறையீட்டாளர் வெளியிட்ட விளக்கங்களின் ஆவணங்கள்***

2021 மார்ச் 16 ஆம் தேதி இலங்கை கடற்படையின் கட்டளையாளர் சார்பில் வெளியிடப்பட்ட விளக்கங்களுக்கு பதிலளித்து, முறையீட்டாளர் 'தகவல் தொடர்பு குறைபாடு' குறித்த விளக்கம் வழங்கப்படவில்லை என்றும், இந்த 'தகவல் தொடர்பு குறைபாடு' காரணமாக தன்னால் 2021 மார்ச் 5 ஆம் தேதி இளங்கை கடற்படையின் வட மத்திய கடற்படைத்துறை அதிகாரிகளால் இரணைத்தீவு செல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.
மேலும், முறையீட்டாளர், சம்பவம் நடந்த அதே நாளில் இரண்டு பிரபல ஊடகங்களில் இலங்கை கடற்படை அதிகாரப்பூர்வ பேச்சாளர் மேற்கொண்ட கருத்து, இலங்கை கடற்படை உறைவிடர்களை மட்டுமே தீவிற்கு அனுமதித்தது என்றும், அதனால் இல்லாதவர்களை அனுமதிக்கவில்லை என்பதை குறிப்பிட்டதாக

சுட்டிக்காட்டினார். மேலும், ஒரு பத்திரிகையாளர் கூறிய நேரடி சாட்சியத்தை மேற்கோளிடுகையில், இலங்கை கடற்படையினர் மாவட்டச் செயலாளரின் பட்டியலைப் பின்பற்றி, தீவில் உறைவதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

**மூலதனத்தின் கருத்தாக்கம்**

இயங்கும் சுதந்திரம் ஒரு அடிப்படை மனித உரிமையாகும், இது சர்வதேச மனித உரிமை சட்டத்தினாலும் மற்றும் இலங்கை அரசியலமைப்பு சாசனம் பிரிவு 14(1)(h) என்பதினாலும் அங்கீகரிக்கப்பட்டது.

சர்வதேச குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த உடன்படிக்கை (ICCPR) பிரிவு 12 இயங்கும் சுதந்திரத்தை விவரமாகக் குறிப்பிடுகிறது. யுனைடெட் நேசன்ஸ் மனித உரிமைகள் குழு பொது கருத்து எண் 27 இல் இந்த சுதந்திரத்தின் பரந்த அளவைக் குறிப்பிட்டுள்ளது. 'ஒரு மாநிலத்தின் முழு பரப்பிலும் சுதந்திரமாக நகரும் உரிமையை' இந்த உரிமை குறிக்கின்றது, மேலும் இந்த உரிமை 'பகுதி வரையறுக்கப்பட்ட பகுதியில் நுழையவோ அல்லது தங்கவோ தடுப்பதைத் தடுக்கின்றது'. மேலும், இந்த உரிமையை அனுபவிப்பது 'நகர அல்லது ஒரு இடத்தில் தங்குவதற்கான எந்தவொரு குறிப்பிட்ட நோக்கத்தையோ அல்லது காரணத்தையோ பொறுத்து இருக்கக்கூடாது.

ICCPR படி, இயங்கும் சுதந்திரத்தை நியாயமான சூழல்களில் மட்டுமே கட்டுப்படுத்த முடியும், அதாவது கட்டுப்பாடு சட்டத்தால் வழங்கப்பட்டிருக்க வேண்டும், மற்றும் ICCPR பிரிவு 12(3) இல் குறிப்பிடப்பட்டுள்ள நீதிசார்ந்த சுவாரஸ்யத்தைப் பாதுகாக்க அவசியமாக இருக்க வேண்டும். எனவே, பொது கருத்து எண் 27 இல் மனித உரிமைகள் குழு தெளிவுபடுத்தியுள்ளதைப் போல, இயங்கும் சுதந்திரத்தின் மீது எந்தவொரு கட்டுப்பாடும் தெளிவான சட்ட அடிப்படையில் இருக்க வேண்டும் மற்றும் மக்கள் நலன், பொது ஒழுக்கம் அல்லது பிறரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாக்கவும் அவசியமான மற்றும் சமநிலையானதாக இருக்க வேண்டும், மேலும் ICCPR இல் உள்ள பிற உரிமைகளுடன் இணக்கமாக இருக்க வேண்டும்.

இலங்கை அரசியலமைப்பின் கீழ், பிரிவு 14(1)(h)யால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமை பிரிவு 15(6) மற்றும் (7) இல் வரையறுக்கப்படலாம். இயங்கும் சுதந்திரத்தின் மீது எந்தவொரு கட்டுப்பாடும் 'சட்டம்' மூலம் இருக்க வேண்டும். மேலும், தாவநீத்தன் மீதான வழக்கு (2003) 1 ஸ்ரீ எல் ஆர் 74 இல் உச்ச நீதிமன்றம் 'சட்டம்' என்பது 1947ஆம் ஆண்டின் பொது பாதுகாப்பு ஒழுங்கின் கீழ் வெளியிடப்பட்ட விதிகளை மட்டுமே உள்ளடக்கியதாக விளக்கமளித்துள்ளது.

அரசியலமைப்பின் பிரிவு 15(6) மற்றும் (7) இல் உள்ள இயங்கும் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாட்டிற்கான நீதிசார்ந்த அடிப்படைகள் தேசிய பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு மற்றும் பொது ஆரோக்கியம் அல்லது ஒழுக்கம் மற்றும் பிறரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை பாதுகாப்பது ஆகியவற்றில் உள்ளடங்குகின்றன.

***<u>வடிவேலு மீதான வழக்கு (SC (F.R.) No. 44/2002) யில், நீதிபதி பெர்னாண்டோ அவர்கள்:</u>***

'இந்த வழக்கில்' பயணிக்க சுதந்திரத்தின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஒரு வெளிநாட்டிற்கு பயணத்தை அனுமதிக்க விசா பெறுவதற்கான நடைமுறைகளுடன் ஒப்பிடத்தக்கவை, அனுமதி வழங்கப்படும் என்று உறுதி அளிக்காமல். மொத்தத்தில், அவை 14(1)(h) பிரிவின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட விண்ணப்பதாரரின் இயங்கும் மற்றும் வசிக்கும் சுதந்திரத்தின் மீது முக்கியமான கட்டுப்பாடுகளாக இருந்தன' என்று கூறினார். அவர் கூறினார்: 'தேசிய பாதுகாப்பின் சுவாரஸ்யத்திற்காக இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாக எதிராளியின் வாதத்தில் வலிமை இருக்கிறது மற்றும் அந்த நோக்கத்திற்கு நியாயமாக அவசியம். எனினும், பிரிவு 15(7) இல் கூறியபடி, அந்தக் கட்டுப்பாடுகள் ஒரு சட்டத்தால் அல்லது பொது பாதுகாப்பை சார்ந்த சட்டத்தின் கீழ் விதிகள் மூலம் விதிக்கப்பட வேண்டும். ஆகவே, பயண அனுமதி முறைமை பிரிவு 15(7) இல் அங்கீகரிக்கப்படாத கட்டுப்பாட்டாகும்.'

எனவே, இந்த வழக்கில், பயண அனுமதி முறைமை பிரிவு 15(7) இல் அங்கீகரிக்கப்படாததைக் கண்டறிந்தது.

தற்போதைய முறைப்பாட்டிற்கு இதே தர்க்கத்தைப் பயன்படுத்தி, 2021 மார்ச் 5 ஆம் தேதி முறைப்பாட்டாளரின் இயங்கும் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடு பிரிவு 14(1)(ஏ) மற்றும் பிரிவு 15(6) மற்றும் (7) இல் பொருந்தாததாக இருப்பது தெளிவாக உள்ளது, ஏனெனில் அது 'சட்டத்தால்' வரையறுக்கப்படவில்லை. இலங்கை கடற்படை எந்தவொரு சட்டத்தின் கீழும் அல்லது பொது பாதுகாப்பு ஒழுங்கின் கீழ் ஜனாதிபதி வெளியிட்ட அவசர நிலை விதிகளின் கீழும் அதிகாரமளிக்கப்பட்டவராக இருப்பதில்லை.

2021 மார்ச் 16 ஆம் தேதியிட்ட கடிதத்தில், முறைப்பாட்டாளரின் ஈரணைத்தீவில் நுழைவதைத் தடுக்கும் சூழல்களை விளக்க respondent எவரும் எந்தவொரு சட்ட நடைமுறைகளையும் மேற்கொள்ளவில்லை. மேலும், ஈரணைத்தீவிற்கு பயணம்

*செய்ய விரும்பும் பத்திரிகையாளர்கள் இலங்கை கடற்படையை அறிவிக்க வேண்டும் என்று கூற* respondent *எவரும் எந்தவொரு சட்ட நடைமுறைகளையும் மேற்கொள்ளவில்லை.*

Respondent *எவரும் முறைப்பாட்டாளரின் இயங்கும் சுதந்திரம் 'தொடர்பு சிக்கல்' காரணமாக தடுக்கப்பட்டது என்று ஒப்புக்கொண்டது, மற்றும் முறைப்பாட்டாளரின் ஈரணைத்தீவிற்கு நுழைவில் எந்தவொரு சட்ட கட்டுப்பாடுகளும் இல்லையெனவே ஒப்புக்கொண்டது.*

*முறைப்பாட்டாளரின் இயங்கும் சுதந்திரத்தை நிர்வகிக்க அல்லது ஒழுங்குபடுத்த இலங்கை கடற்படைக்கு எந்தவொரு சட்டமும் அனுமதிக்கப்படாத நிலையில், 'தொடர்பு சிக்கல்' குறித்த எந்தவொரு விளக்கத்திற்கும் மாறாக, முறைப்பாட்டாளரின் ஈரணைத்தீவில் நுழைவு தடைவிதிக்கப்படாததால், முறைப்பாட்டாளரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன.*

*எனவே, கமிஷன்* 2021 *மார்ச்* 5 *ஆம் தேதி முறைப்பாட்டாளரின் அரசியலமைப்பு பிரிவு* 14(1)(*ஏ*) *உடன்பட உரிமை மீறப்பட்டுள்ளதாக கண்டறிகிறது.*

*முறைப்பாட்டாளர் தனித்தனியாக தனது அடிப்படை உரிமையான கருத்து சுதந்திரம் மீறப்பட்டதாகக் குற்றம்சாட்டினாலும், கருத்து சுதந்திரம் பற்றிய உரிமையை பரிசீலிக்க கமிஷன் முடிவு செய்யவில்லை, ஏனெனில் முறைப்பாட்டாளர் தனது இயங்கும் சுதந்திரத்தின் மீதான தடையை விமர்சிக்க சுதந்திரமாக இருந்தார். மேலும், இந்த வழக்கில் இழப்பீடுகள் மற்றும்/அல்லது செலவுகளை வழங்குவது பொருத்தமற்றதாக கமிஷன் கருதியது.*

***பரிந்துரைகள்***

*குடிமக்களின் இயந்திரச் சுதந்திரத்தை மீறக் கூடிய எதிர்கால சம்பவங்களைத் தவிர்க்க வேண்டிய நிலை காரணமாக, இவ்வினையை சமரசம் அல்லது மன்றத்துக்கு அனுப்புவது பொருத்தமற்றது என்று ஆணையம் கருதுகின்றது. எனவே, பதிலளிக்ககூடியவருக்கு சில பரிந்துரைகளை வழங்க வேண்டும்.*

*மனித உரிமைகள் ஆணைய சட்டத்தின் பிரிவு* 15(3)(c) *மற்றும்* (4) *ன் படி, இலங்கை கடற்படை தளபதிக்கு பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன:*

a) *இலங்கை குடிமக்கள் அல்லது முறைப்பாட்டாளர்கள் இரணைத்தீவுக்கு செல்ல வேண்டிய எந்தத் தடையையும் (முந்தய அனுமதி அல்லது முந்தய அறிவிப்பு பெற வேண்டும் என்ற தேவையை உட்பட) விதிக்காதீர்கள், இத்தகைய தடைகள்*

அரசியலமைப்பு அம்சம் 15(6) மற்றும் (7) ன் படி 'சட்டம்' ஆக இருக்க வேண்டும்;

b) வடமத்திய கடற்படை பகுதிக்கு உரிய அதிகாரிகளுக்கு, எவ்விதத் தடையும் இல்லாமல், இலங்கை குடிமக்கள் அனைவருக்கும் இரணைத்தீவுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று ஒழுங்கு வட்டத்தை எழுதித் தருங்கள்;

c) இத்தகைய ஒழுங்கு வட்டத்தின் பிரதியை மனித உரிமைகள் ஆணையத்திற்கு வழங்குங்கள்.

d) இப்பரிந்துரைகளைப் பெற்ற 30 நாட்களுக்குள், பரிந்துரை a), b) மற்றும் c) களை அமுல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மனித உரிமைகள் ஆணையத்திற்கு அறிக்கையிடுங்கள்.

தவிசாளர் - உச்ச நீதிமன்ற நீதிபதி - ஓய்வுநிலை
இலங்கை மனித உரிமை ஆணைக்குழு

ஆணையாளர் - மூத்த வழக்கறிஞர்
இலங்கை மனித உரிமை ஆணைக்குழு

**பிரதிகள்:**

01. அமைச்சர்
இராணுவ அமைச்சகம்
இராணுவ தலைமையகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர.

02. பிராந்திய ஒருங்கிணைப்பாளர்
மனித உரிமை ஆணைக்குழு பிராந்திய மையம்,
யாழ்ப்பாணம்